பக்கங்கள்: 24
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 | கதிர் 71 | தை 23ஆம் நாள் | புதன்கிழமை | 06 பெப்ரவரி 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

## பொறுப்புக்கூறலில் இலங்கை நத்தை போன்று நகர்கிறது

### சாடுகிறார் ஐ.நா. ஆணையாளர்

கொழும்பு, பெப். 6
பொறுப்புக்கூறல் செயல் முறையில் இலங்கை வேகமான முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பசெலெட் அம்மையார் அதிருப்தி வெளியிட்டுள்ளார். ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் >> 21



## ரணில் அரசின் ஆட்சி எப்போதும் கவிழலாம்

### மகிந்த எச்சரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 6
எதிரணியில் நாம் இருக்கும் போது எந்த நேரத்தில் வேண்டுமானாலும் தற்போதைய ரணில் அரசின் ஆட்சி கவிழலாம். மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த அரசையே அண்மையில் கவிழ்த்தோம். மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாமல் தொங்கிக் கொண்டிருக்கும் இந்த அரசைக் கவிழ்ப்பது எமக்கு கடினமல்ல. இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச. >> 21

## கள்ள நோட்டு, கஞ்சா பீடியுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 6
போலி நாணயத் தாள்கள், கஞ்சா அடங்கிய பீடி வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டுக்களில் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
ஆயிரம் ரூபா பொறிக்கப்பட்ட போலி நாணயத்தாள்கள் இரண்டை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும், கஞ்சா பீடியை நுகர்ந்தனர் >> 21

## பஸ் நிலையத்தில் தாலி அறுத்த சந்தேகநபர் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்துக்குள் நின்ற பெண்ணின் 7 பவுண் தாலிக் கொடியை அறுத்தார் என்ற குற்றச்சாட்டில் 19 வயது இளைஞனை பொதுமக்கள் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். >> 21



## தமிழக மீனவர்களுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 6
எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் நால்வரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.
தமிழகம் இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி மீன் பிடிக்க விசைப் படகில் புறப் >> 21

## மின்கட்டணத்தைத் தற்போது அதிகரிக்கும் எண்ணமில்லை

### அமைச்சர் ரவி தெரிவிப்பு

கொழும்பு, பெப்6
மின் கட்டணத்தில் எந்த அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட மாட்டாது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆலோசனையின் கீழ் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் மட்டுமே அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும். இவ்வாறு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க >> 21

## ரணிலை நம்பிய கூட்டமைப்பு இப்போது நட்டாற்றில் நிற்கிறது

### பரிகசிக்கிறார் மகிந்த

கொழும்பு, பெப். 6
நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவோம். அவர்கள் ஒத்துழைக்காவிட்டால் தமிழ் மக்களுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவோம். கடந்த காலங்களில் கூட்டமைப்பு இனப் பிரச்சினைக்கான பேச்சைக் குழப்பியது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
தமிழ்ப் பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் ஆகியவற்றின் >> 21

## மைத்திரிபாலவின் இன்றைய யாழ். பயணம் ஒத்திவைப்பு

### சுகவீனம் காரணமாம்

யாழ்ப்பாணம், பெப். 6
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு இன்று மேற்கொள்ளவிருந்த பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. >> 20

## கூட்டு அரசு யோசனையை நிராகரிக்க வேண்டும் கரு

### வலியுறுத்துகின்றது பெரமுன

கொழும்பு, பெப்.6
கூட்டு அரசு அமைப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றச் செயலர் நாயகத்திடம் சமர்ப்பித்துள்ள பிரேரணையை சபாநாயகர் முழுமையாக நிராகரிக்கவேண்டும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஒரு உறுப்பினருடன் >> 21

see more news in
newuthayan.com

## சம்பந்தனுக்கு நேற்று 86ஆவது பிறந்த நாள்

### மைத்திரி, ரணில், மகிந்த, கரு தொலைபேசியில் வாழ்த்து

கொழும்பு, பெப்.6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை >> 20

## கொல்லப்பட்ட யாழ்.பல்கலை மாணவர் சம்பவதினமன்று போதையில் இல்லை!

### யாழ்.நீதிமன்றில் சாட்சிகள் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் இருவரும், படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று மது போதையில் இருக்கவில்லை என்று வழக்கின் சாட்சியங்கள் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நேற்றுச் சாட்சியம் அளித்தனர்.
கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியை அண்மித்து 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இது பற்றிய வழக்கின் சுருக்க முறையற்ற விசாரணை யாழ்ப்பாண நீதிவான் மன்றில் >> 21

## இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6
அமெரிக்க டொலரின் பெறுமதிக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி வளர்ச்சியடைந்துள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.
இலங்கை மத்திய வங்கியால் நேற்று >> 21

## புதிய அரசமைப்பு என்பது மக்களுக்கு தூக்குக் கயிறாம்

### கோத்தாவின் அமைப்பு கூறுகிறது

கொழும்பு, பெப்.6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுமந்திரன், சம்பந்தன் ஆகியோர் நாட்டைப் பிரிக்கும் அரசமைப்பை உருவாக்குவதில் தீவிரமாக உள்ளனர். இந்த அரசின் மூலம் அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்ள முடியும் >> 20





## மூடுந்தில் கடத்தப்பட்ட முதிரை குற்றிகள் மீட்பு

*சந்தேகநபர் கைதாகி விளக்கமறியலில்*

யாழ்ப்பாணம், பெப். 6
மூடுந்தில் கடத்தப்பட்ட 61 முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் அவர் கைது செய்யப்பட்டார். விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்று ஊடாக விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளார் என்று மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-74)

## யாழ். போதனா தாதியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.6**
**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தாதிய அலுவலர்கள் நேற்று அடையாளப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். தமக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் இணையத் தளங்களில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராட்டம் நடத்தப்பட்டது என்று அவர்கள் தெரிவித்தனர்.**

அதேவேளை. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடைபெற்றது என்று தெரிவித்து. தாதிய அலுவலர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையில் இணையத்தளங்களில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். அவ்வாறான சம்பவம் நடக்கவில்லை என்றும் அவர் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் பணியாற்றும் இரு தாதிய அலுவலர்களின் செயற்பாட்டைச் சுட்டிக்காட்டி இணையத்தளங்களில் நேற்றுமுன்தினம் செய்திகள் வெளியாகியிருந்தன. அது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரிடம் கேட்டபோது. அவர் அதனை உறுதி செய்தார் என்றும் அந்த இணையத்தளங்கள் குறிப்பிட்டிருந்தன. அந்தத் தகவல்கள் உண்மை அற்றவை என்றும், தாதிய அலுவலர்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் அந்தச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் யாழ்ப்பாணம் தாதிய அலுவலர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர். அதைக் கண்டிக்கும் வகையிலேயே அவர்கள் நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தினர்.

தாதிய அலுவலர்களின் பணிப் புறக்கணிப்பை அடுத்து. நேற்று மதியம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

அதில் அவர் தெரிவித்ததாவது

இந்த மருத்துவமனை 500க்கும் மேற்பட்ட தாதியர்கள் கடமையாற்றும் புனிதமான இடம். இங்கு கடமையாற்றுபவர்கள் புனிதமாகக் கடமையாற்றுகின்றனர். நோயாளர்களைக் கவனத்துடனும், பரிவுடனும் கவனிக்கின்றனர். இந்தத் தவறான செய்தியால் மருத்துவமனையின் சேவைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான தவறான செய்தியால் ஊழியர்களுக்கு மனச் சோர்வு ஏற்பட்டுச் சேவையில் தடங்கள் ஏற்பட்டுள்ளது. இங்கு பணியாற்றுபவர்களில் பெரும்பாலானவர்கள் பெண் தாதியர்களே. அவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தாதியர்கள் தவறிழைத்திருந்தால் அது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டால் முதலில் உள்ளக விசாரணை நடத்தப்படும். அப்படி எதுவும் நடைபெறாத நிலையில் இந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தாதியர்கள் மன உளைச்சல் காரணமாக சேவையாற்றுவதில் தடைகளை எதிர்கொண்டுள்ளனர். இந்தச் செய்தி வெளியானமை தொடர்பில் உரிய விசாரணை நடத்தி அந்தச் செய்தி வெளியிடப்பட்டமை தொடர்பாகவும், அதன் பின்னணி தொடர்பாகவும் விசாரணை செய்யப்பட வேண்டும். அண்மையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நோயாளி ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டமை தொடர்பில் நோயாளியின் உறவினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன. அதுவே திரிவு படுத்தப்பட்டது - என்றார். (எ-த8,37)

## நகைத் திருட்டு தொடர்பில் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.6
யாழ்ப்பாணம், அரியாலையில் நடந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 14 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரியாலை, பூமாங்குளத்தில் உள்ள வீடொன்றில் இருவாரங்களுக்கு முன்னர் திருட்டு நடைபெற்றிருந்தது. 16 பவுண் நகைகள் திருடப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய விசாரணைகள் முடுக்கி விடுப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று பூம்புகார் மற்றும் அரியாலையைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட நகைகளில் சில யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடை ஒன்றில் உருக்கப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-21,26)

## காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

*எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு*

யாழ்ப்பாணம், பெப்.6
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாக முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 மணி வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தள இளைஞர்கள் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் சமூகச் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், பெண்கள், ஊடகவியலாளர்கள், மாற்றுத்திறனாளிகள், மனித உரிமை ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் என அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் முடிவில் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி வடக்கு ஆளுநரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதிப் போரின்போதும், அதை அண்மித்த காலப் பகுதிகளிலும், இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட பலர் தற்போது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களைக் கண்டறிந்து தர வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந் இரண்டு வருடங்களையும் தாண்டி தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக வடக்கில் சமூக ஆர்வலர்கள், மக்கள், அரசியல்வாதிகள் எனப் பலரும் குரல்கொடுத்து வருகின்றனர். (எ-21,26)

## சுகாதார நடைமுறை மாநாடு

யாழ்ப்பாணம், பெப்.6
யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உயர் கல்வி, சுகாதார சக்தி தொழில்நுட்ப சபையும், சக்தி உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் மேற்கு நோர்வே பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் 'தூய்மையான சக்தி' மற்றும் சுகாதார நடைமுறை ஆகியவற்றுக்கான மாநாடு' இன்று புதன்கிழமை முதல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் மாண்புமிகு தொர்ப்ஜெர்ன் கொஸ்டபொசிதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டின் முதன்மை விருந்தினராக இலங்கை பல்கலைக்கழக மானிய கமிஷன் பிரதித் தலைவர் பேராசிரியர் பி.எஸ்.எம்.குணரத்ன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

## வீடு ஒன்றினுள் புகுந்த முதலை மடக்கிப் பிடிப்பு



யாழ்ப்பாணம், பெப். 6
வீடு ஒன்றுக்குள் உட்புகுந்த 12 அடி நீள முதலை ஒன்று மடக்கி பிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் உள்ள ஒலுமடுக் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று அதிகாலைவேளையில் 12 அடி முதலை உட்புகுந்துள்ளது.

இதன்போது அயலில் உள்ள சில நாய்கள் குரைத்துள்ளன. இருப்பினும் ஏதும் அவதானிக்கப்படவில்லை. அந்த நேரம் வீட்டில் '3 சிறுவர்கள் உட்பட ஐவர் இருந்துள்ளனர்.

இந்த நிலையில் காலையில் வழமை போன்று வீட்டார் எழுந்து தமது பணிகளில் ஈடுபட்டு சிறுவர்களும் பாடசாலை சென்ற நிலையில் வீட்டில் நிறுத்தி வைத்திருந்த காரின் கீழே ஓர் பெரிய உருவம் தெரிவதனை அவதானித்த வீட்டார் அதனை முதலை என இனம் கண்டுகொண்டனர். அதன் அளவை அவதானித்து அச்சமடைந்த நிலையில் உடனடியாக வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து இரு பகுதியினரும் இணைந்து குறித்த வீட்டுக்குச் சென்று நேற்று பகல் வேளையில் குறித்த முதலையை உயிரோடு மடக்கிப் பிடித்துச் சென்றனர். இதனால் அப் பகுதியில் சிறு பதற்றம் நிலவியது. (ஐ-105,ரி3)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 6
தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் செல்வநாயகம் சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் சண்முகநாதன் ஜெயந்தன், மதிப்புறு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு உதவிப் பணிப்பாளர் கனகரத்தினம் கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ,5)

## காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு அமெரிக்காவே தீர்வு வழங்கவேண்டும்

*வவுனியாவில் இப்படிப் போராட்டம்*




வவுனியா, பெப். 6
இலங்கையின் சுதந்திர நாளான நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொட்டும் மழைக்கு மத்தியில் இந்தப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியறியும் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமானது கந்தசுவாமி ஆலயத்திலிருந்த ஆரம்பமாகி வவுனியா நகரின் ஊடாக போராட்டக் கொட்டகை நடைபெறும் இடத்தைச் சென்றடைந்தது.

ஆர்ப்பாட்டத்தின்போது எங்களது பிள்ளைகள் எமக்கு வேண்டும், அமெரிக்காவே எமது பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்ற கோசங்களை எழுப்பினார்கள். (ஒ.5,110)

# லியனகே பதவி விலகல்

கொழும்பு, பெப். 6
கட்டார் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் ஏ.எஸ்.பி.லியனகே பதவியிலிருந்து விலகியுள்ளதாக அறிவித்துள்ளார். முன்னதாக அவரை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்புமாறு உத்தரவிட்டார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. தாம் பதவி விலகல் கடிதத்தை அனுப்பியதாகவும், அரச தலைவர் அதனை ஏற்றுக்கொண்டார் என்றும், தம்மைத் திருப்பி அழைக்கவில்லை எனவும், ஏ.எஸ்.பி.லியனகே தெரிவித்துள்ளார்.
விரைவில் இலங்கைக்குத் திரும்பவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இராஜதந்திரியாகத் தனது அதிகாரபூர்வ பணிகள் முடிந்து விட்டதாகவும் கூறியுள்ளார்.
அண்மையில் ஆளுநர்கள் நியமனம் இடம்பெற்ற போது, ஏ.எஸ்.பி.லியனகேக்கு, ஆளுநர் பதவி வழங்கப்படும் என்று, எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அவருக்கு ஆளுநர் பதவி வழங்கப்படாததால், ஏமாற்றம் அடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



# மாலியில் உயிரிழந்த படையினரின் சடலங்கள் கொண்டு வரப்பட்டன

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த இரண்டு இராணுவ அதிகாரிகளினதும், சடலங்கள் இலங்கைக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் கொண்டு வரப்பட்டன.
மேஜர் ஜெயவிக்ரம, சார்ஜன்ட் விஜேகுமார ஆகிய இரண்டு அதிகாரிகளின் சடலங்களை ஏற்றிய சிறப்பு வானூர்தி, கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியது.
மாலியில் ஐ.நா. அமைதிப்படையின் தளபதி, லெப்.ஜெனரல் டெனிஸ் கிலெஸ்போர், ஐ.நா. கொடியால் போர்த்தப்பட்ட சடலங்கள் அடங்கிய பெட்டிகளை இலங்கை இராணுவத் தளபதியிடம் கையளித்தார்.
இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதி ஹனா சிங்கர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, மற்றும் படைத் தளபதிகள், அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.
வானூர்தி நிலையத்தில் படையினரின் உடல்களுக்கு இராணுவ மரியாதை அளிக்கப்பட்ட பின்னர், உடற்கூற்று பரிசோதனைக்காக நீர்கொழும்பு மருத்துவமனைக்கு சடலங்கள் கொண்டு செல்லப்பட்டன. (ஒ.5)



# கொள்ளைக் கும்பலை மடக்கினர் ஊரவர்கள்

## அலைபேசிகளில் தகவல் பரிமாறி வரணியில் சுற்றிவளைத்து அதிரடி

**யாழ்ப்பாணம், பெப். 6**
**வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திக் கொள்ளையிட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படும் மூவரில் இருவர் ஊரவர்களிடம் வசமாக மாட்டிக்கொண்டனர். கொள்ளை இடம்பெறுவதை அங்குள்ள சத்தம் சலசலப்பு மூலமாக உணர்ந்துகொண்டு அலைபேசியில் தகவல் வழங்கியதன் பயனாகக் கொள்ளையர்களைப் பிடிக்க முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.**

இந்தச் சம்பவம் தென்மராட்சி வரணி இயற்றாலைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.
சந்தேகநபர்கள் மூவரும் முகங்களை மூடிக் கட்டியவாறு வீட்டுக்குள் புகுந்து அச்சுறுத்தி, பொருள்களைக் கொள்ளையிட்டனர். நகை , பணம் தொடர்பில் தகவல் வழங்கவில்லை என்றுகூறிஅந்தக் குழுவினர் தாக்குதல் நடத்தினர்.
எனினும், சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தி வீட்டிலிருந்த 10 பவுண் நகைகள், ஒரு தொகுதி பணம் என்பனவற்றை எடுத்துள்ளனர்.
பின்னர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டனர்.
அங்கு இவ்வாறு சலசலப்பு வழமைக்கு மாறாகக் கேட்ட சத்தங்களால் அயலில் உள்ளவர்கள் உசாரடைந்தனர். சம்பவத்தை உணர்ந்து அலைபேசிகளில் ஊரிலுள்ள மேலும் பலருக்குத் தகவல் வழங்கினர். கொள்ளைக் குழு அந்த வீட்டிலிருந்து வெளியேறுவதற்கிடையில் ஊரவர்கள் அந்த வீட்டைச் சுற்றிவளைத்துக் கொண்டனர்.
இவை எவற்றையும் சற்றும் எதிர்பாராத கொள்ளைக்குழு அந்த வீட்டிலிருந்து வெளியேறியபோது ஊரவர்கள் மடக்கிப் பிடித்தனர்.
எனினும் ஒருவர் தப்பி ஓடிவிட்டார்.
அகப்பட்ட இருவரையும் உரியவாறு கவனித்த ஊரவர்கள் இறுதியில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் கொள்ளையர்கள் எனக் குற்றஞ்சாட் டப்பட்ட இருவரையும் கைதுசெய்து கொண்டு சென்றனர். தாக்குதலில் படுகாயமடைந்த ஜெ.பரமேஸ்வரி (வயது- 52) சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தப்பியோடியவர் இரு சங்கிலி, இரு காப்பு , இரு மோதிரம் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பனவற்றுடன் தப்பியோடியுள்ளார். பிடிபட்டவர்கள் இருவரும் நாவற்குழியைச் சேர்ந்தவர்கள். இருவரும் 22 வயதுடையவர்கள் என்றும் தப்பியோடியவர் மானிப்பாயைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. (த-105)




# சுதந்திர சதுக்கத்திலும் சுதந்திரநாளில் போராட்டம்

கொழும்பு, பெப். 6
இலங்கையின் 71 ஆவது சுதந்திர நாள் கொண்டாட்டங்கள் காலி முகத்திடலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடந்து கொண்டிருந்த போது, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில், அமைதி வழி எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.
இதில் பங்கேற்றிருந்தவர்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரும் அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.
வடக்கு, கிழக்கில் இராணுவப் பிடியில் உள்ள காணிகளை விடுவிக்க வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம் வேண்டாம், தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா ஊதியம் வழங்க வேண்டும், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய அட்டைகளையும் தாங்கியிருந்தனர். (ஒ.5)

# மின் தொடர்பில் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## மின்சார சபை முகாமையாளர் சிறிதரன் எம்.பியிடம் உறுதியளிப்பு

கிளிநொச்சி, பெப். 6
கிளிநொச்சியில் மின்சாரம் தொடர்பில் எதிர்கொள்ளும் பல பிரச்சினை களையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக தெரிவித்தார்.
இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் குணதிலக தலைமையிலான அலுவலர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், உப தவிசாளர் தவபாலன், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் மு.சிவமோகன், கரைச்சிப் பிரதேச சபையின் செயலர் க.கம்சநாதன், யாழ்ப்பாண மாவட்ட மின் அத்தியட்சகர் ஆதிரன், கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர் குகராஜ், கிளிநொச்சி மாவட்ட மின் பொறியியலாளர் பர்சாட் ஆகியோர் இது பற்றிக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.
கிளிநொச்சி இலங்கை மின்சாரசபையின் மின் வழங்கல் பிராந்தியக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது.
மின் கட்டணம் தொடர்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மின் இணைப்பு வழங்கப்படாத இடங்களுக்கு மக்களின் நன்மை கருதி மின் இணைப்பு விரைந்து வழங்கி வீடுகளுக்கு மின்னிணைப்பை வழங்குவதற்கான உடனடி நடவடிக்கை, நகர மின் விளக்குகளைச் சீராக ஒளிர வைத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கிராமங்களில் பலரது வீடுகளுக்கு இன்னமும் மின்னிணைப்பு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்குவது பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு அதனை இலவச மின்னிணைப்பாக வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நாமும் எம்மாலான பணிகளை முன்னெடுப்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறினார்.
கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், சந்தை வர்த்தகர்களுக்கான மின் கட்டணங்களைச் சீராக்குவது பற்றியும் ஒவ்வொரு கடைகளுக்கும் தனித்தனி மின்னிணைப்புக்களை வழங்குவது உட்படப் பல விடயங்களைக் கூறினார்.
இவற்றைக் கேட்டறிந்த இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் குணதிலக, அவற்றைப் பிரதேச சபை தமக்கு அடையாளங்காட்டி அறிவிக்கும் போது தாம் வீதிக்கு இடையூறாக வுள்ள மின்கம்பங்களை இடம்மாற்றி உடனடி நடவடிக்கை எடுக்கலாம். சந்தைக் கடை வர்த்தகர்களுக்கான மின்சாரம் வழங்குதல், கட்டணம் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்துவோம் என்று தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முன்வைத்த கோரிக்கைகளைச் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (த-426)

யாழ் மணக்கும்பான் வெள்ளைப்புற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
மகா கும்பாபிஷேகம் 2019.02.11

இன்று (06.02.2019)
புதன்கிழமை காலை 9.00 முதல் விநாயகர் வழிபாடு, அஸ்ட அனுக்ஜை, மஹா கணபதி ஹோமம், விநாயகர் அகவல் பாராயணம், பேரீதாபனம், பிரசாதம் வழங்கல். மாலை 5.00 மணிமுதல் கிராமசாந்தி, பிரவேசபலி, ரஷோக்ன ஹோமம், திசாஹோமம், வாஸ்து சாந்தி, யந்திரபூஜை, பிரசாதம் வழங்கல்.

புதிய நதியா
நகை மாடம்
இல.73,103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8397 / 222 3261

## களப் பயிற்சி நிறைவும் பரிசில்கள் வழங்கலும்

சாவகச்சேரி, பெப். 6
பொது சுகாதாரப் பரிசோதகர் பயிலுநர்கள் களப் பயிற்சி காலத்தில் மேற்கொண்ட செயற்றிட்டங்களின் நிறைவும், சிறுவர்களுக்கள் மத்தியில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலையில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளன், சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய பயிற்சி நிலைய மூத்த போதனாசிரியர் க.தெய்வேந்திரம், பயிற்சி நிலைய இணைப்பாளர் க.சதீஷ் .மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தி.கின்டஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பொது சுகாதார பரிசோதகர் பயிலுநர்கள் களப் பயிற்சி காலத்தில் வரணி கரம்பைக்குறிச்சிக் கிராமத்தில் செயற்றிட்டங்களை மேற்கொண்டனர்.பயிற்சிக் காலத்தில் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுவர்களுக்கான சுகாதாரத் திட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கிடையே சித்திரப் போட்டியும் நடத்தப்பட்டது. (ஐ-9)

## உசன் இராமநாதன் ம.வியின் புதிய அதிபர் சண்முகதாஸ்!

### கடந்த முதலாம் திகதிமுதல் அவர் கடமையை ஏற்றார்

தென்மராட்சி, பெப். 6
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக க.சண்முகதாஸ் கடந்த முதலாம் திகதி பொறுப்பேற்றுள்ளார். வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய த.சோதிலிங்கம் கடந்த ஓகஸ்ட் மாதம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்துக்கு அதிபராகச் சென்றதையடுத்து அதிபர் பதவி வெற்றிடமாகியது. கடந்த 31ஆம் திகதி வரை உபஅதிபரே அதிபருக்கான பதில் கடமைகளை மேற்கொண்டு வந்துள்ளார்.
உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டதையடுத்து மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை இரண்டாம் தரத்தைச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய க.சண்முகதாஸூம் அவர்களில் ஒருவர். அவர் கடந்த முதலாம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ம-9)

## கடலுக்குள் பாய்ந்தது பட்டா ரக வாகனம்

தென்மராட்சி, பெப். 6
இரும்புப் பாலத்தில் சில்லு சறுக்கியதில் பட்டா ரக வாகனம் ஒன்று கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் கைதடி கோப்பாய் பாலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
கைதடியிலிருந்து கோப்பாய் நோக்கிச்சென்ற வாகனம் பாலத்தைக் கடந்த போது சில்லுச் சறுக்கி அருகில் இருந்த தொலைபேசி கம்பத்தை உடைத்துக் கொண்டுகடலுக்குள் இறங்கியதுஎனத்தெரிவிக்கப்பட்டது. இதில் வாகன சாரதிக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## பொன்னாலையில் 65 வீடுகள் மக்களுடைய பயன்பாட்டுக்கு

யாழ்ப்பாணம், பெப். 6
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பொன்னாலைப் பகுதியில் 65 வீடுகள் மக்களிடம் விரைவில் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவித்தார் தேசிய வீடமைப்பு அதிகார மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன்.
வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பொன்னாலையில் பொன்னகர் வீடமைப்பு திட்டத்தின்கீழ் 65 வீடுகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்படவுள்ளன.
இந்த நிகழ்வுக்கு வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு பயனாளிகளிடம் கையளிக்கவுள்ளார். அன்றைய தினம் பொன்னகர் வீடமைப்பு திட்டம் குறித்த மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது. (ம-50)

# கொடிகாமத்தின் அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்குமாறு மனு

### சுமந்திரன் எம்.பியிடம் வழங்கப்பட்டுள்ளது

கொடிகாமம், பெப். 6
தமது பகுதி அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியமும் கொடிகாமம் வர்த்தக சங்கமும் இணைந்து மனு ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கையளித்துள்ளன.



இது பற்றிய கலந்துரையாடல் கொடிகாமம் பேருந்து நிலையத்துக்கு முன்பாகவுள்ள சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. அதன்போதே மனு வழங்கப்பட்டது.
வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் , வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் , சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், வர்த்தக சங்கத் தலைவர் சு.அருணாசலம், சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன், சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
தவிசாளர் வாமதேவன் அபிவிருத்தி தொடர்பான கோரிக்கையையும், வடமராட்சி கிழக்குபிரதேசசெயலர் க.கனகேஸ்வரன் 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரித்தால் தென்மராட்சி கிழக்கு மக்கள் தமது சேவைகளை மிக இலகுவாக பெற்றுக் கொள்ளலாம் என்றும் தொழில்நுட்ப கல்லூரி இந்தப் பகுதியில் இல்லாத காரணத்தால் அதனையும் பெற்றுத் தருமாறு விடுக்கும் கோரிக்கையும் கொண்டதாக மனு உள்ளது.
கொடிகாமம்சந்தை அமைக்க நிதி, நாவற்குழி, கேரதீவுப் பகுதியில் சுற்றுலா மையம் அமைக்க நிதி, 45 மயானங்களுக்கு கிணறு,
எரிகொட்டகை அமைப்பதற்கான நிதி, அடிப்படை வசதிகளற்ற நிலையில் இருக்கும் 97 சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கான நிதி, 3 ஆயுள்வேத வைத்தியசாலைகளின் மேலதிக செயற்பாட்டுக்கும் அபிவிருத்திக்குமான நிதி, 60 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாமல் காணப்படும் பதிவு செய்யப்பட்ட 3ஆயிரத்து 130 கிலோ மீற்றர் நீளங்கொண்ட 570 வீதிகளைத் திருத்தம் செய்வதற்கான நிதி ஆகியவற்றுக்கான நிதிகளைப் பெற்றுத் தருமாறும் அதில் கோரப்பட்டுள்ளது.
தென்மராட்சி பிரதேசத்தில் 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டு இயங்கும் பிரதேச செயலகத்தை ஜே/288 தொடக்கம் ஜே/319 வரை தென்மராட்சி மேற்குப் பிரிவாகவும், ஜே/320 தொடக்கம் ஜே/347 வரையான பிரிவுகளைத் தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் பிரதேச செயலகமாகப் பிரித்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.
மனுவைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்துத் தெரிவித்தார்.
பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அண்மையில் அது உறுதி செய்யப்பட்டது. பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கும் போது பிரதேச சபையும் இரண்டாகப் பிரியும். அது வேறொரு திட்டத்தினூடாக வந்த விடயம். அதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன என்று நினைக்கிறேன்.
வடக்கு கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமாக நிறைவேற்றுக் குழு ஒன்று நியமித்திருப்பதை அறிந்திருப்பீர்கள் - என்றார். (த-159)

## இலவச பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப்.6
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் சிறப்புத்துறை சார் இலவச பயிலுநர் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
சுகாதாரத்துறை, விடுதி மற்றும் சுற்றுலாத்துறை, கட்டுமானத் துறை, உந்துருளிவாகன(மோட்டார் வாகன) மற்றும் உற்பத்தித் துறை,விவசாயம் மற்றும் கால்நடைத்துறை, மின்னியல் மின்னணு மற்றும் தொலைத்தொடர்புத்துறை ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இதில் 16 வயதுக்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாண மாவட்ட அதிகார சபை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஸ்ணபாலன் அறிவித்துள்ளார். (ஐ)

## ரெலோ இயக்க வவுனியா மாவட்ட இளைஞர் அணி தெரிவு

வவுனியா, பெப். 6
வவுனியாவில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று கட்சியினர் தெரிவித்தனர்.
வைரவபுளியங்குளம் மாவட்டக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு இயக்கத் தலைவரும் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் இளைஞர் அணி செயலருமான சபா.குகதாஸ் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.
வவுனியா மாவட்ட இளைஞர் அணிச் செயலராக சு.சுகந்தன், துணைச் செயலராக ச.அபிஷேக் ஆகியோர் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் விஜயகுமாரன்., பிரதி அமைப்பாளர் நாகராஜன், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட இளைஞர் அணி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த-110)



# யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்!

யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளன என்று கல்விச் சமூகம் தெரிவித்தது.
நூலக உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர், சாரதி, கட்டட வேலை செய்பவர், மின் வேலை செய்பவர், பாதுகாப்பு அலுவலர், சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட 34 வகையான வேலைகளுக்கு சுமார் 50 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இது தொடர்பில் கல்லூரி நிர்வாகத்திடம் தொடர்புகொண்டு கேட்ட போது, 'கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்பித்தாருங்கள் என்று கல்வி அமைச்சின் அனைத்துக் கூட்டங்களிலும் கோரிக்கை முன்வைத்தோம். இறுதியாக வந்த மதிப்பீட்டுக் குழுவுக்கும் இதுபற்றித் தெரியப்படுத்தியுள்ளோம் ஆனால் இன்னமும் நடவடிக்கைஎடுக்கப்படவில்லை' - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7,50)

## நெல் தூற்றும் விசிறிக்குள் அகப்பட்டு ஒருவர் காயம்

சாவகச்சேரி, பெப்.6
நெல் தூற்றுவதற்கு இயக்கிய விசிறிக்குள் அகப்பட்டு குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் மிருசுவில் விடத்தற்பளையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகரன் (வயது- 53) என்ற குடும்பத்தலைவரே காயமடைந்தார். அறுவடை செய்யப்பட்ட நெல்லை சூடு மிதித்த பின் காற்றுக்காக பெரிய விசிறியை இயக்கியபோது இந்த விபத்து இடம்பெற்றது. காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

# வடலியடைப்பின் அபிவிருத்திக்கு சரவணபவன் எம்.பி. சிறப்புப் பணி

வலி. தென்மேற்கு, பெப். 6

பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 50 லட்சம் ரூபா வழங்கி அபிவிருத்தி செய்திருந்தார். இதனைவிட பண்டத்தரிப்பு இந்து, பண்டத்தரிப்பு மகளிர், சாந்தை சிற்றம்பலம் பாடசாலைகளுக்கும் வடலியடைப்பு கிராமத்தின் அபிவிருத்திக்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கி முன்னேற்றியிருந்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் இணைப்பாளரும் ஆசிரியருமான செ.பிரதாப் தெரிவித்தார்.

வடலியடைப்பில் மக்கள் பங்கேற்கும் அபிவிருத்தி பற்றிய கூட்டம் பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத் தலைவர் க. கந்தசாமி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக பிரதாப் கலந்துகொண்டு உரையாற்றினார்.

வடலியடைப்பு அயற் கிராமத்துடன் இணைக்கப்பட்டு இருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் முயற்சியால் தனி வட்டாரமாகக் கொண்டு வரப்பட்டது. வடலியடைப்பு கிராமத்தின் வீதிகள், ஆலயங்கள், சிறுவர் பூங்கா, வீதி விளக்குகள் எனப் பல அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளன. பல அபிவிருத்திகள் 2019 இலும் முன்னிறுத்தப்பட்டுள்ளன. நவீன சிறுவர் பூங்காவுக்காக 30 லட்சம் ரூபாவை 2019 இல் உருவாக்க நிதி ஒதுக்கியுள்ளனர். இளைஞர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் தலைமை தாங்கிய கந்தசாமி தெரிவிக்கையில், வடலியடைப்பு தமிழ் அரசுக் கட்சியின் கோட்டை. ஏனைய கட்சிகள் இங்கு கால் ஊன்ற முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் இதுவரை ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையில் நிதி ஒதுக்கி எமது பிரதேச வளர்ச்சிக்கு அபிவிருத்தி செய்துள்ளனர்.

தேங்காய் மற்றும் நல்லெண்ணெய் உற்பத்திக்கென்று கைத்தொழிற்சாலைக்கு 50 லட்சம் ரூபாவை சரவணபவன் முன்னர் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் 20 லட்சம் ரூபாவை வழங்கி அபிவிருத்தி செய்தார் - என்றார்.

வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் உரையாற்றுகையில், பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்கும் போது அந்தப் பகுதியில் பங்கு கொள்ளும் சமூகமட்ட மக்களும் ஒருங்கிணைந்த வகையில் பங்கெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்களான அனுஷன், ஜிப்ரிக்கோ மற்றும் வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் செயலர் க.புலேந்திரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-50)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணம் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.தேவநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற நிர்வாக அலுவலகர் எஸ்.சிவநேசன், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் அதிகாரி க.ஈஸ்வரன், தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் ரா.மயில்வாகன சிங்கம், சுகாதா ரப் பரிசோதகர் என். பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

* * *

கிளிநொச்சி, பெப். 6

கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ப.ஜேயபல் பியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி சு. தர்மரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல்துறை உதவி விரிவுரையாளர் க.கிரிகரன், கிளிநொச்சி செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் ப.சசிரதன், கிருஷ்ணபுரம் கிராம அலுவலர் திருமதி ய.யசோதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-222)

## அலங்கார உற்சவம்

வடமராட்சி, பெப்.6

யாழ்ப்பாணம் அல்வாய் கிழக்கு குமுழடி அதிசய விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குடமுழுக்கு தினத்தன்று அலங்கார உற்சவம் நிறைவுபெறும்.

அலங்கார உற்சவத்தை திக்கம் காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய கிரியா கிரம ஜோதி சிவபிரம்மஸ்ரீ சிவ குகேந்திர குருக்கள் முதன்மைக்குருவாக இருந்து உற்சவத்தை நடத்தி வருகின்றார். (ஐ-173)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவ துறையினரும் யாழ்ப்பாண நீரிழிவுக் கழகத்தினரும் இணைந்து "எமது சுகவாழ்வு எமது கையில்" என்னும் தொனிப்பொருளில் செயலமர்வு ஒன்றை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் அண்மையில் நடத்தினர்.

நிகழ்வில் மூத்த விரிவுரையாளர் மருத்துவர் சுரேந்திரகுமார், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சுகாதார கல்வி பொறுப்பு மருத்துவ அதிகாரி துவாரகா, யாழ்ப்பாண நீரிழிவு கழகத் தலைவர் தி.மைக்கல், தொழில் நுட்பக் கல்லூரி பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான சமூக நிறுவனம் மாணவன் ஒருவனுக்கு ஈருருளியும், 30 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளையும் வழங்கி கடந்த வெள்ளிக்கிழமை தனது சேவையை ஆரம்பித்தது. (ஐ- 74)

## தொகுதிக்கு உறுப்பினர்களை இணைக்கும் பணி ஆரம்பம்

வடமராட்சி, பெப். 6

இலங்கை தமிழரசுக்கட்சி தொகுதிதோறும் நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் திட்டம் உடுப்பிட்டி தொகுதியில் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் த.சுகிர்தன், கரவெட்டி பிரதேச தவிசாளர் த ஐங்கரன் ஆகியோரினால் குறித்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாவது உறுப்பினராக எஸ் செந்தில் என்பவர் நூறு ரூபாவை செலுத்தி ஆயுள் கால உறுப்பினராக இணைந்து கொண்டார். உறுப்புரிமைக்கான விண்ணப்பத்தை அவர் பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரனிடம் கையளித்தார். (ஐ-173)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண கல்வித் திணைக்கள நிர்வாகப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் ஓய்வுபெற்ற தபாலதிபருமான ஆ.சுந்தரலிங்கம், மதிப்புறு விருந்தினராக பழைய மாணவன் ந.பாலகிஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

* * * *

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று புதன்கிழமை மதியம் ஒரு மணிக்கு அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய பொது நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், மதிப்புறு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பகுதித் தலைவர் அ.யோபினபநாயகம், சுவிஸில் வசிக்கும் பழைய மாணவி திருமதி கமலராணி தவராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

## இலவச மருத்துவமுகாம்

அனலைதீவு, பெப். 6

அனலைதீவு மக்களுக்கான இலவச மருத்துவமுகாம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை அனலைதீவு மருத்துவமனை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் அ.ரகுபதி நினைவான மருத்துவமனையின் 30 மருத்துவர்கள் அடங்கிய குழுவினரால் இந்த மருத்துவமுகாம் நடத்தப்பட்டது.

பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு இலவசமாக சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன் நீரழிவு தொடர்பான கைநூல்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-9)





## ஆலய சீரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி, பெப். 6

பளை இயக்கச்சி விநாயகபுரம் ஞான வைரவர் ஆலயத்தின் சீரமைப்பு பணிகளுக்கு துரித கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உறுதி அளித்துள்ளார்.

கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரனுடன் ஆலய பரிபாலன சபையினரும் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினரைச் சந்தித்து ஆலயஅபிவிருத்திக்கு நிதியை ஒதுக்கீடு செய்துதருமாறு கோரிக்கை விடுத்தனர். (ஐ-173)

## பெருந்திருவிழா

வடமராட்சி, பெப்.6

பருத்தித்துறை தம்பசிட்டி அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்த திருவிழா இன்பர்சிட்டி சமுத்திர தீர்த்தக்கரையில் அதிகாலை 6 மணிக்கு நடைபெறும்.

தினமும் காலை திருவிழா காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பகல் 12.30 மணிக்கு நிறைவுபெறும் மாலைத் திருவிழா பகல் 5.30 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9 மணிக்கு நிறைவு பெறும். கோவில் உதவிக் குருமார்களான சபா உதய குமாரன் குருக்கள், சபா ஐங்கரன் குருக்கள், கி. பாவன் குருக்கள் ஆகியோருடன் தலைமை குரு சிவஸ்ரீ பாஸ்கரக் குருக்கள் பெருந்திருவிழாவை நடத்தவுள்ளார். (ஐ-173)

# யானைகளைத் தடுத்து நிறுத்துங்கள் தவறின் மக்கள் வீதிக்கு இறங்குவர்

## மண்முனை தென்மேற்கு சபைத் தவிசாளர் தெரிவிப்பு

கொக்கட்டிச்சோலை, பெப். 6

**காட்டுயானைகளின் தொந்தரவுக்குத் தீர்வு காணாதுவிடின் மக்கள் வீதிக்கு இறங்குவதைத் தவிர்க்க முடியாது என்று மண்முனை தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் சி.புஸ்பலிங்கம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

மண்முனை தென்மேற்குப் பகுதியில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு, அறுவடை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மக்களுக்குக் காட்டு யானைகள் பெருமளவில் சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றன. விவசாயச் செய்கைகளை அழிப்பது, பயன்தரு மரங்களை அழிப்பது தொடர்கின்றன. மனித உயிர்களையும் பலியெடுத்து வருகின்றன. இதனால் ஒவ்வொரு இரவிலும் தூக்கமின்றி சிறுவர்களும், பெரியவர்களும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

மக்கள் குடியிருப்புக்களுக்குள் உள்நுழையும் யானைகள், குடியிருப்பை அண்டிய இடங்களில் உள்ள பற்றைக் காடுகளிலும் பகல் நேரங்களில் தங்கிநிற்கின்றன. வீட்டைவிட்டு வெளியில் செல்ல முடியவில்லை. மந்தைகளை மேய்க்கச் செல்வதற்கும் மக்கள் அஞ்சுகின்றனர்.

மண்முனை தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தாந்தாமலை, மக்களடியூற்று, நாற்பதுவட்டை, மாவடிமுன்மாரி, நெல்லிக்காடு, குளுவினமடு, கொல்லநுலை போன்ற பகுதிகளிலே காட்டுயானையின் தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

யானை தாக்கி குளுவினமடு பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் ஒருவர் உயி



ரிழந்துள்ளார். உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்காவிடின் மக்கள் வீதிக்கு இறங்குவதைத் தவிர்க்க முடியாது - என்றார். (த)



## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பினர் ஆய்வு

முல்லைத்தீவு.பெப்.6

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் முல்லைத்தீவில் பெண்கள் செயற்பாட்டுவலையமைப்பினர் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவைத் தளமாகக் கொண்டு இயங்கும் பெண்கள் செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் அரசு கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பிலான ஆய்வு ஒன்று முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் அமைந்துள்ள அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

பலர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர். முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் தலைவி ஜென்சிலா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்று அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே நாற்பது ஆண்டு காலமாக இருந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலா இந்த சட்டத்தினை கொண்டுவர இணங்கியுள்ளார்கள்.

இலங்கை அரசு 2015 ஆம் ஆண்டு ஐ.நா சபையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை மாற்ற பரிசீலிப்போம் என்பதற்கு அமைய, சட்டம் தொடர்பில் புதிய வரைவு ஒன்று உருவாகியுள்ளது. இது தொடர்பில் மனித உரிமை ஆர்வலர்கள் சட்டத்தரணிகள் ஆராய்கின்றார்கள்.

இந்த புதிய வரைவு எதிர்காலத்தில் சிறுபான்மை இனமான தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு அச்சுறுத்தலாகவே அமையும். இந்தச் சட்டமூலத்தில் பல விடயங்களுக்கு வரைவிலக்கணம் இல்லாத நிலை காணப்படுகிறது.

அபிவிருத்தி வேலைக்காக மக்கள் போராட்டம் மேற்கொண்டால் அரசுக்கு எதிரான செயற்பாடு என்று மக்களைக் கைதுசெய்யும் நிலைப்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பயங்கரவாதம் இல்லாமல் போன நிலையில் எதிர்காலத்தில் முஸ்லீம் பயங்கரவாதம் வரலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த புதிய சட்டவரைவு ஊடாக பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு கீழ், தமிழ், முஸ்லிம் மக்கள் கைதுசெய்யப்படுவது அதிகரிக்கலாம்.

பெண்களை கைதுசெய்யும் போது, பெண் அரச அதிகாரிகள் இருக்கவேண்டிய தேவை இல்லை. முன்னர் பொலிஸ் பயங்கரவாத பிரிவினரே கைதுசெய்யலாம். ஆனால் புதிய சட்டவரைபில் முப்படையினருக்கும் மக்களை கைதுசெய்யும் அதிகாரம் உண்டு.

இவ்வாறு பல்வேறு சட்டவரைவுகள் காணப்படுகின்றன. இது தமிழ் முஸ்லிம் மக்களை பாதிக்கும். செயலாக காணப்படுகின்றது.

இந்த புதிய பங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவு நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும் போது, அங்குள்ள முஸ்லிம், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்கவேண்டும். இதுவரை அவர்கள் எந்த கருத்தும் வெளியிடவில்லை. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தியுள்ளோம்.

இது தொடர்பில் வன்னி மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் புதிய சட்டம் மீதான எங்கள் நிலைப்பாடுகளையும் இந்த இரண்டு சட்டங்களும் எங்கள் மக்களுக்கு தேவை இல்லை என்பதையும் நாடாளுமன்றத்தில் வலியுறுத்த வேண்டும் என்று கோரிக்கையினை விடுகின்றோம் எனத் தெரிவித்தார். (க-ரி3)

## கோத்தபாய கடற்படைத் தளம் உடன் அகற்றப்படல் வேண்டும்

*வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் இப்படி வலியுறுத்தல்*

முல்லைத்தீவு, பெப். 6



முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களின் 617 ஏக்கர் காணியில் அமைந்துள்ள, கோத்தபாய கடற்படை முகாம் அகற்றப்பட்டு, குறித்த காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன்.

'சிறுவர்களுக்கான அறநெறிப்பாடசாலை' என்னும் செயற்றிட்டத்தினூடாக, வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால், முல்லைத்தீவு வட்டுவாகல், அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

617 ஏக்கர் காணியில் கோத்தபாய கடற்படை முகாம் என்ற ஒரு முகாமை அமைத்து, வட்டுவாகல் மக்களுடைய நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த நிலப்பகுதி இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்தக் கடற்படைத் தளம் இங்கிருந்து அகற்றப்பட்டு மக்களின் காணி விடுவிக்கப்பட வேண்டும். மக்களுடைய காணி இந்த மக்களுக்குக் கிடைக்கவேண்டும். இராணுவத்தினர் அங்கு குடியிருப்பதால் நந்திக்கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுடைய வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படுகின்றது. எனவே அந்தக் காணிகளை விடுவிப்பதற்குரிய வழியை சம்பந்தப்பட்டவர்கள் செய்ய வேண்டும் - என்றார். (ம-222)

## சப்த கன்னிமார் அறநெறி பாடசாலைக்கு அடிக்கல்

மன்னார், பெப். 6

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள சப்த கன்னிமார் அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டுவாகல் அறநெறிப்பாடசாலையின் அதிபர் அ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

விருந்தினர் வரவேற்புடன் தொடங்கி அறநெறிப் பாடசாலை அமைப்பதற்குரிய கல்வெட்டுத் திரை நீக்கம் செய்யப்பட்டது. அதனையடுத்து, மரபுவழியில் வட்டுவாகல் சப்த கன்னிமார் கோவிலில் இறை வழிபாடுகள் இடம்பெற்று அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் நடப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்,மேலதிக மாவட்டசெயலர் கோ.தனபாலசுந்தரம் , உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.சிவஜெயந்தன், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் விஜித கே.கமகே, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் , வடமாகாணசபை முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், கரைதுறைப்பற்று பிரதேச உப தலைவர் தி.இரவீந்திரன், ஐக்கியதேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ரிஷாம் ஜெமால்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அபிவிருத்தி வளர்ச்சியுடன் ஆன்மீகப் பண்புகளை வளர்த்தல் "சிறுவர்களுக்கான அறநெறிப்பாடசாலை" என்னும் செயற்றிட்டத்தினூடாக, வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 33 மில்லியன் நிதியில் குறித்த அற நெறிப்பாடசாலை அமைக்கப்படவுள்ளது. (ஐ-246-222)



# களவு முதிரைக் குற்றிகள் புளியங்குளத்தில் மாட்டின

## சந்தேகநபர்கள் இருவரும் கைது



வவுனியா, பெப். 6

புளியங்குளத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஒருதொகை முதிரைமரக் குற்றிகள் மீட்கப்பட்டன. அவற்றைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அதிரடிப் படையினர் மேலும் தெரிவித்ததாவது:

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் ஓமந்தை, குஞ்சுக்குளம் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுகின்றன என்று கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய அந்தப் பகுதி புளியங்குளம் சிறப்பு அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி எச்.டி.லால்ஜெயதிலக தலைமையில் சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது கனரக வாகனமொன்றில் இருந்து 60 முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டன.

அவை சுமார் 12 லட்சம் ரூபா பெறுமதியானவை. அவற்றைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர்கைது செய்யப்பட்டனர். (ம-110)

# கணித ஆசிரியருக்காகக் காத்திருக்கும் மன். புனித லோறன்சியார் மாணவர்கள்

தலைமன்னார் புனித லோறன்சியார் பாடசாலையில் கணித பாட ஆசிரியர் இன்மையால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வளர்ச்சிப் பாதையில் உள்ள இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.



மிகப் பழமையான புனித லோறன்சியார் பாடசாலையில் 280க்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கின்றனர். 1990ஆம் ஆண்டு போரால் இடம்பெயர்ந்திருந்த கிராம மக்கள் தற்போது தமது கிராமத்துக்குத் திரும்பியுள்ளனர். அந்தக் கிராம மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரே பாடசாலை இந்தப் பாடசாலையே.

**வளர்ச்சி முகம்**

தற்போது இந்தப் பாடசாலையின் கல்வி நிலமை வளர்ச்சி கண்டு வருகின்றது. 2013ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலப் பிரிவில் 74 வீத சித்தியைப் பெற்று மாவட்டத்தின் முதல் நிலையை அடைந்தது இந்தப் பாடசாலை. அதேஆண்டு கணித பாடத்தில் 100 வீத மாணவர்கள் சித்தியடைந்தனர். 2017ஆம் ஆண்டுநடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இந்தப் பாடசாலை கணித பாடத்தில் மாணவர்களின் சராசரியின் அடிப்படையில் மாவட்டத்தில் முதல்நிலை பெற்றது.

அதே ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் மாணவன் ஒருவன் 9 ஏ பெறுபேற்றையும் பெற்றிருந்தான். 2018 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையில் உயர்தர கலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

**ஆசிரியர் இல்லை**

இந்தப் பாடசாலையில் கற்பித்து வந்த கணித பாட ஆசிரியர் 2018ஆம் ஆண்டு மே மாதத்துடன் இடமாற்றலாகியுள்ளார். அந்த வெற்றிடத்தை நிரப்ப இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதைப்போன்று கடந்த ஓராண்டுக்கு மேலாக சித்திர பாடத்துக்கும் ஆசிரியர் இல்லாத நிலமை காணப்படுகின்றது. இது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் தளர்ச்சியை ஏற்படுத்துகின்றது. அரச வேலை ஒன்றைப் பெறுவதற்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் என்பவற்றை ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற நிலமை காணப்படும்போது, மாணவர்களுக்குப் பொருத்தமான காலத்தில் கிடைக்காத கல்வி எதிர்காலத்தில் தாக்கத்தைச் செலுத்தும் என்பதை மறுக்க முடியாது.

**கவனம் செலுத்துங்கள்**

கல்வித் திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இந்த நிலமை தொடருமானால் கிராமங்களில் உள்ள பாடசாலைகளின் வளர்ச்சி தடைப்படும். நகர்ப் புறப் பாடசாலைகள் மட்டுமே வளர்ச்சியடையும். மாணவர்களின் நலன்கருதி இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்களை விரைவாக நியமிக்க வேண்டும் என்றும் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-221)





## மடுக்கரை அறநெறிப் பள்ளிக்கு அடிக்கல்

மன்னார், பெப். 6


மன்னார் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை நடப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வைபவ ரீதியாக நட்டு வைத்தார். நானாட்டான் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், மேலதிக மாவட்ட செயலர் சி.குணபாலன், அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பிரத்தியேக செயலர்,மன்னார், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (ஜ-56-213)

# கால்நடைகள் மேய்ச்சல் நிலங்களில் அனைவரும் அக்கறை கொள்ளுங்கள்

*முசலி பிரதேச செயலர் வசந்தகுமார் தெரிவிப்பு*

மன்னார்,பெப்.6

கால்நடைகள், மேய்சல் நிலங்கள் தொடர்பாக அனைத்துதரப்பினருக்கும் பொறுப்பு உள்ளது. வெறுமனே பிரதேச செயலகங்களை மாத்திரம் குறைகூறுவதை ஏற்கமுடியாது என முசலி பிரதேச செயலர் வசந்தகுமார் தெரிவித்தார் முசலிப் பிரதேசத்தில் பெரும்பாலான வயல் நிலங்கள் பெரும் போக பயிர் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதனால் பயிர்களை பாதுகாக்கும் பொருட்டு கால்நடைகளின் மேய்ச்சலுக்கு என முசலிப் பிரதேசத்தில் வனப்பகுதியாக இருக்கும் கல்லாறு மறிச்சுக்கட்டி பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முசலிப் பிரதேச செயலகம் அனுமதி வழங்கி இருந்தது. ஆனால் கால்நடைகள் பயிர்களை மேய்ந்து சேதம் விளைவிப்பதாக கொண்டச்சி, காயாக்குழி போன்ற பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்ததுடன், பெருவாரியான கால்நடை பராமரிப்பாளர்கள் இல்லாமல் கட்டாக்காலிகளாக திரிவதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பாக முசலிப் பிரதேச செயலர் வசந்தனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது: வனப்பகுதியாக காணப்படும் கல்லாறு, மறிச்சுக்கட்டிப் பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடபடுத்த முசலி பிரதேச செயலகம் அனுமதி வழங்கி இருந்தது. ஆனால் பயிர்களை பாதுகாக்க விவசாயிகள் காவல் இருக்க வேண்டும். கால்நடை பராமரிப்பாளர்கள் பயிர்களை மேய விடாமல் பாதுகாக்க வேண்டும். விவசாய அமைப்புகள் அக்கறை கொள்வது அவசியம் அதிகாரிகள் மீது குற்றம் சுமத்துவதைஏற்கமுடியாதுஎன்று முசலிப்பிரதேசசெயலர்வசந்தன்தெரிவித்தார். (க-213)



# கண்ணிவெடி அகற்றலுக்கு நிதி கோரி மரதன் ஓட்டம்

கிளிநொச்சி பெப். 6

கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டுக்கு நிதி கோரும் விழிப்புணர்வு மரதன் ஓட்டம் கடந்த சனிக்கிழமை முகமாலையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் அபாயகரமான வெடிபொருள்கள் காணப்படுகின்ற முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 6.15 மணியளவில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு நிதி தேவைப்பாடுகள் காணப்படுவதாகவும் அதன் ஓர் அங்கமாக வீதியோட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை அவர்களுடைய (வெப்சைற்றில்) இணைய பக்கத்தில் பதிவிட்டு நிதி தேவை காணப்படுவதையும் நிதியினை பெற்றுக் கொண்டு இலங்கையில் வேலைகளை முன்னெடுப்பதற்காக இந்த வீதியோட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பெண்கள், ஆண்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மிதிவெடி அகற்றும் நிறுவத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.முகமாலையில் ஆரம்பித்த வீதியோட்டம்கிளிநொச்சியில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஜ-214,6)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்




கிளிநொச்சி, பெப். 6

கிளிநொச்சி யூனியன்குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் 50 பேருக்கு புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டன இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளையினரும்,யாழ்ப்பாண கிளையினரும் இணைந்து இந்த உதவிகளை வழங்கிவைத்தனர்.

பாடசாலை அதிபர் திருமதி. கிருஸ்டினாம்மாதலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட இலங்கை செஞ்சிலுவை சங்க தலைவர் ச.சந்திரசேகரம், செயலர் த.சேதுபதி,கிளை நிறைவேற்று அலுவலர் சி.கிருஷ்ணராஜ், யாழ்ப்பாண மாவட்ட இலங்கை செஞ்சிலுவை சங்க கிளை நிறைவேற்று அலுவலர் பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-222)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## திருந்தாத அரசியல்வாதிகள்

தான்மீண்டும்ஆட்சிக்குவந்தால்இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேச்சு நடத்தி தமிழ் மக்களுக்குப் பொருத்தமான தீர்வு ஒன்றைக்காண்பேன்என்று தெரிவித்திருக்கிறார்முன்னாள்அரச தலைவரும் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச. தமிழ்ப் பத்திரிகையாளர்களை நேற்றுச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார்.

பேச்சின்மூலம் எட்டப்படக்கூடிய தீர்வு எப்படிப்பட்டதாக அமையும்என்றுபத்திரிகையாளர்கள்கேட்டதற்கு, அதனைப் பேச்சு ஊடாகத்தான் தீர்மானிக்க முடியும் என்றும் கூறியிருக்கிறார். புதிய அரசமைப்பு முயற்சிகளைக் கடுமையாக எதிர்க்கத் துணிந்திருக்கும் நிலையில் மகிந்த இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்கள் விடயத்தில் சிங்கள ஆட்சியாளர்கள், தலைவர்கள்எத்தகைய அலட்சியத்தோடு, எடுத்தெறிந்துநடந்துகொள்கிறார்கள் என்பதற்கான மற்றொரு உதாரணம் மகிந்தவின் இந்தக் கருத்து.

முன்னாள்அரசதலைவர்சந்திரிகாபண்டாரநாயக்ககுமாரணதுங்கவின் ஆட்சியில் பிராந்தியங்களின் ஆட்சி தொடர்பான தீர்வுப் பொதி ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது அந்த ஆட்சியில் அங்கம் வகித்தவர் மகிந்த. அதன் பின்னர் அவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக வெளியிட்ட மகிந்தசிந்தனைஎன்கிறதேர்தல்அறிவிப்பில்தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அவரது ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத்தில்அங்கத்துவம்வகிக்கும்அனைத்துக்கட்சிப்பிரதிநிதிகள் குழுதீர்வுதொடர்பில்நீண்டகாலம்கூடி ஆராய்ந்து ஒருதீர்வுத் திட்டத்தை அவரின்முன்வைத்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தக் குழுவில் அங்கம் வகிக்காதபோதும் ஈபிடிபி போன்ற மகிந்த ஆதரவு தமிழ்க் கட்சி உட்படப் பல தமிழ்க் கட்சிகள்அதில்இடம்பெற்றிருந்தன. ஆனால், அந்தத்தீர்வுத் திட்டத்தை என்ன, ஏது என்றுகூடப் பார்க்கவில்லை மகிந்த. அப்படியே தூக்கிக் கடாசி விட்டார்.

மிக அண்மைக் காலம் வரையில் புதிய அரசமைப்பு முயற்சிகள்தொடர்பானவழிகாட்டல்குழுவில்அவரது கட்சியும்ஓர் பங்காளியாக இருந்தது. குழுவின் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்படும் வரையில் இணக்கத்தோடு பங்கேற்று வந்தது. இடைக்கால அறிக்கை தயாரானதும்தான் முரண்படத் தொடங்கியது. இடைக்கால அறிக்கையோடு தமக்கு உடன்பாடில்லை என்று போர்க்கொடி தூக்கத் தொடங்கியது.

இவ்வாறு மூன்று சந்தர்ப்பங்களில் தீர்வு தொடர்பான முயற்சிகளில் நேரடியாகப் பங்கெடுத்து அவற்றைத் தயாரிப்பதில் உடனிருந்த மகிந்த ராஜபக்சதான் இப்போது நான்காவது முறையாகப்பேச்சுநடத்தித்தீர்வு ஒன்றைக்காணப்போகிறார் என்று சொல்கிறார்.

கேக்கிறவன் கேணயன் என்றால் கேப்பையில் நெய் வடியுமாம் என்கிற கதையாகத்தான் இருக்கிறது மகிந்தவின் கருத்துக்களும். மூன்று தடவைகள் வாய்த்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளாதவர் இனிதான் அதனைச் செய்யப் போகிறாராம். தமிழர்களின் பிரச்சினையை எவ்வளவு துச்சமாக மதித்திருந்தால் மகிந்த இதுபோன்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருப்பார்?


2015ஆம் ஆண்டு அரசதலைவர்தேர்தலில் தோற்றபோதும் மகிந்த பாடம்கற்றுக்கொள்ளவில்லை என்பதையும் அவரது மமதை சற்றும் குறையவில்லை என்பதையுமே அவரது இந்தக் கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இத்தகைய விகாரப்பட்ட மனோநிலையைக்கொண்ட தலைவர்களைக் கொண்ட ஓர் அரசியல் தரப்பிடம் இருந்து தமிழர்கள் தீர்வை எதிர்பார்ப்பது நடக்கக்கூடிய காரியம்தானா? அகிம்சை வழியில் மக்களாட்சி வழியில் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தமிழர்கள் எடுக்கும் முயற்சிகளைஎள்ளிநகையாடுவதாகத்தான்பெரும்பாலானசிங்களத் தலைவர்களின் கருத்துக்களும் செயல்களும் இருக்கின்றன.

இதனைத்தான்தமிழீழ விடுதலைப்புலிகளின்தேசியத்தலைவர் வே.பிரபாகரன், சிங்களவர்கள் தாமாக முன்வந்து ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வைத் தரமாட்டார்கள் என்று தீர்க்கமாகத் தெரிவித்திருந்தார். தமது ஒவ்வொரு நகர்விலும் செயலிலும்சிங்களத்தலைவர்கள்அதனையே ஆணித்தரமாக நிரூபித்து வருகிறார்கள். இத்தகைய சிங்களத்தலைவர்களிடமிருந்து தமிழர்களைக் கடவுளாலும் காப்பாற்ற முடியுமா என்பதும் சந்தேகம்தான்.

# கூட்டமைப்பைக் குறை கூறுவதால் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்குமா?

சேரலாதன்



கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதே தமது முதன்மையான வேலையெனச் சிலர் நடந்துகொள்கின்றனர். முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சிவசக்தி ஆனந்தன், சில அரச உயர் பணியாளர்கள், மதத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சிலர் தொடர்ந்து கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை சமீப காலமாக வெளியிட்டு வருகின்றனர். சிலருக்கு ஏதோவொரு வகையில் கூட்டமைப்பைக் குறைகூறுவதே தொழிலாகவும் மாறிவிட்டது.

### ஆரோக்கிய விமர்சனங்கள் வரவேற்கத் தக்கவையே

அரசியலில் விமர்சனங்களை எழுதுவது இயற்கையானதே. ஆனால் ஆரோக்கியமானவையாகவும் பக்கச் சார்பின்றியும் அமைவது முக்கியமானதாகும். ஆனால் கூட்டமைப்பை மட்டுமே குறியாகக் கொண்டு விமர்சனங்களை முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இதேவேளை விக்னேஸ்வரன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் போன்றவர்கள் தாம் இதுவரையில் தமிழ் மக்களுக்காக எதைச் சாதித்துவிட்டோம் என்பதை ஒருகணம் சுயபரிசோதனை செய்துகொள்வது அவசியமானதாகும். வடக்கு மாகாணசபையின் முதலமைச்சராகப் பதவி வகித்த விக்னேஸ்வரன் மாகாண சபையின் இறுதிக் காலம் வரையில் தமக்குரிய சகல சலுகைகளையும் அனுபவித்த ஒருவராவார். தாம் பதவி விலகுவதற்குச் சில நாள்களுக்கு முன்பாகவே கோடிக் கணக்கான ரூபா பெறுமானமுடைய சொகுசு வாகனமொன்று தமக்குத் தேவையெனக் கேட்டார் என்று செய்திகள் வந்திருந்தன. கூட்டமைப்பின் செயற்பாடுகளில் திருப்தி இல்லாதுவிட்டால் அந்த அமைப்பிலிருந்து விலகுவது மட்டுமல்லாது அந்த அமைப்பால் வழங்கப்பட்ட முதலமைச்சர் பதவியையும் துறந்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யாது இறுதிநாள்வரை பதவிச் சுகத்தை அனுபவித்துவிட்டு தற்போது ஏதோ ஞானம் வந்தவர்போன்று கூட்டமைப்பைக் குறைகூறிக்கொள்வதைத் தமது வாடிக்கையாக மாற்றிக்கொண்டுவிட்டார். தமக்கெனப் புதிய கட்சியை ஆரம்பித்த அவர் அதன் மூலமாகத் தமிழ்மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வைக் காண்பதை விடுத்து இனியும் கூட்டமைப்பின் மீது சேற்றை அள்ளி வீசுவது எந்த வகையிலும் நியாயமாகாது.


### ஆனந்தனின் பதவி எந்த வகையறா?

நெடுங்கேணிப் பகுதியில் காடுகளை அழித்து, புத்த விகாரையை அமைப்பதும், சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளன. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் சிவசக்தி ஆனந்தன் இதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் முழு மூச்சுடன் இறங்கியிருக்க வேண்டும். ஆனால் அரச தலைவருக்குக் கடிதமொன்றை எழுதியதுடன் அவரது கடமை முடிந்துவிட்டது. இதற்கும் கூட்டமைப்பைத்தான் இவர் குறைகூறுவாரோ தெரியவில்லை. தற்போது விக்கியுடன் இணைந்துகொள்ளுமாறு கூட்டமைப்புக்கு அவர் அறிவுரை வழங்குகின்றார். ஆனால் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டுப்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத்தான் அவர் இன்னமும் அனுபவித்துக்கொண்டிருக்கிறார். கூட்டமைப்பு கூடாதென்றால் அதன் சார்பில் கிடைத்த பதவி எந்த வகையில் நல்லதாகும்?

தற்போது புதிய அரசமைப்பு ஒரு நாடகமெனவும் கூட்டமைப்பு அதில் முதன்மையான பாத்திரத்தை ஏற்று நடப்பதாகவும் விக்னேஸ்வரன் கூறி வருகின்றார். புதிய அரசமைப்பொன்றின் ஊடாகவே தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென கூட்டமைப்பு நினைத்ததில் தவறொன்றுமில்லை. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் இதற்காகக் கடுமையாகப் பாடுபட்டிருக்கிறார். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசு எவ்வாறாயினும் புதிய அரசமைப்பை நிறைவேற்றியே தீருமென்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே அரசியல் குழப்பங்களின்போது ரணிலுக்கு ஆதரவாகச் சம்பந்தன் செயற்பட்டார். ரணிலின் பதவியும் காப்பாற்றப்பட்டது. ஆனால் மறுபுறத்தில் கூட்டமைப்பின் மீது மகிந்த கடுமையான வெறுப்பைக் கொண்டார். புதிய அரசமைப்பு நிறைவேற்றுவதைத் தடுத்து நிறுத்துவேன் எனச் சபதமும் இட்டார். அவருக்குப் பின்னால் இனவாதிகளும் மதவாதிகளும் அணிதிரண்டனர். இதனால் ரணில் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டார். இதில் கூட்டமைப்பு என்ன தவறைப் புரிந்தது என்பது புரியவில்லை. தமிழ்மக்களை ஏமாற்றவேண்டிய அவசியமும் சம்பந்தனுக்கு இல்லை.


### சொல் வீரர்கள் செயலாற்ற வேண்டும்

இதேவேளை கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் அதைக் குறைகூறிக்கொண்டிருப்பதை விடுத்து தமிழர்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காண்பதில் முனைப்புடன் செயற்பட முடியும். விக்னேஸ்வரனையே இவர்கள் தமது தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தால் அவர் தலைமையிலேயே இதற்கான முயற்சிகளில் ஈடுபடமுடியும். இந்த வகையில் இவர்களால் எதையாவது சாதிக்க முடிந்தால் மக்களும் இவர்களை ஏற்றுக்கொள்ளவே செய்வார்கள். பின்னர் கூட்டமைப்பு என்ற பேச்சுக்கே இடமிருக்காது. விக்னேஸ்வரனை'சம்பந்தனுக்கு மாற்றீடான தலைவரெனச் சிலர் கூறுகிறார்கள். அவ்வாறாயின் சம்பந்தனை விடுத்து விக்னேஸ்ரன் மூலமாகத் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இவர்களால் முடியும். இதைச் செய்து முடிப்ப தற்கு இவர்கள் ஏன் தயங்குகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஓர் உண்மையை இவர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். கூட்டமைப்பு என்ற பெருவிருட்சம் வீழ்ந்து விடுமானால் தமிழர்கள் பாதுகாப்பாக ஒதுங்கி நிற்பதற்கு வேறு எந்த இடமும் கிடைக்கப்போவதில்லை.



### புராதனப் பொய்மையில் புரளும் பேரின அரசியலின்

# பொறியினில் சிக்கியுள்ளது பொறியியல்!



பசீர் சேது தாவுத்

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் துறை முஸ்லிம் மாணவர்கள் கிரலகல புராதன தூபியின் மேலேறி நின்ற புகைப்படம் சமூக ஊடகத்தில் பதிவேறி ஓராண்டு கடந்த பின்னர் எடுக்கப்பட்டிருக்கும் சட்ட நடவடிக்கை தொடர்பாக பல கோணங்களில் விமர்சனங்களும் எதிர் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவை ஒருபுறம் இருக்கையில், இது ஒரு பல்கலைக் கழகக் கல்வி சார்ந்த பொறாமையினால் எழுந்த பழிவாங்கலாகும் என்ற கோணத்திலும் எண்ணத்தோன்றுகிறது.

**கல்வி ரீதியான பழிவாங்கலா?**

பேரினவாத அரசியல், பேரின மக்களுக்கு சிறு பராயம் முதல் சிறுபான்மையினரைப் பழிவாங்கும் கலையைக் கற்றுக்கொடுத்துள்ளது. மிகப் பழமையான பேரின சமூகம் எனும் அரசியல் கலைக் கல்லூரியின் கருவறையில் கற்றுத் தேறிய இந்தப் பிள்ளைகளின் நடவடிக்கையால் விளைந்ததே முஸ்லிம் பொறியியல் மாணவர்களின் கைதாகும்.

1970களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த சிங்கள மாணவர்களின் இவ்வாறான பல ஆதிக்க மனோபாவம் கொண்ட பேரினவாத பொறாமைச் செயற்பாடுகள் முப்பதாண்டு கால இனப் போருக்கு வழிகோலிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

அன்று யாழ் பல்கலைக் கழகத்தில் கற்ற சிங்கள மாணவர்களைவிடவும் தமிழ் மாணவர்களே கல்வியில் கெட்டிக்காரர்களாகத் திகழ்ந்தனர். சுற்றிவர நிகழும் எதனையும் கணக்கில் எடுக்காது கல்வியே கண்ணாகி புத்தகப் பூச்சியாய் மேய்ந்தனர். இதனால் தமிழ் மாணவர்கள் பரீட்சைகளில் சிங்கள மாணவர்களை விடவும் உயர் சித்திகளை எய்தினர். இந்த நிலைமையினால் பேரின மாணவர்கள் தமிழ் மாணவர்களோடு பொறாமை கொண்டு செயலாற்றிய பல சம்பவங்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளன.

இன்றைய தென்கிழக்கு பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர்கள் தமது வகுப்புக்கு வெளியில் எட்டிப் பார்க்காமலே குனிந்த தலை கவிழாது படித்து படித்தரத்தில் ஏறி அமர்ந்து விடுகின்றனர் என்கின்றனர் அவதானிகள். இக் கல்வி நடைமுறை பரீட்சைப் படிப்பைத் தவிர வேறெந்த அறிவையும் இம்மாணவர்களுக்கு பெற்றுக் கொள்வதில் பின்னடைவைக் காண்பிக்கிறது. ஏனைய மத, கலை, கலாசார பண்பாடு தொடர்பான அறிவை இந்த மாணவர்கள் பெற்றிருக்காமையே தூபியில் ஏறி நின்று புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் உலவ விட்டமைக்கு வித்திட்டிருக்கிறது என்கின்றனர் முஸ்லிம் சமூக ஆய்வாளர்கள்.

தென்கிழக்குப் பல்கலைக் கழகம் முஸ்லிம் அடையாள அரசியலின் வீரியத்தினாலும் அஷ்ரபின் அரசியல் மற்றும் சட்ட நுணுக்கங்களினாலும் தவிர்க்க முடியாதபடிக்கு தோற்றுவிக்கப்பட்டதாகும். இந்தப் பல்கலைக் கழகத்தின் தற்போதைய நோக்கும் போக்கும் அது தோற்றம் பெற்ற காலத்தின் நோக்கத்திலும் போக்கிலும் இருந்து வழுவிவிட்டதன் விளைவுகளில் ஒன்றாகவும் புதிய இந்த சூழலைக் கொள்ள முடியும் என்கின்றனர் சிலர்.



தமிழ் பேசும் யாழ்.கிழக்கு மற்றும் தென்கிழக்கு பல்கலைக் கழகங்களில் கற்ற கற்கும் சிங்களம் பேசும் மாணவர்கள் தமது பல்கலை வாழ்வுக் காலத்தை வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் கவனத்தில் எடுத்துக் கழிப்பதற்கு மாறாக, தமது வாழ்வின் அற்புதமான இக்காலத்தை களிகொள்ளும் அனுபவக் காலமாகவும் சுவைக்க விரும்புகின்றனர் என்று சிங்களப் புத்திஜீவிகள் சொல்கின்றமையும் அனைவரும் அறிந்ததே.

**தென்கிழக்குப் பல்கலையின் பொறியியல் துறையில் முஸ்லிம் மாணவர் ஆதிக்கம்**

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தில் 12 முஸ்லிம் மாணவர்களே பயில்கின்றனர். இப்பிரிவில் அதிகமனவர்கள் சிங்கள மாணவர்களாகும். இப்பீடத்தில் முதலிரண்டு தரங்களிலும் முஸ்லிம் மாணவர்களே உள்ளனர். மட்டுமன்றி பன்னிரு மாணவர்களும் பீடத்தில் அதிகமான திறமைகளை நிரூபித்து வருவதனால் பீடத்தில் கற்கிற பெரும்பான்மையான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் பொறாமைத் தீயைக் கக்குவதாக அறியவருகிறது.

பீடத்தின் டீன் விசேட வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்கின்ற தருணங்களில் தமிழ் முஸ்லிம் மாணவர்களைத் தவிர சிங்கள மாணவர்கள் எவரும் அந்த வகுப்புகளில் கலந்துகொள்வதில்லை என்பதும் தெரியவருகிறது.

அண்மையில் ஆய்வுக் கல்விக்காக ஜேர்மன் பல்கலைக்கழகமொன்றுக்கு இந்தப் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த முதலாம் தரத்தில் சித்தி பெறுகிற கைது செய்யப்பட்டுள்ள முஸ்லிம் மாணவர் ஒருவரே கல்வி உபகாரம் பெற்றுத் தெரிவாகியுள்ளார். இத்தெரிவு, ஒரு வருடம் கழிந்த நிலையில் கவனிப்பாரற்றுக் கிடந்த தூபிப் புகைப் படத்தை பகைப் படமாக்க காரணமாகியுள்ளது.

மேற்சொன்ன நிலமைகளினால் பொறாமையடைந்த கூடப்பயிலும் பெரும்பான்மை மாணவர்களே அரசியல் மற்றும் மத அதிகாரபீடங்களின் உதவியோடு ஒரு வருடம் கடந்த பின்னர் தூபியின் புனித நிலை பற்றித் தெரிந்திராமல் நடந்துகொண்ட முஸ்லிம் மாணவர்களின் மீது ஏற்பட்ட குரோதத்தை கட்டவிழ்த்து உளவியல் திருப்தி காணும் வகையில் செயல்பட்டுள்ளனர்.

**அரச அதிகாரங்கள் இதற்கு உடந்தையா?**

வடகிழக்கில் புனைவுகளையும், பொய்யான புதைப்புகளையும் செய்து தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்களையும் ஏனைய காணிகளையும் கபளீகரம் செய்ததில் வரலாற்றில் இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்துக்குப் பெரும் பங்குண்டு. இது போல அரச அனுசரணையுடன் சிங்களக் குடியேற்றங்களைச் செய்ததிலும், வடகிழக்கில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை சிங்கள மயமாக்கிக் கட்டுக்குள் கொண்டு வந்ததிலும் இந்தத் திணைக்களத்தின் பங்கு பெரிதாக இருந்துள்ளது. இன்னும் இருக்கிறது. போர் முடிவுற்றுக் கடந்திருக்கும் பத்தாண்டுகளில் இந்தத் திணைக்களத்தினூடான சிறுபான்மை இனங்களின் வாழ்நிலங்களைக் கையகப்படுத்தும் தந்திரமான உத்தி வடக்கு கிழக்கில் தீவிரம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இது ஒரு தொடர்கதையாக இனிமேலும் தொடரவே செய்யும். புத்தர் சிலைகள் உடைப்பு மற்றும் புத்தர் சிலைகள் வைப்பு என்பனவும் மாவனல்ல, புத்தளம் பகுதிகளில் வெடிகுண்டு தயாரிக்கும் பொருட்கள் மீட்பு பல்கலைக்கழக அமைதியின்மை என்பனவெல்லாம் இன்னொரு போர்த் தயாரிப்புக்கான முன்னேற்பாடுகளன்றி வேறென்ன?

பின்னொரு காலத்தில் தேவைப்பட்டால் மேலும் முப்பது வருடகால போரைச் செய்வதற்கும் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் தயங்கமாட்டாது என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொள்வதற்கு போதுமான காரண காரியங்கள் அரங்கேறுகின்றன. தென்கிழக்கு பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர்கள் எண்மரையும் ஞானசாரதேரருடன் சேர்த்து கருணையின் அடிப்படையில் விடுதலை செய்தால் முஸ்லிம் உணர்வலைகளை ஐதாக்கலாம் என்று எண்ணுவோரும் உண்டு.

முன்னரெல்லாம் அமைச்சர் சஜித்தை அதிகாரத்துக்காகச் 'சுகிர்த்த' முஸ்லிம் தலைவர்களும், வாக்காளர்களும் தற்போது தலை கவிழ்ந்துள்ளனர். சஜித் பிரேமதாச கலாசார அமைச்சை போரிட்டு வலிந்து எடுத்துக்கொண்டது சிங்கள பௌத்த பெருந்தேசிய வாக்குகளை கவர்ந்து எதிர்காலத்தில் அரச தலைவராவதை இலக்காகக் கொண்டு என்பதையல்லாமல் பௌத்த மான்மியம் (புனிதமல்ல) தெரியாமல் தவறிழைக்கும் முஸ்லிம்களை கருணை அடிப்படையில் விடுவிப்பதற்கல்ல என்பதைப் புரிந்துகொள்ளும் அரசியல் ஞானமற்ற எம் அரசியல் 'மாப்பிள்ளை மாரை' நொந்து பயனில்லை.

முஸ்லிம்களை முன்வைத்த போர் இலங்கையில் சாத்தியம் என்பதை இலங்கையில் கலாநிதி பட்டத்துக்காக தீசிஸ் எழுதிய அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் சேர்ந்த பல பீ.எச்.டீ மாணவர்கள் நிரூபித்துவிட்டார்கள்.

இனி, எவர் ஆட்சிக்கு வந்தாலும் நட்ந்து முடிந்த 'மொழி அடிப்படையிலான இன' போர் போல இலங்கையில் 'மத அடிப்படையிலான இன' போரொன்று விரைவில் சாத்தியமே! பெரிய பலி பீடத்தில் இலங்கையின் ஏழை முஸ்லிம்கள் கழுத்தில் கயிறு கட்டப்பட்ட மெலிந்த ஆடுகளேயாகும்.

இந்த எரியவைத்த நெருப்பில் எண்ணெயூற்றும் இராணுவ, இராஜதந்திர அரசியலை முகம்கொள்ள 'கதைத்து விட்டுக் கழிந்துபோய் சொந்த நலன் பேணும் முப்பது ஆண்டுகால முஸ்லிம் அடையாள அரசியலை நம்பிப் பயனில்லை. சிங்கள பௌத்த அரசியலில் சிறையிருக்கும் முஸ்லிம் போலித் தனித்துவத்தின் காலடிகளில் சரணடைந்தும் சாகத் தேவையில்லை. மாற்று அரசியலே பாதுகாப்பானது.



# வறுமையில் வாடுகின்றனர் மக்கள்; அமைச்சர்களுக்கு வாழ்நாள் ஊதியம்

சாயோ சல்வோடர்.பெப்.6
கொங்கோவில் பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். ஆனால் அமைச்சர்களுக்குச் சாகும் வரை ஊதியம் வழங்கப்படுகிறது. இது பன்னாட்டு அரசியலவதானிகள் மட்டத்தில் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.


முன்னாள் அமைச்சர்களுக்கு 2ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை சலுகையாக வழங்கும் அந்த அரச திட்டம் பெரிதும் விமர்சனத்துக்குள்ளானது. இந்த விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் கொங்கோ அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் அமைச்சர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, மருத்துவம், மற்றும் தங்கும் வசதிக்காகவே இந்த வாழ்நாள் ஊதியம் வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் வறுமையில் வாடக்கூடாது என்றும் இந்த ஊதியம் அவர்களை வளப்படுத்துவதற்காக இல்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அமைச்சர்களுக்கு வாழ்நாள் ஊதியம் மற்றும் பிற சலுகைகளை வழங்குவதைக் கொங்கோ ஜனநாயகக் குடியரசின் நாடாளுமன்று அண்மையில்தான் நடைமுறைப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## குவைடோவை அங்கீகரிக்கிறது ஐரோப்பா

கரகஸ்.பெப்.6
வெனிசுவேலாவின் எதிர்க்கட்சித் தலைவர் குவைன் குவைடோவை வெனிசுவேலாவின் இடைக்கால அதிபராகச் சில ஐரோப்பிய நாடுகள் அங்கீகரித்துள்ளன. பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் மற்றும் ஸ்பெய்ன் உள்ளிட்ட நாடுகள் இதில் அடங்குகின்றன. புதிதாகத் தேர்தலை நடத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த கோரிக்கையை வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ நிராகரித்ததையடுத்தே இந்த நாடுகள் குவைடோவை அங்கீகரித்துள்ளன.

**பின்னணி**

தென் அமெரிக்காவில் எண்ணெய் வளம் மிகுந்த நாடுகளில் ஒன்று வெனிசுலா. அங்கு அதிபராக இருந்த ஹுக்கோ சாவேஸ் அமெரிக்காவின் பாரபட்சங்களுக்கு எதிராகப் போராடிய போராட்ட வீரர். அவர் சாவடைந்த பின்னர் மதுரோ பதவி ஏற்றார். கடந்த மாதம் வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவர் குவைன் குவைடோ அமெரிக்கா ஆதரவுடன் தன்னை இடைக்கால அதிபராக அறிவித்துக் கொண்டார். அமெரிக்கா அவருக்கு ஆதரவளிக்கிறது. ஆனால், அவருடைய சொத்துக்கள், வெளிநாட்டுப் பயணங்கள் வெனிசுலா அரசால் முடக்கப்பட்டுள்ளன. வெனிசுலாவின் உள்நாட்டு விடயங்களில் தலையிட வேண்டாம் என்று ரஷ்யா அமெரிக்காவின் தலையீட்டை எதிர்க்கிறது. வெனிசுலாவில் அரசியல் ஸ்திரமற்ற நிலை நீடிக்கிறது. மதுரோவுக்கு ஆதரவாக இராணுவ்மும், நீதித் துறையும் இருந்து வருகின்றன.



# விஜய் மல்லையாவை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு பிரிட்டன் உத்தரவு

லண்டன்.பெப்.6
வங்கிக் கடன், மோசடி உள்ளிட்ட வழக்கில் விசாரணை நடத்துவதற்காக இந்தியத் தொழிலதிபர் விஜய் மல்லையாவை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு பிரிட்டன் உள்துறைச் செயலர் சாஜித் ஜாவித் உத்தரவிட்டார்.



இந்திய நீதிமன்றத்தில் அவர் மீதான விசாரணைகளுக்குப் பதில் அளிக்கவேண்டிய கடப்பாடு அவருக்கு இருப்பதாக லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றம் ஏலவே சுட்டிக் காட்டி யிருந்தது.

நாடுகடத்தல் ஒப்பந்த நடைமுறைகளின் படி தலைமை நீதிபதியின் உத்தரவு உள்துறைச் செயலருக்கு அனுப்பப்பட்டது. அவர்தான் இது குறித்த உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் உடையவர். இந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் நாடுகடத்தல் ஒப்பந்த நடைமுறையில் கையெழுத்திட்டார் பிரிட்டனின் மூத்த அமைச்சர் சாஜித் ஜாவித். ஆனாலும் இந்தியாவுக்குத் தன்னை நாடு கடத்தும் உத்தரவை எதிர்த்து விஜய் மல்லையா பிரிட்டனின் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்வதற்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. இது குறித்து மேல் முறையீடு செய்யவிருக்கிறேன் என்று விஜய் மல்லையா கீச்சகத்தில் பதிவிட்டிருக்கிறார்.

**பின்னணி**

இந்திய வங்கிகளில் 9 ஆயிரம் கோடி(இந்திய மதிப்பில்) வரை கடன் பெற்று, அதைத் திருப்பிச் செலுத்தாத தொழிலதிபர் விஜய் மல்லையா பிரிட்டனில் தஞ்சமடைந்துள்ளார். அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இந்திய நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அவரை இந்தியாவுக்குக் கொண்டுவருவதற்காக சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை இந்திய அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

## விமானம் விழுந்து அமெரிக்காவில் ஐவர் சாவு

கலிபோர்னியா.பெப்.6
அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் கூரையுடன் சிறிய ரக வானூர்தி ஒன்று மோதுண்டது. இந்த விபத்தில் சிக்கி ஐவர் சாவடைந்தனர். அருகிலுள்ள வானூர்தி நிலையத்தில் இருந்து மேல் எழும்பிய ஒரு விமானியை மாத்திரம் கொண்ட அந்தச் சிறிய ரக வானூர்தி பறந்து கொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டை இழந்தே குறித்த வீட்டின் மீது விழுந்தது.

உடனே அது தீப்பிடித்து எரிந்தது. இதில் விமானியும் அந்த வீட்டில் இருந்த 4 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிச் சாவடைந்தனர்.

# ஜப்பானில் பனித் திருவிழா

டோக்கியோ.பெப்.6
ஜப்பானின் சப்போரோ பகுதியில் பனித் திருவிழா களைகட்டியுள்ளது. அங்கு ஏராளமான பனிச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



ஜப்பானின் வடக்கு பகுதியில் நடக்கும் இந்தப் பனித் திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்த குளிர்காலத் திருவிழா ஆகும். பெப்ரவரி மாதத்தில் 7 நாள்கள் நடைபெறும் இந்த விழாவில் ஆண்டு தோறும் சுமார் 2 மில்லியன் மக்கள் கலந்துகொள்வார்கள். இந்தத் திருவிழாவில் 200க்கும் மேற்பட்ட பனிச்சிற்பங்கள் செய்யப்படுகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான பனித் திருவிழா நேற்றுத் தொடங்கியது.

11ஆம் திகதி வரை இந்தத் திருவிழா நடைபெறும்.

இந்தத் திருவிழாவில் பனிச் சிற்பங்கள் பரவலாக அமைக்கப்பட்டுள்ளன. புகழ் பெற்ற கார்ட்டூன்கள், மலைகள், கட்டடங்களின் வடிவமைப்பு, பனிக்குகைகள், விளையாடும் சிறுவர்கள், குதிரைப் பந்தயம் போன்ற அமைப்பில் 33 அடிக்கு மேல் உயரமாக இந்தப் பனிச் சிற்பங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.



## வட கொரியா மீது ஐ.நா. குற்றச்சாட்டு

நியூயோர்க், பெப்.6
ஐக்கிய நாடுகள் சபை புதிதாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் வடகொரியா அணு ஆயுதங்களைப் பாதுகாக்கிறது என்று கூறியுள்ளது. 315 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை கடந்த திங்கட்கிழமை வெளியானது. அதில், "வடகொரியா அணுஆயுதங்களைப் பாதுகாக்கிறது. எந்த இராணுவத்தின் மூலம் அழிக்க முடியாத திறனுடன் அவற்றை அந்த நாடு வைத்துள்ளது. இதற்கு ஆதாரங்கள் உள்ளன. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வடகொரிய அதிபர் கிம்முடனான உறவில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்" என்றுள்ளது. இந்த அறிக்கைக்கு வடகொரியா தரப்பில் எவ்வித பதிலும் வெளியிடப்படவில்லை.


**பின்னணி**

உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22வரையான ஏவுகணைச் சோதனைகளை நடத்தியது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடந்தன. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் எதிர்த்தன.

ஆனாலும் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியது. அமெரிக்கா தலைமையில் வடகொரியா மீது ஐ.நா. பொருளாதாரத் தடைகளை விதித்தது. தடைகளைப் பொருட்படுத்தாமல் வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நடத்தியது. இந்த நிலையில் தென்கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற்றது. அதுமுதல் வடகொரியா - தென் கொரியா உறவில் இணக்கம் காணப்பட்டது. தொடர்ந்து ட்ரம்ப் -கிம் இடையே சிங்கப்பூரில் சந்திப்பு நடந்தது. இந்தச் சந்திப்பில் அணு ஆயுதங்களை அழிக்க வடகொரியா சம்மதம் தெரிவித்தது. இரண்டாவது சந்திப்பும் ஏற்படாகியுள்ளது.

# உருளைக் கிழங்குக்குள் உலகப்போர் குண்டு

ஹொங்காங்.பெப்.6
சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்காங்கில் பிரான்ஸிலிருந்து இறக்குமதியான உருளைக்கிழங்குகளுடன் முதலாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட கைக்குண்டு ஒன்றும் இருந்துள்ளது. ஹொங்காங்கின் 'நியூ' பிராந்தியத்தில் உள்ள சாய் குங் மாவட்டத்தில் தின்பண்டங்கள் செய்யும் தொழிற்சாலையிலேயே இந்தக் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. உருளைக்கிழங்குக்குள் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு பதற்றத்தை உருவாக்கியது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிசார் மற்றும் வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் அந்தக் கைக்குண்டைச் சோதனை செய்த பின்னர் அது முதலாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்டது என்று தெரிவித்தனர். பின்னர் அதைச் செயலிழக்கச் செய்தனர்.



# முப்பரிமாண முக மூடிகள் ஜப்பான் நிறுவனம் அசத்தல்

டோக்கியோ.பெப்.6
ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று முப்பரிமாண வடிவமைப்பில் மனித முகமூடிகளைத் தயாரித்துள்ளது.

மனித முகம் சற்றும் மாறாத வகையில் ஜப்பானைச் சேர்ந்த 'ரியல்எப்' என்ற நிறுவனம் முப்பரிமாண முக மூடிகளைத் தயாரித்துள்ளது.

இவை உறுதியான பிளாஸ்ரிக் கொண்டு செய்யப்படுவதால் அசைக்க முடியாதவை என்றும் மருத்துவத்துறையிலும், மனித உருவில் உருவாகும் ரோபோக்க ளுக்குப் பொருத்துவதற்கு இவை மிகவும் வேண்டப்படுபனவாக அமையும் என்றும் குறித்த நிறுவனம் கருத்துரைக்கிறது.



உதயன்
புதன் பொய்கை
பெப்ரவரி 6, 2019
@UthayanPrint

# அருமருந்தான அழகியற்கல்வி

க.ரட்ணேஸ்வரன்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த காலங்களில் அழகியல் துறைசார் நிகழ்வுனூடே பல அரிய செயற்றிட்டங்களை நிறைவேற்றியுள்ளது. தற்போது மீண்டும் அந்தச் செயற்பாட்டின் தொடர்பாக கல்வியியல் புலத்தில் இணைவதன் முதல் நிகழ்வாக நாளைமறுதினம் நடைபெறவுள்ள 'கலை நிகழ்வுகளும், ஓவியக்காண்பியமும்' தொடர்பாக இந்தக் கட்டுரை பிரசுரமா கிறது.

**மனிதன் மாண்பாங்கு வாழ அழகியற்கல்வி அருமருந்து**

போரால் பாதித்த மாணவ மனங்களில் உள உய்வினை கலைகள் ஏற்படுத்தும். மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்தும் உயர்ந்த தேர்ச்சிகளாக கலைகள் அமைகின்றன. மனித ஆளுமையும் ஆன்மிக சிந்தனைகளும் கலைகள் மூலம் உருப்பெறுகின்றன என்பது கலை ஆய்வாளர்களின் கருத்தாகும். ஏனைய துறைகளிலும் விட அழிவுப்புலமும் ஆற்றல் வளமும் உள இயக்கமும் உரிய முறையில் இணைக்கப்படுகின்ற நெறியாக அழகியல் காணப்படுகின்றது.

**கற்பித்தலில் அழகியல்**

நவீன கற்றல், கற்பித்தல் முறைகள் எது புகுத்தப்படினும் கலைத்துவம் நீங்கிய கல்விச் செயற்பாடுகள் வெறும் உப்பில்லாப் பண்டங்களாகவே அருகி விடுகின்றன. எந்தப் பாடநெறியாகிலும் பலதரப்பட்ட மாணவ நிலைகளுக்கு ஒரு புரிதல் உணர்வை ஏற்படுத்த கலைச் செல்வாக்கு வெற்றியளிக்கின்றது. பல்வேறுபட்ட சூழல் காரணிகளால் உடல், உளக் குறைபாடுகளின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற எமது தேசக் குழந்தைகளுக்கு அழகியல் மூலமான அறிவூட்டல்கள் தகுந்த ஆற்றுப்படுத்தல்களாக அமைகின்றன.

**பாடசாலைகளில் கலைக்கல்வி**

இன்றைய நவீன கல்விச் செல்நெறியில் கலைத்துவச் செயற்பாடுகளின் அவசியத்தை கல்விப்புலம் கவனத்தில் கொள்வதில்லை. விருந்தி னர்களை வரவேற்கவும் மகிழ்ச்சிப் படுத்தவும் கலைத்துறைகள் பாவனைப்படுத்தப்படுவது கவலைக்குரியதாகவுள்ளது. பல்வேறுபட்ட துன்பியல் நிகழ்வுகளில் இருந்து மீண்டெழ வழிகோலக் கூடிய கலைக் களஞ்சியங்கள் கேளிக்கைக்காக மட்டும் நிகழ்த்தப்படுவது பொருத்தமானதல்ல. உறங்கிக் கிடக்கின்ற பல பாடசாலைகள் கலை வெளிப்பாடுகளூடே வலயம், மாகாணம், தேசிய மட்டங்கள் என முதன்மைநிலை அடைகின்றன. இவை வெறும் செய்திகளுக்கும் பாராட்டுகளுக்கும் உட்பட்டு பின்னர் அடங்கி விடுகின்றன.

**அழகியல் விழுமியங்களை மேம்படுத்தும் தன்மையுண்டு**

வளர்ச்சியடைந்த நாடுகள் பல இன்று மீண்டும் அழகியலையும் ஆன்மிகத்தையும் நாடி நிற்கின்றன. மனித வாழ்வில் பொருளியல் நிறைந்தாலும் மகிழ்வும் மனித



மும் இல்லையே என ஆதங்கப்படுகின்றன. இதனால் மீண்டும் இந்த இடங்களில் இருந்து மீண்டெழ அழகியலையும் ஆன்மிகத்தையும் நாடி நிற்கின்றன. உலகளாவிய ரீதியில் இன்றைய இனங்கள் எல்லாம் தமது அடையாளங்களை பாதுகாக்கவும் பேணவும் அவற்றை நிலைநிறுத்தவும் இவைகளையே பெரிதும் நம்புகின்றன. தேசியத்தின் மூச்சும் பண்பாட்டு விழுமியங்களின் பேச்சும் கலைத் தழுவலிலே நிலைத்திருக்கின்றன.

வகுப்பறைக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட எமது கல்வி முறைமை பரீட்சைகளை மையமாகக் கொண்டமைகின்றன. இவ்வாறான கல்வி முறைமையால் மாணவர்கள் ஓர் இயந்திர வல்லுநர்களாகவே இயங்குவர். தவிர சமூகத்துக்கு பயன்தரு நல்லவர்களாக பண்பட இடமில்லை. இவர்கள் சுய நோக்கங்களாக மானுடப் பண்புகளைத் தொலைத்தவர்களாகவே மீதமாகின்றனர். எமது சமூக எத்தனத்தின் வெற்றியானது ஒவ்வொரு தனிநபரிலும் பொது உழைப்பிலும் தங்கியுள்ளது. பலவித கருத்து வேறுபாடுகளுக்குள் ஒத்துவருதல் ஒரு குறிக்கோளை நோக்கி கூட்டாகவும் நல்லெண்ணத்துடனும் முன்னேறுதல். ஒவ்வொருவரினதும் திறமைகளை மதித்தல் விமர்சனங்களைச் சகித்துக்கொள்ளுமல் போன்ற உயர் மனப்பாங்குகள் விருத்தி செய்யப்படுவது அழகியல் கல்வி மூலம் எளிதாக ஏற்படுத்தப்பட முடிகின்றது.

பலவித உடல் உளக் குறைபாடுகள் நிறைந்துள்ள எமது சமூகத்தில் பாதிச் செலவில் ஈடுபட திறமை வாய்ந்த தலைமைத்துவம் அவசியமாகும். தொடங்கும் ஆற்றல், எதிர்கால தூரதரிசனம், தொடர்பாடல் ஆற்றல் போன்ற தலைமைத்துவக் குணங்கள் விருத்தியாகின்ற ஒருபுலமாக அழகியல் அமைகின்றது.

மனிதர்கள் அவரவர்மீது அனுதாபமும் அன்புணர்வும் செலுத்துவதால்தான் அத்தகைய மனித சமூகமொன்றில் வாழ்தல் ஆறுதலளிக்கும். இன்று சமூக நடப்பிலுள்ள பல்வேறு பிறழ்வுகளை அவதானிக்கும்போது இளவயதினரே அதில் அதிகம் ஈடுபடுகின்றனர்.

நாளாந்த செய்திகளை அறிகின்றபோது வன்முறைச் சம்பவங்களும் சமூகச் சீரழிவுகளும் இல்லாமல் இல்லை. பழிவாங்கும் படலங்கள், கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள், பெற்றோர், ஆசிரியர்களை மதிக்காமை, போதைப்போருள் பாவனை என பல்வேறு பிறழ்வுகள் பாரதூரமாகின்றன.

**நவீன இலத்திரணியல் சாதனங்களின் சீரழிவு**

பல்வேறுபட்ட சமூகப்பிறழவுகளுக்கு இன்று புழக்கத்திலுள்ள பல்வேறு வகையான தொலைத்தொடர்பு சாதனங்கள் (கைத்தொலைபேசி) வழிசெய்கின்றன. தென்னிந்திய சாக்கடைச் சினிமாக்கள், தொடர் தொலைக்காட்சி நாடகங்கள் போன்றன பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. இது வயது வேறுபாடின்றி யாவரும் எந்த நிகழ்ச்சிகளையும் பார்க்க வேண்டிய நிலைமைகளை அவதானிக்க முடிகின்றது. இது இளம் வயதினரை வெறும் கற்பனை மன்னர்களாக களியாட்ட தேவதைகளாக உருவாக்குகின்ற நிலை மிகவும் கவலைக்குரியது.

**அழகியல் கல்வி அருமருந்து**


பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக சூழ்நிலைகளின் நெருக்கீடுகளால் மீண்டெழுவதற்கு அழகியல் கல்விமூலம் கிடைக்ககப்பெறுகின்ற தேர்ச்சிகள் பிள்ளைகளுக்கு சமநிலை ஆளுமையை ஊட்டவல்லன. இளைய சமூகப் பிரச்சினைகளை ஆதரவுடனும் அனுதாபத்துடனும் அணுகும் திறனும் அன்பு, தயவு, கீழ்ப்படிவு போன்ற மானூடநேயம் சிறுபாராயத்திலிருந்தே வளர்த்துக் கொள்ள அழகியற்கல்வி பேருதவியாகின்றது.

**அனுதாபமுடையதும் அழகானதுமான எண்ணம் விருத்தியாதல் அழகியலில்**

எமது சமூகத்தில் முரண்பாடுடைய பகை, பழிவாங்கல், குரோதம் போன்ற தீய உணர்வுகள் மறைந்து மனித ஆதரவும் நயக்கும் திறனுமுள்ள அறிவுள்ள மனிதர்களை வெளிக்கொணர்வதற்கு அழகியல் கல்வி பேருதவியாக அமைகின்றது. மனித இனத்தின் முன்னேற்றத்துக்கான தன்னடக்கமுள்ள பெறுதலானது கலைக் கல்வி மூலம் சாத்தியமாகின்றது.

சுற்றத்தையும் சுற்றாடலையும் நேசிக்கவும் மதிக்கவும் தெரிந்த ஒவ்வொரு இயல்பாகவே மனிதநேய விருத்தி ஓங்குகின்றது. ஒரு மனிதன் தான் வாழும் பிரதேசத்திலும் நாட்டிலும் உயர்ந்த அழகை நன்கு ரசிக்கவும் மதிக்கவும் பாதுகாக்கவும் நிலைபெறச் செய்யவும் அழகியல் அருந்துணை புரிகின்றது. ஆகவே அழகியலை அரவணைப்போம் அழகாக வாழ்ந்திடுவோம்

*விரிவுரையாளர்*
*சித்திரத்துறை*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி*



# இறை நம்பிக்கை வெற்றியை தரும்



அல்லாஹ் வெற்றியைத் தர நாடினால் படைபலமோ, எந்த போர் தந்திரங்களோ தேவையில்லை. அவன் நாடியது நடந்தே தீரும். எண்ணிக்கையில் குறைவாய் இருந்தாலும் இறை நம்பிக்கையில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

நபிகள் நாயகம் (ஸல்), 'இறைவன் ஒருவனே, அவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாரும் இல்லை', என்ற ஓரிறைக்கொள்கையில் உறுதியாக இருந்தார். அதையே மக்களிடமும் வலியுறுத்தினார். இதில் இருந்த உண்மையையும், அல்லாஹ்வின் அருட்கொடைகளையும் அறிந்த மக்கள் கூட்டம் கூட்டமாக தங்களை இஸ்லாத்தில் இணைத்துக்கொண்டனர்.

இதை அரபு தேசத்தில் உள்ள குரைஷி இன மக்கள் எதிர்த்தனர். அதோடு நபிகளாருக்கு எதிராகப் போர் தொடுத்தனர். பத்ர், உஹது ஆகிய இரு போர்களில் குரைஷிகள் தோல்வியைத் தழுவினார்கள். ஆனாலும் அவர்களின் வெறி தணியவில்லை.

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற கோட்பாட்டில், நபிகளுக்கு எதிராக இருக்கின்ற யூதர்களுடன் அரபுத்தலைவர்கள் ஒப்பந்தம் செய்தார்கள். அனைவரும் ஒன்று திரண்டு பெரும்படையுடன் மதினாவை தாக்கி அழிப்பதுடன், நபிகளாரை கொலை செய்யவும் திட்ட மிட்டனர்.

இந்தச் செய்தி ஒற்றர்கள் மூலமாக நபி பெருமானாருக்கு தெரிய வந்தது. நபிகளார் தமது தோழர்களை அழைத்து, இந்த இக்கட்டான தருணத்தில் நாம் எப்படி போர்த்தந்திரங்களை வடிவமைத்து கொள்வது என்று ஆலோசனை செய்தார். அப்போது, பாரசீக நாட்டைச் சேர்ந்த நபித்தோழர், சல்மான் பாரிஸ் (ரலி) இவ்வாறு கூறினார்: 'மதினாவில் நாம் எண்ணிக்கையில் குறைவாக உள்ளோம். அதன் எல்லைகளும் பாதுகாப்பற்ற நிலையில் விரிந்து உள்ளன. ஒரு சிறு இடைவெளியின் மூலம் கூட மதினாவில் எதிரிகளால் ஊடுருவி விட முடியும். நாம் மதினாவையும் அங்கு இருக்கும் பெண்கள், பெரியவர்களையும் பாதுகாக்க வேண்டும். எதிரிகளை எதிர்த்து போரிடவும் வேண்டும். எனவே முதலில் மதினாவை பாதுகாத்து கொண்டு பின்பு போர் புரியலாம். இது போன்ற சமயங்களில் பாரசீகத்தில் நகரைச் சுற்றி பெரும் அகழிகளைத் தோண்டி விடுவோம். அதனால் எதிரிகள் நகரை நெருங்கி வருவதை தடை செய்து விடுவோம். பின்னர் சற்றுத் தொலைவில் இருந்து அம்பெய்து போரிடுவோம். வாள் வீரர்களை விட அம்பெய்தும் வீரர்களைத் தான் அதிகம் இங்கே பயன்படுத்த வேண்டும். எனவே மதினாவைச்சுற்றி அகழி தோண்ட வேண்டும். அதிக ஆழமும் அகலமும் கொண்டதாக அது அமைய வேண்டும். அப்போது தான் எதிரிகளை கட்டுப்படுத்த முடியும்'. இவ்வாறு அவர் ஆலோசனை சொன்னார்.

அனைவரும் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டனர். எதிரிகள் மதினா வருவதற்குள் அகழி தோண்ட முடிவு செய்தனர்.

அது கடும் கோடை காலம். நபித்தோழர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். காலையில் வந்து அகழி தோண்ட ஆரம்பித்தால் மாலை வரை அந்த பணியைச் செய்தனர். பசிக்கு சரியான உணவு கிடைக்கவில்லை. தங்கள் வீட்டில் இருந்து உணவு எதுவும் கொண்டு வர முடியாத வறுமை நிலை. இருந்தாலும், அத்தனை துன்பங்களையும் தாங்கிக் கொண்டனர்.

இதை திருக்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது: 'அந்நேரத்தில் நம்பிக்கையாளர்கள் பெரும் சோதனைக்கு உள்ளாகி மிக்க பலமாக அசைக்கப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டனர்' (திருக்குர்ஆன் 33:11).

இதையெல்லாம் பொருட்படுத்தாமல் தோழர்கள் அகழி தோண்டும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார்கள். குதிரைகள் தாண்ட முடியாத அளவு அகலமும், குழிக்குள் குதிரைகள் விழுந்தால் எழுந்து வர முடியாத அளவு ஆழமும், 27 ஆயிரம் அடி நீளமும் கொண்ட அகழி மதினாவைச் சுற்றித் தோண்டப்பட்டது.

போர் ஆரம்பம் ஆனது. அபுசுபியான் தலைமையில் யூதர்களும், அத்தனை அரபு குல கோத்திரங்களும் இணைந்த 10 ஆயிரம் வீரர்கள் கொண்ட கூட்டு படை மக்கா நகரில் இருந்து புறப்பட்டது. அவர்களை எதிர்க்க நபிகளாரின் தலைமையில் 3 ஆயிரம் வீரர்கள் கொண்ட சிறிய படை மதினாவில் திரண்டது.

மதினத்து எல்லையை அடைந்ததும் அரபு படைகள் அதிர்ச்சியில் உறைந்து போயின. ஆழமான, அகலமான அகழிகளைப் பார்த்ததும் திகைத்து நின்றனர். மதினத்து எல்லையைக் கூட அவர்கள் நெருங்க முடியவில்லை. துணிந்து நெருங்கினாலும் நபிகளார் தலைமையில் உள்ள படைகள் எய்த அம்பு மழையை அவர்களால் சமாளிக்க முடியவில்லை.

போர் பல நாள்கள் தொடர்ந்தது. எதிரிப் படைகளிடம் உணவுப் பொருள் தீர்ந்தது. அவர்களுக்கும் சோர்வு ஏற்பட்டது. அப்போது அவர்கள் மீது அல்லாஹ்வின் சோதனையும் இறங்கியது.

பெரும் புயல் காற்றும், மழையும் அவர்களது கூடாரங்களை அழித்து புரட்டிப் போட்டன. காற்று பலமாக வீசியதால், போர் வீரர்கள் நிற்க முடியாமல் தடுமாறி விழுந்தனர். திரும்பிச் செல்வதை தவிர வழியில்லை என்ற நிலை உருவானது. அதேநேரத்தில், நபிகளாரின் தலைமையிலான படையினருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. அரபுப் படை தோற்று சிதறி ஓடியது. நபிகளார் வெற்றிக்கனியைப் பறித்தார்கள்.

அந்த நிலைமையை திருக்குர்ஆன் இப்படி விவரிக்கின்றது:

'நம்பிக்கையாளர்களே, உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருட்கொடைகளை நினைத்துப் பாருங்கள். உங்கள் மீது எதிரிகளின் படைகள் அணி அணியாக வந்த சமயத்தில் புயல் காற்றையும், உங்கள் கண்ணுக்குப் புலப்படாத படைகளையும் அவர்கள் மீது நாம் ஏவினோம். அச்சமயம் நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் உற்று நோக்குபவனாகவே இருந்தான்' (33:9).

அல்லாஹ் வெற்றியைத் தர நாடினால் படைபலமோ, எந்த போர் தந்திரங்களோ தேவையில்லை. அவன் நாடியது நடந்தே தீரும். எண்ணிக்கையில் குறைவாய் இருந்தாலும் இறைநம்பிக்கையில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

# திருகோணமலையில் இடம்பெற்ற ஆங்கில நூல் வெளியீட்டு நிகழ்வு!

ஆங்கில ஆசிரியர் ஆர்.என்.பிரதீபன் எழுதிய ஈசி லேர்னிங் இங்கிலிஸ் கிரமர் (Easy Learning English Grammar) எனும் நூல் வெளியீட்டு விழா திருகோணமலை உவர்மலை விவேகாணந்தா கல்லூரி கலை மண்டபத்தில் கடந்த 2ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

நீங்களும் எழுதலாம் ஆசிரியர் கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் மங்கல விளக்கு ஏற்றுவதையும், தனபாலசிங்கம் தலைமையுரை வழங்குவதையும், நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் பிரதீபன் முதன்மை அதிதிக்கு வழங்கி வெளியீட்டு வைப்பதையும், சிறப்பு பிரதியை கவிஞர் மு.யாழவனுக்கு தனபாலசிங்கம் வழங்கி வெளியீட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.









# வலு

## மறுவற்ற வலு

கே.எஸ்.சிவஞானராஜா

"வலு"என்ற பெயரோடு சிறப்புத் தேவையுடைய வர்களின் தகவல்களைத் தாங்கிவரும் காலாண்டுச் சஞ்சிகையே வாசகர்களை ஒரு குடும்பம் ஆக்குகின்றது. இந்தச் சஞ்சிகை யாவருக்கும் சென்று சேரும் வண்ணம் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளாக வேண்டும். காரணம் இறைவன் எமக்களித்த பேறுகளுடன் நாம் பூரணமாகப் பெற்றிருக்கின்ற வரங்களை நாம் அனுகூலமாக்குவதே நம் பொறுப்பாக இருப்பதற்கு இது வேண்டப்படுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால் நாம் சிறப்புத் தேவையுடையவர்களை வரமாக்க வேண்டும்.

வலு என்ற பதம் ஆன்மாவின் உச்சமான பலத்தை உடலிலும் படைப்பிலும் கொண்டு வருவதாகும். சிறப்புத் தேவையுடைய ஒரு நபருக்கு இந்தப் பலம் சாதாரண ஒரு மனிதனைவிட இரட்டிப்பானதாகும். இதன் உபகாரமே "வலு" என்ற சஞ்சிகையாகும்.

**அழகான படைப்பு**

அழகான முகப்பு! அச்சொட்டான பெயரின் வடிவமைப்பு. அர்த்தமுள்ள முத்திரைச்சின்னம். அதனுள் சிறப்புத் தேவையுடையவர்களின் அடையாளங்கள். நீல, ஊதா, மண்ணிற வர்ணங்களின் வாயிலாக வெளிப்பட்டு நிற்கும் கருவூலங்கள் யாவுமே தரம் கூட்டி நிற்கின்றன. மனிதா மனிதா மனிதனை மாற்று, நாளைய விடியலின் வழியாவோம். ஆகிய இரண்டு கவிதைகளும் தோரணங்களாக அமைய தலைமை ஆசிரியர் க.தர்மசேகரத்தின் கைவிளக்கு எம்மை உள்ளே அழைத்துச் செல்கிறது.

உலக விருட்சங்களில் றிச்சட்பேர்ண்ஸ்டைனின் வாழ்க்கைக்குறிப்பு ஒவ்வொரு மனிதனையும் தட்டி எழுப்புகிறது. ஞானனேந்திரனுக்கு ஒரு பதக்கம் சூட்டலாம். பாலபாரதியின் ஓட்டிசம்க (autism) ட்டுரையும் செய்திச் சாளரமும் மிகவும் வலுக் கொண்டவை. திருநங்கைகளின் உரிமையோடு கருணாநிதி உயிர் பெறுகிறார். கால்களும், கைகளும் இல்லாத 'அச்மத் ஜீல்கா' தனது படைப்பின் மூலம் பிரம்மா ஆகின்றார். சிகரம் தொட்ட சிகை அலங்காரத் தொழிலாளியின் கரங்களில் கடவுளைக் காண்கின்றோம். நாம் மனிதனாக மாறுவதற்கு இவற்றை ஒருமுறையல்ல பலமுறை படிக்க வேண்டும்.


மேலும் தசரசம் இனிக்கிறது. பஞ்சி ஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க என்ற பாடலும் பொன்னின் ஒளி பூவின் வெறி சாந்து பொதி சீதம் என்ற சீதையின் நடையும், சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப என்ற சுரமஞ்சரியின் காட்சியும் அற்புதம். நா.கீதா கிருஷ்ணனின் தொகுப்பும் பலே. இலக்கியம் எம்மைப் பரவசப்படுத்துகிறது.


அவசிய தொலைபேசி இலக்கங்களை அவசரமாய் ஒட்டி வைக்கவேண்டும். காடுகளுக்குள்ளும் பயமின்றி எம்மை அழைத்துச் செல்கிறார்கள் சிறப்புத் தேவையுடையவர்கள்.

செவ்வாயிலும் புயலா? நம்பவே முடியவில்லை. விணோதினியின் வரலாறு எழுதப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் விழிப்புணர்வுக்கு விணோதினியின் பயணம் ஒரு பாடமாக அமையட்டும்? அவர்காலில் செய்யப்பட்ட இருபத்தைந்து அறுவைச் சிகிச்சைகளும் கண்டிப்பாக இருபத்தைந்து சாதனைகளை இங்கு சாதித்தே தீரும்.

இரண்டு கையிருந்தும் நாம் என்னதான் சாதித்தோம்? சுகில் அப்பாஸ் என்ற வீரன் தனது இடக்கை இல்லாதபோதும் பன்னாட்டும் தரவரிசையில் பதினாறாவது இடம் என்பது இலேசான காரியமா? நாம் எதைத்தான் ஒழுங்காகச் செய்திருக்கிறோம்? தோற்றே போய்விட்டோம். சிவராசாவின் சிறுகதை நாவற்குழியோடு முடியவில்லை. நாடுமுழுவதற்குமான இந்தச் சிறுகதைக்கு நன்றி சொல்ல வைத்துவிட்டது. மொத்தத்தில் மறுவற்ற வலு இது.








மூத்த எழுத்தாளர் டாக்டர் இராஜ.தர்மராஜாவின் நினைவேந்தல் நிகழ்வு நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை ரி.டி. டி.எ.மண்டபத்தில் கடந்த 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. (40)





ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும்

# மலையக மக்களினுடைய வாழ்வியல் பிரச்சினைகள்

ஆய்வாளர் : புயல் ஸ்ரீகந்தநேசன்



**ஆய்வுச் சுருக்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைக்கு பெருந்தோட்டக் கூலிகளாக தமிழ் நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட தொழிலாளர்களின் பரம்பரையினரே மலையக மக்கள் என்ற பெயரில் இன்று இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் குடியியல் உரிமைகளைப் பெற்று தமது வாக்குப் பலத்தால், நாடாளுமன்ற ஆசனங்களைக் கூட கைப்பற்றிய இந்த மக்கள் சுதந்திர இலங்கையில் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டங்களினால், நாடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். தோட்டங்களில் கூலித்தொழிலாளர்க ளாக இருந்து வந்தவர்களுக்குக் கல்வி அறிவு இல்லாததால், தமது பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ், தமது திருமண பதிவுச் சான்றிதழ், பிரசா உரிமைச் சான்றிதழ் முதலிய எந்தவொரு ஆவணத்தையும் பேணிப் பாதுகாக்க இவர்கள் அக்கறை காட்டவில்லை. இதனால், இவர்களின் பிள்ளைகளும் கல்வி வாய்ப்பை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பிறப்புப் பதிவு இல்லாததால், தேசிய அடையாள அட்டையைக் கூட இவர்களின் பிள்ளைகள் பெறமுடியவில்லை. கல்வி உரிமை, தொழில் வாய்ப்பு, வெளிநாட்டுப் பயணத்துக்கான வாய்ப்பு, வாக்குரிமை முதலிய பல்வேறு குடியியல் சார் பிரச்சினை களை இவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தன. இவ்வாறான பிரச்சினை களை இந்த மக்கள் எதிர்நோக்கியபோது அவர்கள் அனுபவித்த துன்பங்களையும் அவற்றிலிந்து விடுப டக்கூடிய வழிவகைகளையும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளிகள் பலர் தமது சிறுகதைகளில் எடுத்துக் காட்டியுள்ளனர். அவற்றை எடுத்துக் காட்டுவதுடன், மலையக மக்களின் வாழ்வில் இன்னும் விடியலுக்கான அறிகுறிகள் தென்படவில்லை என்பதைக் காட்டுவதாக இந்த ஆய்வு அமையும்.

**குடியியல் பிரச்சினைகள் குறித்த சிறப்பு நோக்கல்**

பழைய காலம் தொடக்கம் வியாபார நடவடிக்கை பொருட்டு, இந்தியாவிலிருந்து மலையக மக்கள் இலங்கைக்கு வந்து சென்றார்கள். எனினும் இலங்கையில் இன்று வாழ்கின்ற மலையக மக்களில் பெரும்பகுதியினர் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் பெருந்தோட்டங்களிலும் ஏனைய தொழில் திணைக்களங்க ளிலும் தொழில் புரிவதற்காக தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களின் வழித்தோன்றல்களாவர். இந்தியாவில் நிலவிய பஞ்சத்தினால், இலங்கைக்கு வந்த மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் கிடைக்கவில்லை. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன், மலையக மக்களில் தமிழர்கள் அதிகமானவர்களாக இருந்தமையால், அவர்களது பிரசாவுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டனர். சுதந்திரத்திற்கு முன் இந்த நாட்டின் பிரசைகளாக இருந்த இந்த மக்கள் சட்டசபைத் தேர்தலிலும் முதலாவது பொதுத் தேர்தலிலும் பங்குபற்றினர். 1948ஆம் ஆண்டு இந்த நாட்டின் முதலாவது நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரசாவுரிமைச் சட்டத்தின் மூலம் இம்மக்களின் வாக்குரிமையும் பிரசாவுரிமையும் பறிக்கப்பட்டன. 1948ஆம் ஆண்டுதொடக்கம்இன்று வரை நாடாளுமன்றத்தில் பல பிரசாவுரிமைச் சட்டங்கள் வந்தும் இம்மக்களின் குடியியல் பிரச்சினைகள் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை. இதனால் மலையக மக்களே இன்றும் அடிப்படை வசதிகள், முகவரிகள் அற்று வாழ்கின்றனர். மலையக மக்களின் குடியியல் பிரச்சினைகளை ஈழத்து தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் எவ்வாறு தமது சிறுகதைகளில் கையாண்டு உள்ளனர் என இனி நோக்குவோம்.

**காளிமுத்துவின் பிரசா உரிமை**

அ.செ.முருகானந்தன், 'காளிமுத்துவின் பிரசா உரிமை' என்னும் சிறுகதையில் காளிமுத்துவின் குடும்பம் ஒரு தலைமுறையாக இலங்கையில் வாழ்ந்து மலையகத்தின் பொருளாதாரத்திலும் இலங்கையின் பொருளாதாரத்திலும் உயர்வை உண்டு பண்ணியது. இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டங்களை அரசு பொறுபேற்கத் தொடங்கிய போது பிரசாவு ரிமை உள்ளவர்கள் மட்டுமே தோட்டத்தில் இருக்க முடியும். ஏனையவர்கள் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் அத்தாட்சிகள் காட்டித் தங்களை இலங்கைப் பிரசைகளாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற செய்தி காளிமுத்துவின் செவிகளில் விழுந்ததும். 'தேர்தலுக்கு நிற்ப தற்கோ அல்லது வேறு ஏதாவது அரசியல் கூத்தடிப்பதற்கோ அவன் பிரசாவுரிமைக்கு ஆசைப்பட வில்லை. அவன் கவலைப்பட்டதெல்லாம் வருங்காலச் சந்ததிகளாக விளங்கவிருக்கும் அவனது பிள்ளை குட்டிகளை எண்ணித்தான்.' என ஆசிரியரின் கூற்றாகவே எதிர்கால சந்ததியினர் பிரசாவுரிமை இல்லாததினால், பாதிப்படைகின்றனர் எனக் காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சிறுகதையில் காளிமுத்து பிரசாவுரிமைக்கு அத்தாட்சி தேடி அலைந்து களைத்துப் போய்விட்டான் என்பதைப் பின்வருமாறு காட்டியுள்ளார். கடைசியில் அத்தாட்சி கேட்டவர்களுக்கு அரசங்கன்றை அடிமரத்தோடு வெட்டிவீழ்த்தி மண்ணுக்குள் உள்ள வேர் பகுதியை கிண்டி எடுத்து மேலும் ஆழமாகத் தோண்டி 'இதோ அத்தாட்சி கிடைத்துவிட்டது நான் இலங்கையின் பிரசை அதற்கு இதை விட இன்னும் என்ன அத்தாட்சி கேட்கிறீர்கள்?' என கத்துகின்றான். அது ஒரு மனிதப்பிரேதத்தின் கை எலும்பு. 'ஐயா துரை மார்களே, இது என்பாட்டனாரின் கை எலும்பு எத்தனையோ வருடங்களுக்கு முனனே அவர் இங்கு புதைக்கப்பட்டவர். என்னை இலங்கைப் பிரசையாக்க உங்களுக்கு இந்த அத்தாட்சி போதவில்லை யென்றால், என்னை இந்தக்குழியிலே வைத்து உங்கள் கையினாலேயே தள்ளிவிட்டுப் புதையுங்;கள்' என காளிமுத்து மீண்டும்; கத்தியவாறு சொன்னான். அங்கு வந்த உத்தியோகத்தவர்கள் இவனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. என்று கூறிக்கொண்டு சென்றார்கள்.

**'முடிவு'**

எம்.வாமதேவன், 'முடிவு' என்னும் சிறுகதையிலே பெரியசாமியாரின் மகள் சிங்கள இனத்தைச்சேர்ந்த சிறிசேனா என்பவரை காதலிக்கின்றாள். இதனால், பெரியசாமியார் குழப்ப நிலையில் இருந்தார். இவர் ராணித்தோட்டத்து மக்களின் ஏக தலைவராக இருந்தார். மகள் சிறிசேனாவை திருமணம் செய்வதை வெறுத்தார். எனினும் பண்டாரவளையில் நடைபெறயிருந்த கூட்டத்தில் சிங்கள கடையர்கள் புகுந்து தாக்குதல் நடத்தினர். மலையக மக்களுக்காக சிறிசேனன் தனது இனம் என்று பாராமல் சிங்கள காடையர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினான். இதன்மூலம் பெரிசாமியார் சிறிசேனாவுக்கு மாமனாகினார். இந்த செய்தி ஊர்முழுவதும் பரவியது. என சிறுகதை நகர்கின்றது.

பண்டாரவளையில் நடைபெறப்போகும் கூட்டம் பிரசாவுரிமையைப் பெறுவதற்கான போராட்ட கூட்டம் என்பது பெரியசாமியாருக்கும் இன்னொரு தொழிலாளிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் மூலம் வெளிவருகின்றது.

'என்னா தலைவரே பேசாம வர்றீங்க. நமக்கு பிரசா உரிமை குடுத்துப்புடுவானா?'

'பொறுத்துத்தாங்க பார்க்கணும் நம்ம ஒண்ணும் இதில் சொல்லிப்புட ஏலுங்களா?'

இந்தச் சிறுகதையில் பெரியசாமியார் தனது மனைவி கனகம்மாவிடம் பின்வருமாறு கூறுகின்றார். என ஆசிரியர் காட்டியுள்ளார். 'ஒனக்கு இன்னா தெரியாதா இன்னைக்குத்தானே நம்ப பிரச்சினையெல்லாம் பேசுறதுக்கு பண்டாரவளையிலே மகாநாடு நடக்கப்போவுது எல்லாத்தலைவர்மார்களும் இன்றைக்குத்தானே ஒரே. மேடையிலே பேசப் போறாங்க இன்னைக்கு ரெண்டுல ஒன்னுதெரிஞ்சு போகும்' இதன் ஊடாக அவர்களின் பிள்ளைகள் பிரசாவுரிமை இல்லாததால், கல்விகற்பதற்கும் திருமணம் புரிவதற்கும் தடையாக இருப்பது வெளிக்காட்டப்படுகின்றன. எம்.வாமதேவன் இந்தச் சிறுகதையி னூடாக சிங்களவர்களும் சாதாரண தொழிலாளிகளாக அடிப்படை வசதிகள் அற்று தோட்டங்களில் வாழ்ந்தனர். என்பதை 'சிறிசேனா அந்த தோட்டத்திலே பிறந்தவன், வளர்ந்தவன். பெரியசாமியார் வசித்த லயத்து தொங்கக் காம்பரா தான் சிறிசேனா வின் வீடு...' என ஆசிரியர் குறிப்பிடு கின்றார். எனவே, மலையக தமிழர்களுக்கு பிரசாவுரிமை கிடைப்பதை சாதாரண சிங்கள மக்களாகிய பாட்டாளி வர்க்கத்தினர் எதிர்க்கவில்லை. முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த சிங்கள மக்களே எதிர்த்தனர். என்பதை எமக்கு மறைமுகமாக காட்டியுள்ளார், இவ்வாசிரியர்.

**'பார்த்தால் தெரியும்'**

டாக்டர் நந்தி, 'பார்த்தால் தெரியும்' என்னும் சிறுகதையில் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியையும் இடைநிலை கல்வியையும் பிறப்புச்சான்றிதழ் பத்திரம் இல்லாமல் தொடர்ந்தாலும் உயர்கல்வியைத் தொடரமுடியாது என்பதை பின்வருமாறு காட்டியுள்ளார். பொன்னுத்துரை ஆசிரியர் அக்காவின் மகனுக்கு பேச்சுப் போட்டியில் பரிசு கொடுப்பதற்காக தோட்டப் பையனான சக்திவேலனின் திறமைகளை தட்டிக்கழிப்பதும் வேறு யாராவது விசாரித்தால் 'சக்திக்கு பிரசா உரிமை கிடையாது பாவம்' என்று பொய் சொல்லி மழுப்பினார். இதைக்கேட்ட சக்திவேலும் அவன் அப்பாவிடம் எனக்கு பிரசா உரிமை கிடையாதாம். அதாலெ போட்டிக்கு போக முடியாது என்று வாத்தியார் சொன்னார். ஏனப்பா நமக்கு பெரிசா இல்லாது போனாலும் இப்படி சிறிசா உரிமை கூடக்கிடையாதா?' என்று கேட்டான்.

**'கனவு'**

என்.கே.ரகுநாதன், 'கனவு' என்னும் சிறுகதையின் ஊடாக இலங்கையிலுள்ள மலையகமக்கள் பிரசாவுரிமை பாறிக்கப்பட்டு, நாடற்றவர்களாக்கப்பட்ட கடந்தகால அரசியல் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு தனிமனிதன் ஒருவனின் வாழ்க்கைப் போராட்டத்தையும் அவலத்தையும் எடுத்து வியம்புகின்றார்.

கூலி வேலை செய்து பிழைப்பதற்காக எந்த உறவும் இல்லாமல் தனியாக இலங்கைக்கு வந்தவன். நாலு ஆங்கில வார்த்தை தெரிந்து கூலியாக இங்கு வந்தான். தேயிலை கொழுந்து கொய்யும் வேலையைத்தான் அவன் எதிர்பார்த்திருந்தான். ஆங்கிலம் தெரிந்தால், ஒரு தேயிலைத்தோட்ட முதலாளி அவனைத் தனது வீட்டில் வேலைக்கு அமர்த்தினார். யாழ்ப்பாணத்துக் கணக்கு பிள்ளையின் இளம் மனைவி மீது தோட்ட முதலாளி ஆசைகொண்டான். தனது இச்சையைப் போக்க பழனிச்சாமியின் உதவியை நாடினான். அவ்விருவரையும் இணைக்கும் பாலமாக இருக்க விரும்பாமல் தோட்டத்தை விட்டு களவாக ஓடிவந்து யாழ்ப்பாணத்தில் 'பாரத மாதா பாபர் சலூன்' என்ற பெயரில் சவரக்கடையை நடத்திவந்தான்.

சிறுவயதில் இருந்து வளர்த்த நாடு என்பதால், இந்த நாட்டின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டான். வாக்களிக்க உரிமை இல்லாததினால் எதையும் செய்துவிடமுடியாது. என்பதை அறிந்து இந்த நாட்டிற்கு சலூன் மூலந்தான் செய்யக்கூடிய சேவையை செய்யலாம் என்பதே அவனது வாழ்வின் கனவு. சலூனுக்கு வந்து போகும் தமிழ்ப்பாட ஆசிரியரின் நட்பு பழச்சாமிக்கு கிடைத்தது. கொழும்புக்குச் செல்லும் போது தனது சலூனை ஆசிரியரின் பொறுப்பில்விட்டு சென்றான். 'ஸெனித்' ரேடியோ வாங்கி வருவதாக சென்றவன் திரும்பி வரவேயில்லை. சில நாள்களுக்குப் பின்னர் அந்த தமிழ் வாத்தியாருக்கு பின்வருமாறு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.

'அன்பேயுருவான வாத்தியாருக்கு எழுதிக் கொள்வது.

கள்ளத் தோணியில் வந்ததாகச் சந்தேகித்து. போலீஸார் என்னைக் கைது செய்திருக்கிறார்கள் அவர்கள் கேட்கும் தஸ்தாவேஜுகளைச் சேகரித்து, நான் இலங்கையில் பலகாலம் வசித்தவன் என்று நிரூபிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கில்லை, அதனால், திரும்பவும் நான் அங்கே வருவேன் என்ற நம்பிக்கையுமில்லை. எல்லோருக்கும் வணக்கம் தெரிவிக்கவும்.

இச் சிறுகதையின் மூலம் பழனிச்சாமியின் கனவும் சோகமும் வெளிப்படுத்ப்பட்டிருந்தாலும் குடியியல் தஸ்தாவேஜுக்களான: பிறப்பு பதிவுச்சான்றிதழ், பிரசாவுரிமைச்சான்றிதழ், திரும ணப்பதிவுச் சான்றிதழ்,மரணப் பதிவுச்சான்றிதழ், தேசிய அடையாளஅட்டை, கடவுச்சீட்டு முதலியவை பெறமுடியாமல் பல லட்சமலையாக மக்களின் சோக வரலாறே என்பதையும் இலங்கை இந்திய அரசுகளின் தவறான முடிவால், இன்னும் பல லட்ச மலையக மக்கள் துன்னப்படுவதையும் இச் சிறுகதை ஞாபகமூட்டும்.

**'பிறந்த மண்'**

தி.ஞானசேகரனின், 'பிறந்த மண்' என்னும் சிறுகதை மாணிக்கத்தேவரின் குடும்பம் தோட்டத்தில்

டத்தில் பட்ட இன்னல்களையும் இந்தியாவில் பிறந்து இலங்கைக்கு வந்து நாற்பது வருடகாலமாக தேயிலைத்தோட்டத்தில் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை கழித்துவிட்டு இப்போது பிரசாவுரிமை இல்லாதகாரணத்தினால் தாய்நாட்டிற்கு திருப்பிச்செல்ல முடிவெடுத்ததையும் தனது மகன் இருளப்பனை கஷ்டப்பட்டு சிரேஷ்ட தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்திடையவைத்தும் இருளப்பன் அரச உத்தியோகங்களுக்கு மனு அனுப்பியபோதும் நேர்முகப் பரீட்சைகளுக்குச் சென்று வந்த போதும் அவனுக்குப் பிரசாவுரிமை இல்லை. அதனால், அரச உத்தியோகங்களுக்கு அவனால், அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்பட்டன. தேயிலைத்தோட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கும் பெரியோரின் சிபாரிசு இல்லாமல் கிடைக்கவில்லை. இதனால், உத்தியோகங்கள் தேடும் முயற்சியை அவன் கைவிட்டுவிட்டு ஒரு தேயிலைத் தொழிலாளியாக போனான். என்பதையும் கூறு கின்றது.

**'பிரிந்து செல்லும் ஒரு தோழன்'**

மொழிவரதனின், 'பிரிந்து செல்லும் ஒரு தோழன்' என்னும் சிறுகதை பாலாவின் குடும்பம் இந்தியாவிற்கு திரும்பி செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலையினையும் அதனால், அவனும் அவனது உறவினர்களும் நண்பனும் அடையும் வேதனையை வெளிக்காட்டுகின்றது. பாலா இந்தியா செல்ல விருப்பதை அறிந்து அவனது நண்பன் அவனது வீட்டுக்குச் செல்கின்றான். பாலா அவனை தனியாக அழைத்துக் கொண்டு போய் 'நம்ம சனம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த நேரம் கையிலே கொண்டு வந்ததுதான் என்ன? இந்த வயிற்றுக்காக நம்ப சனம் இரண்டு கைகளை நம்பியே வந்துச்சு. இப்ப திரும்பவும் இந்த வயிற்றுக்காக இந்த இரண்டு கைகளையும் நம்பியே போறம். நம்ம ஒழைச்சோம், ஒழைச்சோம், யாருக்காக, வெள்ளையனுக்காக ஒழைச்சோம். ஒழைக்கிற நம்ம சனத்திற்கா, விடிவுக்காக நம்ம ஒழைக்கலை! இதுதான் நம்ம செய்த பெரிய தவறு ஆமா. நம்ம விடுதலைக்காகவும் ஒழைக்கணும்...! என்னா சொல்ற?... நம்ம எல்லாம் விடிவுக்காக ஒழைக்கணும் நான் இந்தியாவுக்கு போனாலும் இதைத்தான் செய்வேன். நமக்கு எல்லாம் ஒண்ணுதான். எந்த நாடும் நமக்கு சும்மா சோறு போடவில்லை...' எனக் கூறுவதின் மூலம் மலையகமக்களின் சமூக விடுதலைக்காக நாம் கடந்த காலங்களில் ஒற்றுமையாகப் போராடாமல் சுயநலத்துடன் வாழ்ந்த



மையினால்தான், நாம் இப்போது நாடற்றவர்களாக இருக்கின்றோம். இனிமேலாவது ஒன்றிணைந்து போராடுவோம். என சமூக ஒற்றுமையையும் வலியுறுத்துகின்றார், சிறுகதை ஆசிரியர்.

**'மரக்கட்டை'**

செ.கணேசலிங்கன், 'மரக்கட்டை' என்னும் சிறுகதையில் தமிழர் சிங்களவர் என்று வேறுபாடு இல்லாமல் இன ஐக்கியத்துடன் கண்ணுச்சாமி பிரேமா இருவரினதும் காதலை நோக்கியுள்ளதுடன், அதிகாரவர்க்கங்களே, பாட்டாளிவர்க்கங்களை அடிமைப்படுத்துகின்றன. என மாக்ஷிய பார்வையில் நோக்கியுள்ளார்.

பிரேமா என்ற சிங்களப் பெண்ணை கண்ணுச்சாமி காதலித்தான். அவனது தந்தைக்கு உடல் நலக்குறைவு என கடிதம் எழுதி அவனை இந்தியாவுக்கு அழைத்து விட்டார்கள். அங்கு சென்ற பின்புதான் தெரியும் தனது காதல் விடயம் தெரிந்தே பொய் சொல்லி அழைத்துள்ளார்கள் என்று. அங்கு அவனுக்கு திருமணப்பேச்சு நடந்ததையும் தடுத்து நிறுத்தி இலங்கைக்குப் புறப்பட்ட போது பாஸ்போர்ட், வீசா கிடைக்கவில்லை. இலங்கையில் இருந்து இங்கு வந்த போது தந்தையின் உடல் நலக்குறைப்பாட்டை எண்ணியதனால், பாஸ்போர்ட், வீசா பற்றி சிந்திக்கவில்லை. இலங்கைக்குத் திரும்பிவருவதற்கு பாஸ்போர்ட், வீசாவிற்கு எழுதி ஏமாற்றம் அடைந்துவிட்டான். இலங்கையின் குடியியல் சட்டம் அவனை திரும்பிவர அனுமதிக்கவில்லை. முதலியவிடயங்களை கடிதத்தின் மூலம் பிரேமாவிற்கு தெரிவித்தான்.

இந்தக் காதல் ஜோடியைப் பிரித்தது காதலா? கண்ணுச்சாமியா? சட்டமா? என வினாக்களை எழுப்பி சட்டமே என்ற விடையையும் மறைமுகமாக ஆசிரியர் முன்வைக்கின்றார். இலங்கை இந்திய சட்டத்தினால், மலையகத் தமிழர்கள் அன்றி சாதாரண சிங்களத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வும் பாதிப்படைந்தது என்பதை இதன் மூலம் ஆசிரியர் காட்ட விழைவதோடு ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றி அதிகாரவர்க்கத்திற்கு அதாவது முதலாளி வர்க்கத்திற்கு சார்பாக சட்டங்களை இயற்றுகின்றனர் என்பதையும் ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார்.

**'நடுக்கடலில்'**

செந்தூரன் எழுதிய, 'நடுக்கடலில்' என்னும் சிறுகதையில் சண்முகப்பிள்ளை, தன்னை ஈன்ற தாய் சாவுப் படுக்கையில் கிடப்பதைப்பார்க்க டி.ஆர்.பி.யில் தற்காலிக வாசப்பர்மிட்டில் போய் வந்த குற்றத்திற்காகவும் டி.ஆர்.பி காலாவதியாகியும் ஐந்து ஆண்டுகளாக அரசினரை ஏமாற்றிய குற்றத்திற்காகவும் உடுத்த உடையோடு, அவரது மனைவி கர்ப்பவதி என்றும் பார்க்காமல், அவரை வீதியால் இழுத்துச்சென்று உடனடியாக கப்பலேற்றிவிட்டனர். அவரைத்தேடிச்சென்ற மனைவியும் நடுகடலில் கப்பலில் பயணித்தவாறு ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். சண்முகம் பிள்ளை மீண்டும் மனைவியைத் தேடிவந்து வள்ளம் கவிழ்ந்து சாவடைகின்றான் என சிறுகதை நகர்ந்து முடிகின்றது.

இவ்வாறு மலையக மக்கள் பல இடர்களினை குடியுரிமை இல்லாமல் அடைந்தனர். என வெளிப்படுத்தியுள்ளார்.

மலையக மக்கள் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் மேலே காட்டியவையைப் போன்று பல குடியியல் சார் பிரச்சினைகளை எதிர்நோக்கினர். அந்தப் பிரச்சினைகளைத் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் கலையழகுடன் தமது சிறுகதையில் கையாண்டுள்ளனர். பிரசா உரிமை இல்லாமல் எதிர்கால சந்ததியினர் பாதிப்படைதல், பிள்ளைகளின் கல்வி பாதிப்படைதல், திருமணம் தடைப்படுதல், உயர் கல்வியைப் பெற முடியாமை, கல்விசாரா நிகழ்ச்சிகளில் ஈடுபட முடியாமை, குடியியல் ஆவணங்கள் இல்லாமல் தேடி அலைதல், வாக்குரிமை இன்மை, படிப்புக்குத் தகுந்த தொழில் கிடைக்காமை, உழைப்புக்குப் பயன் கிடைக்காமை, சமூக ஒற்றுமை இன்மையால் உறவுகளை பிரிந்து செல்லல்,' பாஸ்போர்ட் விசா கிடைக்காமல் பிரிந்து வாழ்தல், காதல் பிரிவுகள், மரணங்கள், உத்தியோகம் இன்மை இவ்வாறாக பல்வேறு பிரச்சினைகளை குடியியல் ஆவணங்கள் இல்லாததனால், மலையக மக்கள்எதிர் நோக்கினர். எனசிறுகதைகள் காட்டி நிற்கின்றன. அத்தோடு இன ஒற்றுமை, போராட்டம், பொது நல போக்கில் இளைஞர்களைச் சிந்திக்கவைத்தல், இலங்கையை விட்டு வெளியேறாமை, சமூக ஒற்றுமை, தன்னம்பிக்கை முதலிய வழி முறைகளையும் பிரச்சினைகளிலிருந்து விடுபட முன்வைக்கின்றன.

இன்றைய காலக்கட்டத்தில் மலையக பிரதேசத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழும் மலையக மக்கள் குறிப்பாக மலையகத்தமிழர் தங்களின் பிறப்பு அத்தாட்சிபத்திரங்களில் இலங்கைத் தமிழர் என்றே பதிவை மேற்கொள்கின்றனர். அத்துடன் ஏனைய சமூகங்களுடன் கலப்புத்திருமணங்களும் ஏராளம் நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் அதாவது, 2100ஆம் ஆண்டளவில் இலங்கையில் மலையகத்தமிழர் என்ற பதம் இல்லாமல் போய் இலங்கை தமிழர் என்ற பதமே இருக்கும். சிறுகதை ஆசிரியர்கள் மலையக மக்களின் குடியியல் பிரச்சினைகளை பல கோணத்தில் அணுகியிருந்தாலும் ஒட்டுமொத்தமாக குடியியல் ஆவணங்கள் இல்லாமையால் அவர்கள் அடைந்த வாழ்வியல் பிரச்சினைகளையும் குறிப்பாக பிரசா உரிமை இல்லாததன் விளைவுகளையும் இலங்கையில் உள்ள ஏனைய மக்களுக்கும் இவர்களுக்கும் இடையிலான சமூக அந்தஸ்துகளையுமே வெளிப்படுத்தியுள்ளனர் என்பது வெளிப்படை.

## காற்றுவெளி இதழ் வெளியிடப்பட்டது!

மாசி மாத காற்றுவெளி இதழ் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. உரிய கட்டணங்களைச் செலுத்தி அதனை இணையத்தளங்களில் பார்வையிட முடியும் என்று இதழின் ஆசிரிய குழாம் அறி வித்துள்ளது. (ம)

# காளமேகத்தார் என்னும் கவிக் குசும்பர்! 2

பிரகாஸ்



தமிழ்க் கவியுலகில் தனக்கென தனியான முத்திரை பதித்த சில புலவர்களில் காளமேகத்தாரும் ஒருவர். சிலேடைகளை இயக்குவதென்பது காளமேகத்தாருக்குக் கைவந்த கலை. தேங்காயும் நாயும் ஒன்றாகுமா? அவை இரண்டுக்கும் இடையில் ஒரே குணம்தான் உள்ளதா?. ஆம் என்கிறார் காளமேளத்தார். தேங்காயையும் நாயையும் ஒப்பிட்ட அவரின் கவிச் சிறப்பை கடந்த வாரம் நோக்கினோம். இந்த வாரம் யானையும் வைக்கோலும் ஒன்றென்கிறார் அவர். பாடல் இது தான்.

*வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்*
*போரிற் சிறந்து பொலிவாகும் - சீருற்ற*
*செக்கோல மேனித் திருமலைரா யன் வரையில்*
*வைக்கோலும் மால்யானை யாம்.*

வைக்கோலானது வாரிக் களத்தில் அடிக்கப்படும். பின்னர் அது வைக்கோல் போர்க் கோட்டையாக புகுத்தப்படும். பின்னர் பொலிவுற்றிருக்கும் என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம்.

யானை பகைவர்களை வாரிப் போர்க்களத்தில் அடிக்கும். பின்பு வந்து அதன் கட்டுத்தறியாகிய கோட்டைக்குள் புகும். போர்க்களத்தில் சிறப்புடன் பொலிவுற்று விளங்கும் என்றும் இதற்கான பொருளை எடுத்துக் கொள்ளலாம். என்னவென்று சொல்வது காளமேகத்தாரை. அடுத்த வாரம் இன்னொரு பாடலுடன் காளமேகத்தார் வருவார்.



## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் – 10.02.2019

# குருந்தடி வெற்றி விநாயகர் ஆலயம்

### மு/காதலியார் சம்மளங்குளம், ஒட்டுசுட்டான்

Reg.No:HA/05/MU/186

**அஷ்டபந்தன சமர்ப்பண பஞ்சகுண்ட பக்ஷ**
**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 10.02.2019**

| | |
|---|---|
| **06.02.2019** | புதன்கிழமை அதிகாலை 5.30 தொடக்கம் 6.00 மணிக்கிடையில் கும்பாபிஷேக வழிபாடுகள் ஆரம்பம். |
| **08.02.2019** | வெள்ளிக்கிழமை மாலை 6.30 தொடக்கம் 7.40 மணிக்கிடையில் ஸ்தூபி ஸ்தாபனம் விம்பஸ் தாபனம் |
| **09.02.2019** | சனிக்கிழமை காலை 6.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை தைலாப்பியங்கம் (எண்ணெய்காப்பு) |
| **10.02.2019** | ஞாயிற்றுக்கிழமை காலை 8.57 தொடக்கம் 10.09 மணிக்கிடையில் மஹாகும்பாபிஷேக வைபவம். |

**அனைவரும் வருக வெற்றி விநாயகர் கழல் தொழுக**
**வேழ முகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும்**
**வெள்ளைக் கொம்பன் வெற்றி விநாயகனைத் தொழ**
**துள்ளியோடும் தொடர்ந்து வினைகளே**

சரணம் ! சரணம் ! சரணம்

**ஆலய பரிபாலன சபையினரும், சம்மங்குளம் மக்கள் முன்னேற்றக்கழகம் பிரித்தானியா**
**மற்றும் கிராம மக்களும், புலம்பெயர் உறவுகளும்.**

(CS 00468)(4.17)



# இலங்கையில் முதலாவது "துவாரகாமயி"
# பிரவேசமும் நூதன பாபா விக்கிரக
# பிரதிஷ்டா சம்ரோக்ஷண
# மஹாகும்பாபிஷேக பெருவிழா–10.02.2019

**அன்பான அடியார்களே !**

06.02.2019 புதன்கிழமை - மாலை 6.30 மணிக்கு வாஸ்துசாந்தி, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், கொடியேற்றம், கடஸ்தாபனம், யாகசாலை பிரவேசம்
- இரவு 7.30 மணிக்கு - நயனோன்மிலனம், தான்யாதிவாசம், ஜலாதிவாசம், சயனாரோகணம்
- இரவு 11.30 மணிக்கு - ஸ்தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம்

**09.02.2019 சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் 9 மணி வரை**
**"பால்காப்பு" பக்தர்கள் சாத்தலாம்.**

**மஹாகும்பாபிஷேகம்**
10.02.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிமுதல் 11.32 மணிக்குள் நடைபெறும்.

**வீதிஉலா**
இரவு 7.00 மணிக்கு விசேட பூசைகளுடன் ஆலயத்திலிருந்து ஆரம்பம்
மருதடி வீதி → றக்கா வீதி → இராசாவின் தோட்ட வீதி → ஸ்ரான்லி வீதி → அத்தியடி புதுவீதி → நாவலர் வீதி ஊடாக ஆலயம்



- 12 தினங்கள் மாலை 6.00 மணிக்கு மண்டலாபிஷேக பூசை இடம்பெறும்
- 20.02.2019 இரவு 7.00 மணிக்கு விசேட தேர்த்திருவிழா இடம்பெறும்.
- 21.02.2019 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்.

**அனைவரும் வருக ! பாபா அருள் பெறுக !**

**" ஈழத்து சீரடி சாயி மந்திர் "**

314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**தொடர்பு : 077 722 2568/ 077 481 5336**

(CS 23675)(4.17)

## மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

☆காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
☆காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
☆பெற்றோர் விருப்பமின்மையா?
☆கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
☆வேலைத்தளத்தில் பிரச்சினையா?
☆காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

- இரகசியம் பேணப்படும்.
- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வர முடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.
**0778 432 602 / 075 302 4239**
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.



## பணியாளர் தேவை

யாழ். இராமநாதன் வீதியில் இயங்கும் பிரபல
Guest House இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- சிட்டை எழுதுனர் Bill. Clerck (ஆண் / பெண்)
- அறைகள் பராமரிப்பாளர் Room Boy (ஆண் / பெண்)

நாளை (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

Millennium - Guest House & Restaurants
No.76/60, Ramanathan Road, (Campus Road)
Kaladdy - Jaffna. 077 601 6310, 077 243 1310


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேசசெயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.யாழினி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பரமேஸ்வரி தர்மராஜா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தரும் ஊழியர் நலன்புரிசங்கம், பிரதேசசெயலகம், வேலணை.

(CS 22478) (4.17)


## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.
257, பலாலி வீதி, கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.
021 222 9306/077 138 7596

## பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் வந்து வேலை செய்வதற்கு பணிப் பெண் உடனடியாக தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். **தொடர்பு - 076 564 6282**


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கிளாலியில் அமைந்துள்ள (எழுதுமட்டுவாள் புகையித நிலையத்திலிருந்து 3km உள்நோக்கி) பச்சிலைபள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 10 ஏக்கர் (160 பரப்பு) காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்.

**076 554 6586/077 416 5816**


## மரண அறிவித்தல்

# சின்னையா குற்றாலம்



பிறப்பு 05.01.1938 — இறப்பு 04.02.2019

நயினாதீவு, 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா குற்றாலம் 04.02.2019 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் ஐயாத்துரை - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தகுமாரி (ஓய்வுநிலை வைத்தியசாலை ஊழியர்) இன் பாசமிகு கணவரும் ஜெயகாந்தன் (சமுர்த்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், வேலணை), இளங்குமரன் (ஆசிரியர் யாழ் / இந்து மகளிர் கல்லூரி), விமலகாந்தன், ரஜிபன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சுபாசினி (சமுர்த்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), வாசுகி (ஆசிரியை - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), கஜேந்தினி, யாழினி (பொலிஸ் உத்தியோகத்தர் - பொலிஸ் நிலையம், கோப்பாய்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவகங்கை, மகாலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் திலகவதி, இராசரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களானசெல்லத்துரை, கமலாம்பிகை, முத்துக்குமாரு, பத்மாவதிமற்றும் தியாகராஜாவின் அன்பு மைத்துனரும், அருந்ததியின் சகலனும் நவீன், பிரேமினா, ஆர்த்திகன், கனோஜன், சாருஜன், சம்மியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நயினாதீவு, சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**1ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு. 077 932 6153**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 23136)(15.17)

## மரண அறிவித்தல்

# திருமதி மாணிக்கம் சுப்பையா



தோற்றம் 04.07.1937 — மறைவு 04.02.2019

துன்னாலை மேற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் - சுப்பையா (04.02.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதாரிணியம் - வேதாத்தை தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சுப்பையா (தட்டிவான்) வின் அன்பு மனைவியும் அருள்சோதி (லண்டன்), ஜெகசோதி (லண்டன்), சத்தியசோதி (கனடா), விமலசோதி (கனடா), தெய்வேந்திரசோதி (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும் பவானி (லண்டன்), மணிவண்ணன் (கனடா), காலஞ்சென்ற செந்தில்குமரன் (லண்டன்) மற்றும் ஜெயவதனி (லண்டன்), குமுதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அர்ச்சனா (லண்டன்), அர்ச்சுதன் (லண்டன்), கீர்தனா (லண்டன்), இலக்கியா (லண்டன்), சுபாங்கி (லண்டன்), சிவோன் (லண்டன்), மதுரா (கனடா), ஷாகரன் (கனடா), கவினா (கனடா), சாமளா (கனடா), லக்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகுபேர்த்தியும்எழில்நிலா (கனடா), அமிக்ஷா (லண்டன்), அஸ்வின் (லண்டன்) . அபிக்ஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் சிவபாதம் காலஞ்சென்றவர்களான இலட்சுமி, செல்லம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2019) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குலானை வீதி,**
**துன்னாலை மேற்கு, கரவெட்டி**

தகவல்: குடும்பத்தினர்.
**077 616 1899**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## முதலாம் ஆண்டு நினைவு தினமும் அழைப்பும்



**அமரர் சுப்பிரமணியம் பராசக்தி**

திதி:- 07.02.2019

கடந்த 19.01.2018 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் **அமரர் சுப்பிரமணியம் பராசக்தி** அவர்களின் ஓராண்டு நினைவு-தினம் நாளை (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## 2ஆம் ஆண்டு நினைவு தினம்



**திருமதி கௌரிமனோகரி பவளநாதன்**

திதி:- 06.02.2019

பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(CS 23691)(11.17)

## மரணஅறிவித்தல்

### Dr.வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்



உதிப்பு 02.11.1943 உதிர்வு 28.01.2019

கல்வயல் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட Dr.வேலுப்பிள்ளை சிவசுப் பிரமணியம் லண்டனில் 28.01.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான பண்டிதர் வேலுப்பிள்ளை சரஸ்வதி தம்பதியினரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற கனகசபை(ஆசிரியர் ) மற்றும் தையல்நாயகி(ஆசிரியை) ஆகி யோரின் அன்பு மருமகனும் Dr.சிவகாமசுந்தரி(பல் மருத்து வர்) யின் அன்புக் கணவரும் பாரிஸ்ரர் சரவணபவானந்தன் Dr.திருமுருகானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.சேராவின் அன்பு மாமனும் ஈஸ்வரியின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவகாம சுந்தரி, சிவயோகம், சிவஞானம், Dr.சிவபாதசுந்தரம்(பொறியியலாளர்), Dr.சிவகௌரி(பல் மருத்துவர்), காலஞ்சென்ற சிவலோகநாயகி மற்றும் Dr.சிவகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசலிங்கம், Dr.அரு ளானந்தம், Dr.மோகன்(பல் மருத்துவர்), சித்திராபதி(பொறியியலாளர்), ஶ்ரீகாந்தன், Dr.தேவகாந்தன் காலஞ்சென்ற பரிமளகாந்தன் மற்றும் பத் மாஷனி, Dr.சோதிநாயகி(பல் மருத்துவர்), சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராசலட்சுமி, தனலக் ஷ்மி, கமலநாயகி, இந்திராதேவி, பாலசுப்பிரமணியம், Dr.யோகேஸ்வரன்(பல் மருத்துவர்), குலேந்திரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.02.2019) வியாழக்கிழமை லண் டனில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


(IN 9297) (14,17)

தகவல்:
சகோதரி - சிவயோகம்

**021 227 0072**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## மரண அறிவித்தல்



### சிவஶ்ரீ சிவேந்திரசர்மா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், இருபாலை வீரகத்திப்பிள்ளையார் கோயில் முன்னாள்குருக்களும், கொழும்பைவதிவிடமாகவும்கொண்டசிவஶ்ரீசிவேந்திர சர்மா 04.02.2019 திங்கட்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசாமிஐயர் - சரஸ்வதி அம்மா தம்புதிகளின் மூன் றாவது புதல்வனும், காலஞ்சென்ற கிருஷ்ணய்யர் - கோமதியம்மாள் தம்பதிக ளின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புத் துணைவரும், குமரேசசர்மா, விலா சினி, அமிர்தபிரபா, காலஞ்சென்ற பரானந்தசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்மிர்திகாவின் அன்புத்தாத்தாவும், ஜோதீந்திரகுருக்கள், ரவீந்திரசர்மா, விஜயேந்திரசர்மா மற்றும் பவானி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்கிசை மகிந்தமலர்ச்சாலையில் நடைபெற்று கல்கிசை இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தகவல்: குடும்பத்தினர்.**

**மகன் - 077 375 3355**

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 12 . 1940



மறைவு 04 . 02 . 2019

### க.திருலோகச்சந்திரன்

(GEM BUSINESS)

சரசாலை மத்தி சரசாலையை பிறப்பிடமாகவும் நீர்வேலியைச் சேர்ந்த சிறிய தந்தை நன்னி (குழந்தையர்) சிறியதாய் (இளையபிள்ளை) ஆகியோருடன் திருமணமாகும் வரை வாழ்ந்து அதன்பின் பல ஆண்டுகள் உரும்பிராயில் வசித்து இறுதியாக கொழும்பு தெகிவளையில் வாழ்ந்துவரும் காலத்தில் (04.02.2019) திங்கட்கிழமை கந்தன் திருலோகச்சந்திரன் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - வள்ளி தம்பதிகளின் அன்பு மகனும் உரும்பி ராய் வடக்கைச்சேர்ந்த நிர்மலாதேவி (தேவி)யின் அன்புகணவரும்நேசன் (LONDON), தாசன் (LONDON), சுதக்ல்யாணி (LONDON), இரத்தினகல்யாணி (LONDON) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தம்பிநாதன் (LONDON), தவமோகன் (LONDON),காயத்திரி (LONDON), ஜெயரூபி (LONDON) ஆகியோரின் அன்பு மாமனாரும், உரும்பிராய் வடக்கை சேர்ந்த சின்னையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அக்ஷயா, அபிநயா, அனேஸ், ஆகாஷ், சதூஷன், சயீத், கிஷான், வினுஜா, கிர்ஷான் ஆகியேரின் அன்பு பேரனும், முருகேசு, தங்கம்மா, சீதேவி (சரசு), காலஞ்சென்ற கதிரவேலு, மகேஸ்வரி நவரட்ணம், காலஞ்சென்ற சறோசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம்,லீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நாளை(07.02.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணிவரை இல.14A யசோதரா மாவத்தை சர்ணங்கரா வீதி, தெகி வளையில் உள்ள அவரது இல்லத்தில் எல்லோரினதும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (07.02.2019) வியாழக்கிழமை காலை அன்னாரது பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அன்னாரது பூதவுடலுக்கான இறுதிக்கிரியை கள் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் கல்கிசை இந்துமயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


14 A, YASODHARA MAWATTA,
SARANANKARA ROAD, DEHIWALA.

தகவல்:
மகன்மார்

நேசன் (London) - 00447957177136, Sri Lanka - 076 719 6990
தாசன் (London) - 00447940560836, Home T.P 011 2373 5133
மைத்துனன் - சி.பாலசுப்ரமணியம் - 0763722041

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 15 . 01 . 1978



ஆண்டவன் அடியில் 03 . 02 . 2019

### நாகராசா ஜெயகரன் (ஜெயா)

*(Naga Borewell)*

சங்கானை தேவாலயவீதியைச் சேர்ந்த நாகராசா ஜெயகரன் (ஜெயா)03.02.2019 அன்று வவுனியாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கானை தேவாலயவீதியைச் சேர்ந்த காங்கேசு - இராசமுத்து தம்பதிகளின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவராசா மற்றும் ரேவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் தயாளினியின் அன்புக் கணவரும் பிரவீன், நேத்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன்(அமெரிக்கா), கவிதா(லண்டன்), பிரதீபன்(லண்டன்), கல்பனா(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லிசா, அரவிந்த், கீர்த்தனா, நிர்மலராஜ், தாகினி, பகீரதன்(ஜேர்மனி), கமலன்(விளையாட்டு அதிகாரி), நிமலன் ஆகியோரின் மைத்துனரும் நிவேதா, அஸ்வின், விதுசக்தி, விசாகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2019) புதன்கிழமை 3 ஆம் ஒழுங்கை பண்டாரிக்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3 ஆம் ஒழுங்கை,
பண்டாரிக்குளம், வவுனியா.

(CS 00469) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

**077 613 9000**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## 20ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 08 10 1925

இறப்பு 19 01 1999

### ஸ்ரீமான் செல்லப்பா கனகசபை

[ஸ்தாபகர் -
கணேசன் ஸ்ரோர்ஸ், சிவகணேசன் ஸ்ரோர்ஸ்]

திதி : பூர்வபக்க துதியை (06.02.2019)

அன்பினிலே சிறந்தவராய் மண்ணில் உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாச நிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
இருபது ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

115, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால்
துயருறும் பிள்ளைகள்

## வேலையாள்கள் தேவை

மாதகலில் உள்ள கோழிப் பண்ணையில் வேலை செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.

**தொடர்பு - 077 271 8149**

## பெயர்மாற்றம்

தாவடி கொக்குவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **செந்தமுர் செல்வி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **செந்தமிழ் செல்வி** எனப் பெயர்மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**- செந்தமிழ் செல்வி -**

CS/23129(11.17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி கணேசன்

**(வேவி அக்கா)**




இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கணேசன் நேற்று (05.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளையின் அன்பு மகளும்காலஞ்சென்றவர்களானபொன்னம்பலம் - கதிராசிப்பிள்ளையின் மருமகளும் காலஞ்சென்ற கணேசனின் அன்பு மனைவியும் காஞ்சனமாலா, அருந்ததி, தமயந்தி, சகுந்தலா, சாவித்திரி, நளாயினி, ஆகியோரின் அன்பு தாயாரும் வன்மிகலிங்கம், கிருஷ்ணபிள்ளை, திருவள்ளுவர், காலஞ்சென்ற சிவானந்தர் மற்றும் சச்சிதானந்தமூர்த்தி, நிரஞ்சன் ஆகியோரின் மாமியாரும் தனலட்சுமி, காலஞ்சென்றதனேஸ்வரிமற்றும்நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்றஜெயரட்ணம், மற்றும் பேரின்பநாயகி, காலஞ்சென்ற குணசேகரம் ஆகியோரின் அன்பு சகோதரியும் கார்த்திகா, காண்டீபன், காஞ்சநேகா, மதுராங்கி, அபிராமி, கனுஜா, திவ்யா, தர்சிகா, கஜவதனன், விதுசன், அர்ச்சனா, சந்தோஷ், நிறோஷ் ஆகியோரின் பேர்த்தியும் அபிஷேக், நயன்திஷா, மிகன், மதுரவாணி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**131/4, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்
0212226537
கஜன் (பேரன்) - 0787192138**



பிறப்பு 09 . 02 . 1955

இறப்பு 04 . 02 . 2019

### தம்பு சந்திரசேகரராஜா *(இந்திரன்)*

சிறுப்பிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சந்திரசேகரராஜா (இந்திரன்) கடந்த (04.02.2019) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பறுவதம் தம்பதிகளின் பாசமிகு மகனும் பொன்னம்பலம் - மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு மருமகனும் சிவசோதிமலரின் அன்புக் கணவரும் கபிலன் (ஜேர்மனி), பிரணவன் (கொழும்பு), மாயவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் தியாகராஜா (சுவிஸ்), செல்வராஜா (சுவிஸ்), பரஞ்சோதிராஜா (சுவிஸ்), சின்னராஜா (மக்கள் வங்கி, கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சிறுப்பிட்டி கிழக்கு அரசன் திடலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**சிறுப்பிட்டி கிழக்கு
(அரசன் திடல்),
நீர்வேலி.**

***சகோதரர்கள்*** **தம்பு சின்னராஜா - 077 738 2071,**
**தம்பு பரஞ்சோதிராஜா - 076 233 5894,**
***மகன்*** **- சந்திரசேகரராஜா பிரணவன் - 077 950 3389**

(CS 23692/15/17)

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - சபைநிதி

01. வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் உள்ளூர் அதிகார பெறுகைச் சபை குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த பெறுநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட உழவு இயந்திர பெட்டி கொள்வனவிற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) (தொலைபேசி இல – 021 2241130, 021 2243688)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை 07.02.2019 திகதி தொடக்கம் 21.02.2019ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)** என்னும் முகவரியிலிருந்து 07.02.2019 ஆம் திகதியில் இருந்து 21.02.2019 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 இனை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
05. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)** என்னும் முகவரிக்கு 21.02.2019 ஆம் திகதிமாலை 14.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது 22.02.2019ஆம் திகதி 14.30 மணிக்கு வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
06. உழவு இயந்திரபெட்டி கொள்வனவிற்கான கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 நாள்களுக்கு (12.04.2019 வரை) செல்லுபடியாகும்.
07. கேள்விதொடர்பானமுன் கேள்விச் சபைக் கூட்டம் **தலைவர்,வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)** என்னும் முகவரியில் 14.02.2019ஆம் திகதி 14.30 மணிக்கு நடைபெறும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது வங்கிப் பிணைமுறியாக ரூபா 20,000.00 சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கேள்வி பிணை வைப்பு செல்லுபடியாகும் காலம் 10.05.2019 ஆகும்.
09. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

திரு.சோ.சுகிர்தன்,
தலைவர்,
உள்ளூர் அதிகாரபெறுகைச் சபை குழு,
வலிவடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
06.02.2019

**Green Life Real Estate Agent & Construction**

* வீடு காணி விலைக்கு தேவை
* மிகவும் தரமான முறையில் தயாரிக்கப்பட்ட கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு

திரு.சண்
T.P 077 555 9028 WWW.greenlifeinternational.com
G.P.S Road, Kalviankadu, Jaffna

## மரணஅறிவித்தல்



தோற்றம் 27 . 03 . 1953 — மறைவு 04 . 02 . 2019

### நடராஜபிள்ளை குணசேகரம் (அப்பன்)

*(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் ப.நோ.கூட்டுறவு சங்கம், நீர்வேலி)*

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜபிள்ளை குணசேகரம் (அப்பன்) 04.02.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜபிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் ஞானாம்பிகை தம்பதிகளின் மருமகனும் கலாமதியின் அன்புக் கணவரும் கோபிதா (பிரான்ஸ்), பார்த்தீபன்(பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும் சுதர்சன் (பிரான்ஸ்), கோபிகா ஆகியோரின் மாமனாரும் இராஜசேகரம், நிர்மலா தேவி, லீலாவதி, சுசிலாதேவி, வாசுகி(கனடா) ஆகியோரின் சகோதரரும் கருணாநிதி(சுவிஸ்), மனோகரன்(பிரான்ஸ்), வசீகரன்(சுவிஸ்), பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்குவேலி காட்டுப்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**அன்னை இல்லம்**
**சங்குவேலி வடக்கு,**
**மானிப்பாய்.**

(CS 23130) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 225 6351**

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் அசோக்குமார்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி நவக்கிரி தோப்பை புகுந்த இடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் அசோக்குமார் 03.02.2019 ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - தவமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானகாந்தியின் அன்புக் கணவரும், அஜந்தன், பரிஸிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரோகினி (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), சுபாஜினி (பிரான்ஸ்), மாலினி (மாவட்ட செயலகம் - வவுனியா), இதயகுமார் (கனடா), வினோதகுமார் (தொழில் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரச்சந்திரம், ராதா, சிவகுமார், கிருஸ்ணாந்தன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), அருணா, நிந்துஜா (காணி மாவட்ட பதிவகம் - யாழ்ப்பாணம்), கேதீஸ்வரசுதன் - சிவாஜினி, ரவிச்சந்திரன் - ரஜீவி, விமலராஜா - கஸ்தூரி, பிரியானி - ஜனகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.02.2019 வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2981, கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**நந்தன் - 033 609 785 713**
**வினோ (மாலா) - 077 716 9060** (cs 23125) (13.17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 09 . 1932 — இறப்பு 04 . 02 . 2019

### நாகலிங்கம் இராசு

*(முன்னாள் சந்திரசேகர பிள்ளையார் ஆலய பரிபாலன சபை தலைவர்)*

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசு 04.02.2019 அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுமேந்திரன் (ஜேர்மனி) மற்றும் கெங்காதரன் (பிரான்ஸ்), சிவபதன் (நோர்வே), சபேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நவறஞ்சிதமலர், சிவநாகேஸ்வரி, ரஜிதா, சறோஜினி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, ஐயாத்துரை மற்றும் சிவயோகம், சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிந்துஜா, பிரசன்ஜா, லோசனா, கஜானா, திசானி, அபிசன், தீபிகா, மிதுசன், கேஸ்விகா, யதுஸ், சர்மிலா, அகிலன், ஜனனி, கிசாளினி ஆகியோரின் அன்பு பேரனும், இலியாஸின் அன்பு பூட்டனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், சிவசம்பு, சிவபாக்கியம், சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியவில் துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**262/1, கொழும்புத்துறை வீதி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 515 7786**

## மரண அறிவித்தல்



### கனகசபை செல்வராசா

தெடுத்தனை கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் அத்தாய் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை செல்வராசா நேற்று (05.02.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் தவதேவியின் அன்புக் கணவரும் மிதுலா (ஆஸ்திரேலியா), பிரதீபா, அனுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூங்கழலோன், தீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிஷா, லக்சனியா ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, சிவராசா மற்றும் யோகராசா, தங்கராசா, தவராசா, யோகராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019), வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**0779587281** (CS 938/15/17)

## மரண அறிவித்தல்

### திருமதி தில்லைநாயகி கந்தசாமி



தோற்றம் 05.05.1947 — மறைவு 01.02.2019

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை மற்றும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாயகி கந்தசாமி 01.02.2019 வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசாமி - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவநாயகி மற்றும் தவநாயகி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), சோதிநாயகி, நயனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லலிதசொரூபினி, சொரூபன், கபிலசொரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீபராஜ், மச்செயந்தி, யமினி பிரேமகாந் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சிவபாலன், இராசலிங்கம், திருநாவுக்கரசு மற்றும் ஜெகதீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மனோன்மணி (கனடா), பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகலியும் இன்மொழியாள், கனற்கோ, அடற்கோ ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் கரிகாலன், நாயகி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் சுகர்ணியா, சிவாஞ்சலி, சாரங்கி, சாரமன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் லண்டனில் உள்ள Hendon Crematorium இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 23695/15/17)

**தகவல்: குடும்பத்தினர்.**

## மைத்திரிபாலவின்...

அரச தலைவர் மைத்திரிபால தலைமையில் இன்று மு.ப. 10 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் வடக்கு மாகாணத்துக்கான கிராமசக்தி மக்கள் இயக்க செயற்குழுக் கூட்டமும், காலை 11.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அச்சுவேலி தோப்பு அருள்நந்தி பாடசாலைக்கு அருகாமையில் நடைபெறவிருந்த கிராமசக்தி மக்கள் இயக்கம் தொடர்பான மக்கள் சந்திப்பும் பிற்போடப் பட்டுள்ளது.

அவரது பயணம் ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படாதபோதும், சுகவீனம் காரணமாகவே அவரது பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஒ.5,26,106)

## புதிய அரசமைப்பு...

என்று அவர்கள் அறிந்துள்ளனர். புதிய அரசமைப்பு என்பது எமது மக்களின் கழுத்தில் போடப்படும் இறுதித் தூக்குக் கயிறாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான "வியத்கம" அமைப்பு. இந்த அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் மூத்த சட்டத்தரணியும், திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளருமான ராஜ குணரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு இரு பிரதான சிக்கல்களைச் சந்தித்துள்ளது. பொருளாதாரப் பிரச்சினைகளைச் சந்தித்துள்ள அதேநேரம் புதிய அரசமைப்பு மற்றும் நாட்டின் நிலைத்தன்மை தொடர்பான பிரச்சினையும் பூதாகரமானதாக மாற்றம் பெற்றுள்ளது. இதுவரை அரசமைப்பில் 19 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றில் 18 திருத்தங்களை ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டு வந்தது. இந்தத் திருத்தங்களில் 13 மற்றும் 19ஆவது திருத்தங்கள் பாரதூரமானவை. தற்போது கொண்டுவர முயற்சிக்கும் 20 ஆவது திருத்தம் மிக ஆபத்தானதாகும்.

13ஆவது திருத்தத்தில் மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டு அவற்றுக்கெனத் தனியான முதலமைச்சர், ஆளுநர் நியமிக்கப்பட்டு ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டபோதும், இந்த முறைமை நாட்டின் சொத்துக்களை வீணடிக்கும் ஒரு முறைமையாக உள்ளது.

19ஆவது திருத்தத்தில் அரச தலைவரின் அதிகாரங்களைக் குறைக்கும் சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது கொண்டுவர முயற்சிக்கும் 20ஆவது திருத்தத்தின் ஊடாக வெளிநாடுகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைக்கேற்ப நாட்டைப் பிரிக்கும் நோக்கமே நிறைவேறும். நாட்டுக்குப் புதிய அரசமைப்புத் தேவை எனப் பொதுமக்கள் எவரும் கோராத, வீதியில் இறங்கிப் போராடாத நிலையில் எதற்காகப் புதிய அரசமைப்பைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர்? - என்றார். (எ-61)

## சம்பந்தனுக்கு...

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா ஜவரோதயம் சம்பந்தன் நேற்றுத் தனது 86 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

அவருக்கு நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட முக்கிய அரசியல் பிரமுகர்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும் தொலைபேசி மூலம் வாழ்த்துக்களைத்தெரிவித்தனர்.

"எனக்கு அழைப்பை ஏற்படுத்திய அரசியல் பிரமுகர்களும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். சமகால அரசியல் விடயங்கள் தொடர்பிலும் அவர்கள் கலந்துரையாடினார்கள்" என்று இரா. சம்பந்தன் தெரிவித்தார். (எ-22)

## ரணில் அரசின்...

வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று தமிழ்ப் பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பொறுப்பாளர்கள் மகிந்தவிடம் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்காத வரவு - செலவுத் திட்டமாக இருக்குமாக இருந்தால் நிச்சயம் அதனை எதிர்ப்போம். இருப்பினும், எனது இந்தியப் பயணத்துக்கும் ஆட்சிக் கவிழ்ப்புக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

**சம்பளப் பிரச்சினை**

தொழிற்சங்கங்கள் என்னுடன் பேசியபோது 1000 ரூபா மொத்த நாள்ச் சம்பளத்தையே முன்வைத்தன. 1000 ரூபா அடிப்படை நாள்ச் சம்பளத்தை அந்தச் தொழிற்சங்கங்கள் முன்வைக்கவில்லை. இது தொடர்பில் இரண்டு தடவைகள் தொழிற்சங்கங்களுடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தேன். 700 ரூபா அடிப்படை நாள்ச் சம்பளத்தை வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டிருந்தது. சில தோட்டங்களில் நாள்ச் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, தோட்டத்தொழிலாளர் ஒருவர் வேலைக்கு வந்தால் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்குமாறு நான் கோரினேன்.

**சார்ள்ஸின் பதவி நீக்கம்**

சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சார்ள்ஸ் சிறந்த அரச அதிகாரி. போர்க் காலத்திலும் அவர் அரச சேவையில் இருந்துள்ளார். மேற்படி பதவியிலிருந்து அவர் நீக்கப்படக்கூடாது. நிதி அமைச்சின் முடிவு தவறாகும்.

**பீல்ட் மார்சல்**

போர்க் காலத்தில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தமைக்காக வழங்கப்படும் உயர் பதவியான பீல்ட் மார்சல் பதவியை வகிப்பவர் அரசியலில் ஈடுபடக்கூடாது. பீல்ட் மார்சல் என்ற பதவி படைத்துறையில் மிகவும் உயர்ந்த பதவி.

**வேட்பாளர் யார்?**

அரச தலைவர் வேட்பாளருக்கு தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, சமல் ராஜபக்ச, மற்றும் தினேஸ் குணவர்தன ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

அரச தலைவர் வேட்பாளருக்கு பிரேரிக்கப்பட்ட பெயர்களில் வெற்றிபெறக்கூடிய ஒருவரை உரிய நேரத்தில் தெரிவு செய்வோம். மாகாண சபைத் தேர்தல்தான் முதலில் நடைபெறவுள்ளது. அரச தலைவர் தேர்தல் விவகாரம் இப்போதைக்கு அவசியமில்லை. அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும். நான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் உறுப்பினர் நிலையை ஏற்றுக்கொள்ளவில்லை. விண்ணப்பப் படிவத்தை மாத்திரமே கையளித்தேன் - என்றார்.

**அழையாவிருந்தாளி**

அதேவேளை, மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன் அலோசியஸ், தனது இளைய மகனின் திருமணத்துக்கு வந்தமை தனக்குத் தெரியாது எனவும், அவருக்குத் தான் அழைப்பிதழ் வழங்கவில்லை எனவும் ஊடகவியலாளரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது மகிந்த தெரிவித்தார். (ஒ.5,22)

## பஸ் நிலையத்தில்...

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்துறைக்குப் பயணிப்பதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்தில் பெண் ஒருவர் அமர்ந்திருந்துள்ளார். பேருந்துக்குள் ஏறிய இளைஞன், பெண்ணின் தாலிக் கொடியை அறுத்துள்ளார். அந்தப் பெண் கூக்குரல் எழுப்பவே இளைஞனை பொதுமக்கள், முச்சக்கரவண்டிச் சாரதிகள் எனப் பலரும் விரட்டினர். வெலிங்டன் சந்திக்கு அருகில் வைத்து இளைஞனை மடக்கிப் பிடித்த பொதுமக்கள், யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்துக்கு அவரைக் கொண்டு வந்து கட்டி வைத்தனர். பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ஒ.5,8,105)

## கள்ள நோட்டு,...

என்ற குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வல்வெட்டித்துறையிலேயே மூன்று பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கரணவாயைச் சேர்ந்தவர் என்றும், ஏனைய இருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

போலி நாணயத் தாள்களுடன் கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளார் என்றும், ஏனைய இருவரும் பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-21,26)

## மின்கட்டணத்தை...

தெரிவித்தார். மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன என்று பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை உண்மைக்குப் புறம்பானவையாகும். மின் உற்பத்திச் செலவு ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் வேறுபட்டே காணப்படும். அதற்கேற்ப மின் கட்டணங்களும் வேறுபடும்.

மின் கட்டணத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளது என்றால் நாம் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். பங்களாதேஷ், மாலைதீவு போன்ற நாடுகளின் உற்பத்திச் செலவுகள் எமது மின் உற்பத்திச் செலவின் 50 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளன. அவற்றைப் போன்று நாமும் மின் உற்பத்திச் செலவைக் குறைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (எ-31)

## கொல்லப்பட்ட...

நீதிவான் பி.போல் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. வழக்குத் தொடுநர் சார்பாக அரச சட்டவாதி மாலினி விக்னேஸ்வரன் மன்றில் முற்பட்டிருந்தார்.

நீதிமன்றில் 5 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

சாட்சிகள், "யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் குறித்த இரண்டு மாணவர்களும் உந்துருளியில் பயணித்தனர். அவர்கள் மது போதையில் இருக்கவில்லை. இறந்த மாணவர்கள் முதலில் விபத்தில் இறந்தனர் என்றே கூறப்பட்டபோதும், அவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர் என்று நாம் மருத்துவ அறிக்கை ஊடாக அறிந்தோம்" என்று சாட்சியமளித்தனர்.

இறந்த மாணவர்களில் ஒரு மாணவனின் தந்தையும் சாட்சியாக அழைக்கப்பட்டிருந்தார். அவரது சாட்சியத்தை மன்று பிறிதொரு தவணைக்குத் தள்ளிப்போடப்பட்டது. மேலதிக சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வழக்கு எதிர் வரும் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குறித்த மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் ஐந்து பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுப்பிரிவினர் விசாரணை நடத்திவருகின்றனர். அவர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மூவர் வழக்கிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டு அரச சாட்சிகளாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மிகுதி இரு பொலிஸாருக்கும் எதிராகவே கொலைக் குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-8)

## தமிழக...

பட்ட நான்கு மீனவர்களும் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றசாட்டில் காங்கேசன்துறை கடற்படையினாரல் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களையும் யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டனர். வழக்கு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நீதிவான் ஆனந்தராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது நான்கு மீனவர்களையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஒ.5,37)

## ரணிலை...

ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பொறுப்பாளர்களை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, கொழும்பு விஜயராம மாவத்தையிலுள்ள தனது இல்லத்தில் நேற்றுக் காலை சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஆட்சியின்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று, செனட் சபையை உருவாக்குவதற்கு யோசனை முன்வைத்திருந்தோம். அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் அரசியல் தீர்வை எட்டியிருக்கலாம்.

ஆனால், தீர்வை நோக்கிப் பயணிப்பதற்குரிய அக்கறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருக்கவில்லை. பேச்சு மேசையில் வைத்து காலையில் ஒரு விடயத்தையும், மாலையில் வேறொரு விடயத்தையும் கூறி வந்தனர். ரணில் ஆட்சிக்கு வந்தால் தாம் கோருவதை அவர் தருவார் என்பதே எதிர்பார்ப்பாக இருந்தது. என்னுடன் இருந்த பகைமை காரணமாக ரணிலிடமிருந்து தீர்வைப்பெறவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பினர். அதனால் பேச்சுகளைக் குழப்பியடித்தனர்.

ஆனால், இன்று என்ன நடக்கின்றது? பாம்பையும் தடியையும் காட்டிக் கொண்டு தான் விரதம் என ரணில் ஒதுங்கி நிற்கின்றார். ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து தீர்வைப் பெற முயன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று நட்டாற்றில் கைவிடப்பட்டுள்ளனர். நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் கீழ்மட்டத்திலிருந்து சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்வு முன்வைக்கப்படும். தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவோம். அவர்கள் அதிலிருந்து விலகிச் சென்றால், தமிழ் மக்களுடன் நேரடியாகப் பேசுவோம், தீர்வுத் திட்டத்தை முன்வைப்போம்' - என்றார்.

'இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறானதாக இருக்கும்?' என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், சகல தரப்பினருடனும் நடத்தப்படும் பேச்சு மூலம் அதற்கான இணக்கப்பாடு எட்டப்படும்' என்று குறிப்பிட்டார்.

'புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையையும், நிபுணர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் உத்தேச வரைவுத் திட்டத்தையும் ஏன் எதிர்க்கிறீர்கள்' என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது, அரசமைப்பை பொறுத்தவரையில் அது தீர்க்கமான கலந்துரையாடல்களின் மூலம் கொண்டுவரப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் நினைப்பதைப் 'போன்று அவசரமாக அதனைக் கொண்டு வரமுடியாது. - என்றார்.

**ஐ.நா. விவகாரம்**

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் சில நாடுகள் முன்வைத்த தீர்மானத்துக்கு எமது நாட்டு அரசே இணை அனுசரணை வழங்கியது. இது காட்டிக்கொடுக்கும் செயலாகும். அதுமட்டுமல்ல உள்நாட்டு வளங்களும் ரணில் அரசால் இன்று வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. நான் எந்தவொரு நாட்டுக்கும் சார்பான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. இலங்கைக்கு நன்மை பயக்கக்கூடிய கொள்கையையே கடைப்பிடித்தேன். நாட்டின் அபிவிருத்திக்காகவே வெளிநாடுகளிலிருந்து கடன்களைப் பெற்றேன். கடன்கள் மூலம் செய்யப்பட்ட அபிவிருத்திகள் இன்று கண்களுக்குத் தெரிகின்றன. ஆனால், இந்த அரசு எமது ஆட்சியை விடவும் அதிக கடன்களைப் பெற்றுள்ளது. நடந்துள்ள அபிவிருத்திதான் என்ன?

வடக்கில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. விவசாயிகளுக்கு உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த முடியாதுள்ளது. ஏன் குடிப்பதற்கு சுத்தமான குடிதண்ணீர்கூட இல்லை. புதிதாக தொழிற்சாலைகள் உருவாக்கப்படவில்லை. வடக்கு மக்களுக்கு அரசு என்ன செய்கின்றது?

இன்னும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. அதனை உடன் நடத்துமாறு வடக்கு மாகாண சபை வலியுறுத்துகின்றதா? இல்லை. மாகாண சபைத் தேர்தல்தான் முதலில் நடத்தப்படவேண்டும்.

இலங்கை சிறிய நாடாகும். இங்கு தனிராஜ்ஜியம் குறித்து கதைப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால், முதல்வரை கும்பிட்டுக்கொண்டிருக்க வேண்டிய நிலை உருவாகும்.

நாம் மீண்டும் ஆட்சியமைக்க தமிழ் மக்களின் வாக்குகள் அவசியமில்லை என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் குறிப்பிடவில்லை.

நாம் ஆட்சியில் இருந்தபோது 12 ஆயிரத்து 500 முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வு வழங்கி விடுதலை செய்தோம். படையினர் வசமிருந்த பல ஏக்கர் காணிகளை விடுவித்தோம். நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் அரசியல் கைதிகளில் பாரிய குற்றச்சாட்டுசுமத்தப்பட்டவர்களுக்கு நீதிமன்றத் தண்டனை வழங்கப்பட்டு ஏனையவர்கள் விடுவிக்கப்படுவார்கள். காணிகளும் துரிதகதியில் விடுவிக்கப்படும் - என்றார். (ஒ.5,22)

## கூட்டு அரசு...

கூட்டு அரசு அமைப்பது என்பது அரசமைப்புக்கு முரணானது.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் முன்னணியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது அந்தக் கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மாகாண சபைத் தேர்தலை நடந்த அரசு இது வரை எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர்த்து ஏனைய கட்சிகள் மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறையில் நடத்த இணக்கம் தெரிவித்துள்ளனர். தோல்வி தொடர்பான அச்சத்தாலேயே அரசு தேர்தலைப் பிற்போடுகின்றது.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி கூட்டு அரசு அமைக்க எடுத்துள்ள தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசு அமைப்பது சாத்தியமற்றது. ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ள இந்தத் தீர்மானம் மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு. அமைச்சுப் பதவியால் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளுக்குத் தீர்வு காணவே கூட்டு அரசு என்ற உபாயத்தைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள பிரேரணையை சபாநாயகர் இரத்துச் செய்ய வேண்டும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தேசிய அரசு உருவாக்கும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அரசமைப்புக்கு முரணான செயற்பாட்டுக்கு அரச தலைவர் ஒருபோதும் துணைபோகக்கூடாது. நாடு தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைக்குத் தேர்தல் ஒன்றின் மூலமே தீர்வு காண முடியும் - என்றார். (எ-61)

## இலங்கை...

வெளியிடப்பட்ட நாணய மாற்று வீதத்துக்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 178.83 ரூபாவாகப் பதிவாகி இருந்தது.

கடந்த வருடம் இலங்கை ரூபாவின் பெறுமதி பெரும் வீழ்ச்சியைச் சந்தித்திருந்தது. இதனால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று பொருளியல் துறைசார் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்தநிலையில், இந்த வருட ஆரம்பம் முதல் இலங்கை ரூபாவின் பெருமதி கணிசமான வளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-21)

## பொறுப்புக்கூறலில்...

பசெலெட், ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் மற்றும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போதே, இலங்கை அரசு பொறுப்புக்கூறல் செயல்முறைகளில் சில முன்னேற்றங்களையே எட்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறலில் இலங்கை மெதுவாகவே செயற்படுவதாகவும், சீரான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

கீர்த்தி @kirithika18



காலம் பதில் சொல்லும் என பலர்
கூறுவர் ஆனால்
காலம் எதற்கும் பதில் சொல்வதில்லை
அது கடந்து சென்று கொண்டே
இருக்கும்

நடை பாதை@Sivanantham57

நான் யாரிடம் சொல்லி அழுவேன்
நான் வாய் பேசாத ஊமை தானே..!!

நான் என்ன தவறு செய்தேன் என்று
தெரியவில்லை..!!
அழுகை வரவில்லை..!!
பாரம் தெரியவில்லை..!!
வலி தெரியவில்லை..!!

என்னை அடித்தவர்களின் கை தெரியவில்லை..!!
என் கையால் என் பிள்ளையை அணைத்து
கொண்டேன்..!!

மிருகம்..??



## மரண அறிவித்தல்

### செபஸ்ரியாம்பிள்ளை அலெக்ஸ்



பிறப்பு 02.06.1959 இறப்பு 05.02.2019

செபஸ்ரியாம்பிள்ளை அலெக்ஸ் நேற்று (05.02.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அமரசிங்கம் - லூர்துமேரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜீவறஞ்சினியின் அன்புக் கணவரும் பானுஜா, சரணியா, ஆன்சர்மியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெறாட் (ஜேர்மனி), சில்வஸ்ராார் டொறின் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (06.02.2019) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு நவாலி சென். பீற்றேஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.




**மேடம்:** இஷ்டதெய்வ அனுகூலத்தினால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு உதவும். பணவரவு சராசரி அளவில் கிடைக்கும்.

**மிதுனம்:** பணி நிறைவேறுவதில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். சொத்து, ஆவணம் பிறர் பொறுப்பில் தர வேண்டாம்.

**கடகம்:** எந்த செயலையும் சவாலாக அணுகுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். மேலதிக பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**சிங்கம்:** மனதில் சந்தோஷம் நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்கும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** இரக்க குணத்தை சிலர் ஏளனம் செய்வர். முக்கியமான பணி அதிக முயற்சியினால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** உறவினரின் மாறுபட்ட செயல் வியப்பை தரலாம். தொழில் வியாபாரத்தில் நிதான அணுகுமுறை நல்லது. பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும்.

**விருச்சிகம்:** மனதில் இருந்த தயக்கம் விலகும். செயல்களில் கூடுதல் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும்.

**தனுசு:** மனம் விரும்பாத நிகழ்ச்சியில் ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிபுரிவது அவசியம். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு வேண்டும்.

**மகரம்:** கருணை நிறைந்த மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகின்ற இடையூறு இஷ்ட தெய்வ அருளால் விலகும்.

**கும்பம்:** எவருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரம் தாமதகதியில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** பெரியவர்களின் வழிகாட்டுதல்களை பின்பற்றுவீர்கள். பொறுப்பான செயல் பாராட்டு பெறும். தொழிலில், உற்பத்தி விற்பனை செழித்து கூடுதல் பணவரவு கிடைக்கும்.

## இன்றைய உண்மைகள்

1. பக்கத்து வீட்டில் இருப்பவரிடம் முகம் கொடுத்து பேசுவதில்லை. ஆனால் பக்கத்துக் கிரகத்தில் மனிதன் வாழ வாய்ப்பிருக்கா? என்று ஆராய்ச்சி நடக்கிறது.

2.. கையில் விலை உயர்ந்த பெரிய கடிகாரம். ஆனால் அதில் மணி பார்ப்பதற்குக் கூட நேரம் இருப்பதில்லை.

3. ஊருக்கு வெளியில் பெரிய பங்களா. அதிலிருப்பதோ இரண்டே பேர்.

4. பட்டப்படிப்புகள் நிறைய... ஆனால் பொது அறிவும் உலக அறிவும் மிகக் குறைவு.

5. மருத்துவத்துறையில் மாபெரும் வளர்ச்சி. நோயாளிகளின் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகம்.

6. கை நிறைய சம்பளம். இருந்தாலும் வாய் நிறையச் சிரிப்பில்லை. மனம் நிறைய நிம்மதியில்லை.


7. அறிவான, புத்திசாலித்தனமான விவாதங்கள் அதிகம். உணர்வுப்பூர்வமான உரையாடல்களும் சின்ன சின்ன பாராட்டுகளும் குறைவு.

8. முகம் தெரிந்த நண்பர்களைவிட முகநூல் நண்பர்களே அதிகம்.

9. மனிதர்கள் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறனர். மனிதநேயம் ஆங்காங்கே சில இடங்களில் மட்டும் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி
### பரிமளகாந்தியம்மா பாலபத்மநாதக் குருக்கள்



குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் கெருடாவில் தொண்டைமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளகாந்தியம்மா பாலபத்மநாதக் குருக்கள் நேற்று (05.02.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் பாலபத்மநாதக் குருக்களின் அன்பு மனைவியும் தயாபரன் (ஆசிரியர் - யா/ நெல்லியடி மத்திய கல்லூரி), சியாமளா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவசாமி ஐயர் - ஞானாம்பிகை அம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவயோகநாயகி அம்மா - சிவகாமசுந்தரி அம்மா மற்றும் குஞ்சிதபாதக் குருக்கள் ஆகியோரின் மூத்த அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர் களான நித்தியானந்தக் குருக்கள், கிருஷ்னானந்த ஐயர், மற்றும் ஞானானந்தகுரு ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீசெந்தில்நாதன் ஐயர் (பிரான்ஸ் ), கலைவாணி (சமுர்த்தி வங்கி வல்வெட்டித்துறை ) ஆகியோரின் அன்பு மாமியும் அபினாஷ், அக்ஷதா, கிருஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.02.2019) மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
0779234541 குடும்பத்தினர்.

(CS 23136/15/17)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.6
நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை மாலை 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அணி மோதவுள்ளது.
மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஓ.23)

** ** **

100ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் தாச்சிப் போட்டித் தொடரில் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவலர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக
அணி மோதவுள்ளது.
தொடர்ந்து மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள்விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
(ஓ.23)



## விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், பெப்.6
யாழ்ப்பாணம், குருநகரில் நடந்த விபத்துச் சம்பவம் ஒன்றில் சிக்கி வடக்கு மாகாணக் கட்டடங்கள் திணைக்களப் பணியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள பொலிஸ் காவலரணுக்கு முன்பாக நேற்றுப் பகல் இந்த விபத்து நடந்துள்ளது. கட்டடங்கள் திணைக்களத்தின் பணியாளரான செபஸ்ரியாம்பிள்ளை அலெக்ஸ் என்பவரே உயிரிழந்துள்ளார். இரு உந்துருளிகள் மோதியே விபத்து நடந்தது என்று தெரிவிக்கப்பட்டது. விப்த்துத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-21.26)

# இலங்கை மோசமாக விளையாடுகின்றது

முரளிதரன் விமர்சனம்

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா அணிகளை விமர்சித்துள்ளார்.

ஆஸ்திரேலியா -இலங்கைக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. ஆஸ்திரேலியா அணி வெற்றி பெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதில் இலங்கை அணி மோசமான தோல்வியை சந்தித்தது குறித்து முரளிதரன் தெரிவிக்கையில்: “குசல் மெண்டிஸ் போன்ற இளம் வீரர்கள் அதிக திறமை பெற்றுள்ளனர். ஆனால் அவர்களால் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை. இது அவர்களின் துடுப்பாட்டம் மீதான அதிக நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

கடந்த 34 ஆண்டுகளாக இது தொடர்ந்த வண்ணம்தான் இருக்கிறது. இதில் எந்த முன்னேற்றமும் இல்லை. இது தான் தற்போதும் நிகழ்ந்துள் ளது. பன்னாட்டு போட்டிகளில் களமிறங்கும் போது என்ன செய்ய வேண்டும் என்ற திறன் இலங்கை அணியிடம் இருக்கவில்லை.

தற்போது இலங்கை மிகவும் மோசமாக விளையாடுகிறது. அதே போல் ஆஸ்திரேலியாவின் ஆட்டமும் முன்னர் போல் சிறப்பாக இல்லை. எனினும், ஆஸ்திரேலியாவை விட இலங்கை அணி மிகவும் மோசமாக விளையாடுகின்றது -என்றார்.

## கஞ்சாவுடன் கைதான இருவருக்கு மறியல்

சாவகச்சேரி, பெப்.6

வெற்றிலைக்கேணியில் நேற்றுமுன்தினம் உடமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் '48 மணி நேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்று அனுமதியளித்தது.

நேற்றுமுன்தினம் இரவு 77 கிலோ 340 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 48 மணி நேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்று அனுமதி வழங்கியது. (எ-9)


**வேலை வாய்ப்பு**

- கணினி ரைப்பிங்
- கணினி சார் அறிவுடையோர்

கொழும்பு பிறின்டேர்ஸ்
கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்
0212217030

**வேலையாள்கள் தேவை**

- விற்பனை உதவியாளர் (ஆண், பெண் இருபாலாரும்)
- கணக்காளர் (பெண்)

கரன் வோச் அன் றேடியோ
0212226807, 0703043633

**CANADA , USA**
**study & work visa**

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 077 791 1649
Office : 0113 020 892


## பாராட்டி வாழ்த்துகின்றோம்





**திருமதி.கேதினி கோகுலன்**
B.A(Hons),PGDE,MED

22.01.2019 செவ்வாய்க்கிழமையன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 34ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப் பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை திருமதி கேதினி கோகுலன் அவர்களை மேலும் உயர் சிறப்புக்கள் பெற்று வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.02.2019 இன்றுடன் ஓய்வு பெறும்

**யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய விவசாய பாடஆசிரியை**

**திருமதி இராஜேஸ்வரி தனபாலசிங்கம்**

*மணிவிழா நாயகியே*
*மகத்தான கல்விச்சேவை புரிந்தவரே*
*“ஏ” தரச் சித்தி பெற எம்மை உயர்த்தியவரே*
*மண்ணில் நல்ல வண்ணம் மாண்புடன் வாழவென*
*மனதார வாழ்த்துகின்றோம்.*

Congratulations

வாழ்த்துவோர்:

**மந்துவில் வடக்கு, கொடிகாமம்.**

**முன்னாள் மாணவிகள்: இ.வைஷ்ணவி, இ.சாம்பவி**

(CS 00549)(4,17)

## மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
## மணிவிழா வாழ்த்துக்கள்



**எமது வித்தியாலயத்தில் 09.05.2011 தொடக்கம் விவசாய பாட ஆசிரியராகக் கடமையாற்றி** மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி பாட வளர்ச்சிக்கும் வித்தியாலய வளர்ச்சிக்கும் பாடுபட்டு மாணவர்கள் மற்றும் வித்தியாலய சமூகத்தின் நன்மதிப்பினைப் பெற்று தனது **31** வருட சேவையிலிருந்து **இன்று (06.02.2019) ஓய்வுபெற்று நாளை (07.02.2019) வியாழக்கிழமை மணிவிழாக் காணும்**

Best Wishes

எம் மதிப்புக்குரிய ஆசிரியை

**திருமதி இராஜேஸ்வரி தனபாலசிங்கம்**
(Trained Teacher in Agriculture - SLTS -1

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலத்தில் மேன்மேலும் சிறப்புற்று வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
**யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்**



## மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தானம்

மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை ஸ்ரீ கண்ணகாதேவி தேவஸ்தான திருப்பணி வேலைகள் நிறைவடையாத காரணத்தினால் கும்பாபிஷேகத் திகதி பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும். ஆலய திருப்பணிக்கு நிதி வழங்குபவர்கள் கீழ்வரும் **இலங்கை வங்கி க/கு இல.82871878** இற்கு அனுப்பி வைக்கவும்.


**தொடர்புகளுக்கு:-**

**077 392 6313** செயலாளர்
**077 656 9940** தலைவர்

(NE/934)(11,17)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை முருகேசு



பிறப்பு 27.01.1926 இறப்பு 05.02.2019

ஊர்காவற்றுறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை முருகேசு நேற்று (05.02.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் லீலாவதி, கனகரத்தினம், காலஞ்சென்ற மோகன் மற்றும் ரேவதி, விஜயகுமார், ரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம், சியாமளா, ஸ்ரீதரன், லதா, ஜெயமதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம், சதாசிவம், நாகம்மா, கமலம், சோமசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவபாக்கியம் குருசாமி, சோமசுந்தரம் மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, அன்னம்மா, பூலோகம் மற்றும் முருகேசபிள்ளை பொன்னுச்சாமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆரூரன், காலஞ்சென்ற அஜந்தன் மற்றும் அரவிந்தன், அம்பிகன், ஆயிலியன், தனுஸ்காந்தன், விஸ்ணுகாந்தன், திவாகரன், திபோதனன், கோவிதன், விபிதா, விபிதன், றஜித், றபின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஸ் ரீபன், றொபின், ஷியனன், கவின், யூலியன், யூலியா, சோபியா, அதினா, ஈதன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல் வடக்கு,**
**ஊர்காவற்றுறை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 23696/15/17)

## மரண அறிவித்தல்

### கந்தையா ஆறுமுகம் (சின்னத்தம்பி)



நாகர்கோயில் தரவையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தார் வயல் இயக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் நேற்று (05.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியம் பாசமிகு கணவரும், தவராசாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் சங்கத்தார்வயல் ஆலங்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கத்தார் வயல்,**
**இயக்கச்சி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 430 3683**

# வலிகோனாவை வீழ்த்தி லிகனீஸ் அணி வெற்றி



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் லிகனீஸ் வெற்றி பெற்றது. வலிகோனாவை எதிர்த்து லிகனீஸ் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்த 36ஆவது நிமிடத்தில் லிகனீஸ் அணி வீரர் பிரீத் வைட் முதலாவது கோலைப் போட்டார். முதலா வது பாதி ஆட்டத்தில் லிகனீஸ் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந் தது. இரண்டாவது பாதி ஆட்டத்தின் 83 ஆவது நிமித்தில் வலிகோனா அணி வீரர் ஜெறிகா றிவீரா ஒரு கோலைப் போட இரு அணிகளும் 1:1 என்ற சமநிலையானதால் பரபரப்பு ஏற்பட்டது. இரு அணி வீரர்களும் ஏட்டிக்குப் போட்டியாக கோல் போடுவதற்காக எத்தணித்த வண்ணம் இருந்தனர். இறுதி நிமிடத்தில் லிகனீஸ் அணி வீரர் நேசியார் ஒரு கோலைப் போட 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது லிகனீஸ் அணி.


இலவச Dip-in-English மற்றும் Spoken English உடன் கூடிய 4 மாத

**IELTS**

Writting இற்கு தேவைப்படும் 16 வசன அமைப்புகள், செயற்பாட்டு அமைப்புகள், பிரயோகங்கள், இணைப்புசொற்கள், connectors, "என்று" அமைப்புகள், causative உட்பட அனைத்துவிடயங்களும் முழுமையாக கற்பிக்கப்படும்

எமது பயிற்சியில் இணையும் அனைவருக்கும் ஆங்கில மொழியறிவு பற்றிய மதிப்பீடுகளும் weakness, strength அடிப்படையில் பூரண ஆங்கிலப்பயிற்சியும் வழங்கப்படுவதால் உயர்ந்த பெறுபேறுகளுக்கான உத்தரவாதம்

09.02.2019 வரை பதிவுசெய்வோருக்கு 50 % கழிவுடன் 4 மாத பயிற்சிக்கட்டணம் 12000 மட்டுமே.

சனி, ஞாயிறு பிரிவுகள் : காலை 08.00 – 10.00 வரை
வாரநாள் பிரிவுகள் திங்கள் முதல் வியாழன் 09.00 – 12.00 வரை
பயிற்சி ஆரம்ப திகதி அலுவலகத்தில் பெறமுடியும்

SAAMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,
021 222 4282
077 621 4567



## காசி சீரடிபாபா யாத்திரை

**ஆரம்பம் 09.03.2019, நாட்கள் - 12, யாத்திரிகர் - 15**

**தரிசிக்குமிடங்கள்**

டெல்லி, அட்சயதாம், நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற், வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை. மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி, பிரேம்மந் திரம். அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம். புத்தகாய, புத்தாலயங்கள் காசி, விஸ்வநாதர், விசாலாட்சி, காளபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்.
மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம். சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம். திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங் கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்த மாடல். இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்). நவபாஷாணம், திருப்புலானி, உத்திரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

**1 நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்.**

**பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்.**

5 விமானப் பயணங்கள், 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களை கேட்டு பதிவு செய்யவும்.

**விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் / மகன் ராஜன்**
**59 - 3/6 செட்டியார் தெரு கொழும்பு - 11**
**T.P - 0777680102 / 0777362154**
**E-mail - Sriranganathan2601@gmail.com**
(C-5215)


## மரண அறிவித்தல்

# செல்லத்துரை மதனசுரேந்திரன்

(ஓய்வு பெற்ற சிறாப்பர்)



தோற்றம் 10.09.1939 மறைவு 05.02.2019

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மதனசுரேந்திரன் நேற்று (05.02.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சிவஞானம் தம்பதிகளின் மருமகனும் நாகேஸ்வரியின் (ஓய்வு பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை) அன்பு கணவரும் சுதாகரன் (லண்டன்), சுரேக்கா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாநிதி ஜெயசுகிர்தன் (விரிவுரையாளர் - கொழும்பு பல்கலைக்கழகம்) அவர்களின் மாமனாரும் மதுஷாலினி, அபூர்வா ஆகியோரின் அன்பு பேரனும் ஞானசிரோண்மணி (ஓய்வுநிலை ஆசிரியை), மனோரஞ்சிதம், சரோஜினிதேவி காலஞ்சென்ற இராசகுமாரன் மற்றும் உதயகுமாரன் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் சகோதரரும் சிவபாலசுந்தரம் (கனடா), காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் (கணக்காளர்), யோகேஸ்வரி, விஜயசுந்தரம் (தபாலதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2019) வியாழக்கிழமை அச்சுக்கூட ஒழுங்கை கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் (நாகஜோதி இல்லம்) ந.ப.12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்சுக்கூடவீதி, கொக்குவில் கிழக்கு**
**கொக்குவில்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 919
சீட்டிழுப்பு திகதி 2019.02.04 திங்கட்கிழமை
X 34 41 42 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,837,688/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

நியத ஜய
சீட்டிழுப்பு வாரம் : 743 வர்ணம் : ஆரஞ்சு
திகதி 2019.02.05
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
23 47 59 63 S
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 21,731,032/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05.02.2019 வெற்றி வாரம் 2450 வர்ணம் சிகப்பு
மகரம்
வெற்றி இலக்கங்கள் 11 25 28 58
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 9, 396, 356 /=
06.02.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 403
சீட்டிழுப்பு திகதி: 2019.02.05
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 112,393,638/-
T 41 48 62 64
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 517
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.02.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,198,780/-
வெற்றி இலக்கங்கள் 28 38 64 65 ஆங்கில எழுத்து T
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.